செந்தமிழ்ப் பொழில்

நான்காம் படிவம்

சிறப்புப் பகுதி

பொன்னு. ஆ. சத்தியசாட்சி, B.O.L.,
தமிழாசிரியர்,
ஆண்டர்சன் உயர்நிலைப் பள்ளி, காஞ்சிபுரம்.

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்

THE CHRISTIAN LITERATURE SOCIETY
(In association with the United Society for Christian Literature)
POST BOX 501, PARK TOWN, MADRAS-3
and at
MYSORE BANGALORE TIRUVALLA

S.B.
COPYRIGHT
First printed, 1955

முன்னுரை

'செந்தமிழ்ப் பொழில்' என்னும் தமிழ்ப்பாட வரிசையுள் இது நான்காம் படிவம் சிறப்புப் பகுதியினது. அரசியலார் விடுத்துள்ள புதிய பாடத் திட்டத்தின்படி இஃது அமைக்கப்பட்டுள்ளது. கவிதைகளும் கட்டுரைகளும் அரசியலார் திட்டமிட்டுள்ள அளவுக்கு அதிகமாகவே சேர்க்கப்பட்டுள்ளன. ஆசிரியர்கள், ஏற்குமளவுக்கு வேண்டும் வகையா னெல்லாம் ஆண்டுத்திட்டம் அமைத்துக் கோடற்குப் போதிய பாடங்கள் உள்ளன.

பொழிலின்கண் எவ்வாறு பசுமையும் இனிமையும் எழிலும் யாண்டும் தங்கியிருக்குமோ அவ்வாறே கருத்துக்கு நிழலும் எழிலும் வழங்கும் அருந்தமிழ்ச் செய்யுட்களும் அறிஞர் பலர் கட்டுரைகளும் இச் செந்தமிழ்ப் பொழிலின்கண் விளங்குகின்றன. நான்காம் படிவ மாணவர் திறனுக்கு ஏற்ப பாடங்கள் யாவும் அமைந்துள்ளன. இப்பாட நூல்வாயிலாக அருந்தமிழ் இலக்கியங்களுள் மாணவர் உள்ளம் பாய்ந் தோடும் என்பது என் நம்பிக்கை.

கவிதைகள் கட்டுரைகளுள் ஒவ்வொன்றற்கும் குறிப்புரைகளும், வினாக்களும், வேண்டுவனவற்றிற்குக் கட்டுரைப் பயிற்சிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. இவையன்றி, பொதுப் பகுதிக்கும் சிறப்புப் பகுதிக்கும் பொதுவான ஓர் அருஞ் சொல் அகராதி நூலினிறுதியில் சேர்க்கப்பட்டுள்ளது. மாணவர்தம் சொந்த முயற்சிக்கு ஆக்கம் தரும் எல்லா வழிகளும் திறந்துவிடப்பட்டுள்ளன.

இந்நூலுக்குக் கட்டுரைகளும் கவிதைகளும் வழங்கிய அறிஞர் பெருமக்களுக்கும் அவற்றின் உரிமையாளர்க்கும் என் உளமார்ந்த நன்றி செலுத்துகின்றேன். ஆசிரியர்கள் உரிமையாளர்கள் ஆகியவர்களின் பெயர்களைத் தகுந்த இடங்களில் காட்டியுள்ளேன்.

இந்நூலை அச்சிட்டு வெளியிடும் பணியினை ஏற்ற பழம்பெரும் பண்ணையாகிய கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்திற்கு யான் பெரிதும் கடப்பாடுடையேன்.

ஆசிரியர்களும் அரசியலாரும் ஆதரவு தருவார்களாக.

பொ. ஆ. ச.

கவிதைகள்

பக்கம்

I. அஞ்சலி

1—3. திருநாமப் பதிகம் :
எய்ச். ஏ. கிருஷ்ண பிள்ளை ... 1

4. சுகவாரி : தாயுமானவர் 2

II. பழஞ் செய்யுள்

புறநானூறு : 1. ஔவை 3

2. கபிலர் 4

III. இடைக்காலக் காவியங்கள்

1. மணிமேகலை : சாத்தனார் 6

2. கம்ப ராமாயணம் 11

3. திருத்தொண்டர் புராணம் :
சேக்கிழார் 21

4. தேம்பாவணி : வீரமா முனிவர் ... 28

IV. சிறு நூல்களும் பிறவும்

1. திருவாரூர் நான்மணி மாலை :
குமரகுருபரர் 33

2. வஞ்சப் புகழ்ச்சி :
வேதநாயக சாஸ்திரியார் 35

3. சிலேடை : காளமேகர் 36

4. மடக்கு ; எய்ச். ஏ. கிருஷ்ண பிள்ளை ... 36

5. யானைமறம் : 'முத்தொள்ளாயிரம்' ... 36

6. சீட்டுக் கவி:
சரவணப் பெருமாள் கவிராயர் ... 37

7. தமிழ்த்தாய் : பாரதியார் 37

உரைநடை

பக்கம்

1. இறையனார் அகப்பொருளுரை : 44
நக்கீரர்

2. உரைபெறு கட்டுரை : 46
இளங்கோ வடிகள்

3. வீணைக் கொடியோன் 47
ரா. பி. சேதுப் பிள்ளை

4. மூதின் மகளிர் : 52
ஜி. சுப்பிரமணிய பிள்ளை

5. தொல்காப்பியம் : 59
செல்லூர்க்கிழார்

6. கூழ்தேல் : 66
க. சி. கந்தையா பிள்ளை

7. கயிலாய வாயில் : 69
ம. வி. இராகவன்

8. கால்டுவெல் : 75
பி. பி. எஸ். இராமானுசாச்சாரியார்

9. செங்குட்டுவன் அரசியல் : 82
மு. இராகவ ஐயங்கார்

அருஞ்சொல் அகராதி—பொதுவும் சிறப்பும் 88

நன்றி

கட்டுரைகளையும் கவிதைகளையும் இந் நூலுள் கொள்ளுவதற்கு இசைவு வழங்கிய இவ் அன்பர்களுக்கு எம் உளமார்ந்த நன்றி.

1. சென்னை அரசியலார்.

2. திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை 1

3. பேராசிரியர் ரா. பி. சேதுப் பிள்ளை அவர்கள், B. A., B.L., பல்கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சித் துறை, சென்னை.

4. வித்துவான் ஜி. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், M.A., B.L., அண்ணாமலை நகர்.

5. பழனியப்பா பிரதர்ஸ், சேப்பாக்கம், சென்னை 5.

6. தி டீச்சர்ஸ் பப்ளிஷிங் ஹவுஸ், சென்னை.

7. பேராசிரியர் மு. இராகவையங்கார் அவர்கள், இராமநாதபுரம்.

8. வித்துவான் பி. பி. எஸ். இராமானுசாச்சாரியார் அவர்கள், காஞ்சிபுரம்.

கவிதைகள் : சிறப்புப் பகுதி

I

அஞ்சலி

திருநாமப் பதிகம்

[இப்பாக்களின் ஆசிரியர் மகா வித்துவான் எய்ச். ஏ. கிருஷ்ண பிள்ளையவர்கள் பாளையங்கோட்டையைச் சேர்ந்தவர்கள். இவர்கள் காலம் கி.பி. 1827 முதல் 1900 வரை. பிறவியில் விஷ்ணு சமயத்தினர். கிறிஸ்துவின் அன்பினால் தடுத்தாளப்பட்டுப் பின் கிறிஸ்து சமயத்தை ஏற்றுச் சிறந்த கிறிஸ்தவராக இவர்கள் வாழ்ந்தார்கள். இவர்கள் 'Pilgrim's Progress' என்ற ஓர் ஆங்கில நூலினை முதனூலாகக் கொண்டு இரட்சணிய யாத்திரிகம் என்னும் ஓர் அருமையான காவியம் இயற்றியுள்ளார்கள். இக் காவியத்தின் பெருமை கருதி இவரைக் கிறிஸ்தவக் கம்பர் என்று அறிஞர் பாராட்டுவர். இவ ரியற்றிய வேறு நூல்கள் இரட்சணிய சமய நிர்ணயம் (உரைநடை), இரட்சணியக் குறள், இரட்சணிய மனோகரம் என்பன.

பாடப் பகுதி இரட்சணிய யாத்திரிகத்திலுள்ள தேவாரப் பாக்களுள் மூன்று. 'சுமை நீங்கு படலம்' என்னும் படலத்துள் வருவன.]

1. மன்னுயிர்த் தொகுதியீ டேற வானினும்
இந்நிலத் தினும்பிறி திலையென் றேமறை
பன்னியேத் தெடுப்பது பாவ ஜீவருக்(கு)
இன்னமு தாயதி யேசு நாமமே!

2. தெருளெலாம் தனதெனும் தெய்வ மாமறைப்
பொருளெலாம் தனதெனப் பொலிந்தி லங்குவ(து);
அருளெலாம் அன்பெலாம் அறனெ லாம்வளர்த்(து,)
இருளெலாம் தொலைப்பதி யேசு நாமமே!

3. நன்னெறி புகுத்திடும் நவையின் நீக்கிடும்,
இன்னலை யகற்றிடும், இகல்செ குத்திடும்,
உன்னதத் துய்த்திடும் ஒருங்கு காத்திடும்,
எந்நலத் தையுந்தரும் யேசு நாமமே!

சுகவாரி

[இப்பாடலின் ஆசிரியர் தாயுமானவர் 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பெருந் துறவி யாவர். இவர்தம் ஊர் சோழநாட்டுத் திருமறைக்காடு என்பது. இவர் வேளாளர் மரபினர்; சிவ சமயத்தினர். இவர்தம் பாடல்கள் இதயத்தை உருக்கும் எளிய பாடல்கள்.]

4\. அரும்பொனே, மணியே, என்அன்பே, என்அன்பான
அறிவே, என்அறிவி லூறும்
ஆனந்த வெள்ளமே! என்றென்று பாடினேன்,
ஆடினேன், நாடிநாடி
விரும்பியே கூவினேன், உலறினேன், அலறி
மெய்சிலிர்த் திருகை கூப்பி [னேன்,
விண்மாரி எனவெனிரு கண்மாரி பெய்யவே
வேசற் றயர்ந்தே னியான்;
இரும்புநேர் நெஞ்சகக் கள்வனு னுலுமனை
இடைவிட் டுநின்ற துண்டோ?
என்றுநீ, அன்றுநான் உன்னடிமை யல்லவோ?
யாதேனு மறியா வெறுந்
துரும்பனேன் என்னினும் கைவிடுதல் நீதியோ?
தொண்டரொடு கூட்டு கண்டாய்!
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மே,பரஞ்
சோதியே, சுகவாரியே!

—தாயுமானவர்.

குறிப்புரை

திருநாமப் பதிகம் :

1\. 'மறை பன்னி ஏத்து எடுப்பது, இன் அமுது ஆயது இயேசு நாமமே' என்க. பன்னுதல் – சொல்லுதல். ஏத்து – துதி.

2\. தெருள் – அறிவுத் தெளிவு.

3\. கறை – குற்றம், இகழ்ச்சி. இகல் செகுத்திடும் – பகையை வென்றிடும்.

தாயுமானவர் பாடல்

4\. உலறுதல்—வற்றுதல், பொலிவழிதல். வேசற்று—மனச் சோர்வுற்று: வேசறவு – மனச் சோர்வு. என்று நீ அன்று – என்று நீ என்னை ஆட்கொண்டாயோ அன்று முதல்.

வினாக்கள்

1. பிள்ளையவர்கள் ஏசுவின் திருநாமத்தை எவ்வாறெல்லாம் பாராட்டுகின்றார்கள் என்பதனைத் தொகுத்து வரைக.

2. தாயுமானார் இறைவனைப்பற்றிச் சொல்வ தென்ன வென்றும், தம்மைப்பற்றிச் சொல்வ தென்ன வென்றும் எழுதுக.

3. இறைவர் அருளைப் பெற அவர் என்னென்ன செய்தார்?

4. பொருள் தருக: அமுது, கலை, சேதுத்தல், இரும்பு நேர், சீர்க்குணம், சுகவாரி.

II

பழஞ் செய்யுள்

புறநானூறு

[புறம் + நானூறு = புறநானூறு. புறப் பொருளைப்பற்றிய நானூறு பாடல்களைக் கொண்ட நூல். இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.*

புறப் பொருளாவது அறம் பொருள் இன்பம் என்ற மூன்றனுள் முதலிரண்டைப்பற்றிக் கூறுவது. இன்பத்தைப்பற்றிக் கூறுவது அகப் பொருளாகும்.

புறநானூறு சங்ககால நூற் பிரிவுகளுள் எட்டுத் தொகையைச் சேர்ந்தது. பல்வேறு சமயங்களில் பல்வேறு புலவர்களால் பாடப்பட்ட பாடல்களைக் கொண்டுள்ள நூல் இது. கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்டது. பண்டைத் தமிழ் நாட்டை இந்நூலுள் காணலாம். வரலாற்றாராய்ச்சிக்குப் பெரிதும் துணையாக நிற்பது இந்நூல்.]

1. [அதியமான் நெடுமான் அஞ்சி தூதுவிடத் தொண்டைமானுழைச் சென்ற ஔவைக்கு அவன் படைக்கலக் கொட்டில் காட்ட அவர் பாடியது.]

இவ்வே பீலி யணிந்து மாலை சூட்டிக்
கண்டிரள் நோன்காழ் திருத்திநெய் யணிந்து
கடியுடை வியனக ரவ்வே: அவ்வே
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொற்றுறைக் குற்றில மாதோ என்றும்;
உண்டாயிற் பதங் கொடுத்(து)
இல்லாயின் உடனுண்ணும்
இல்லோர் ஒக்கற் றலைவன்
அண்ணலெங் கோமான் வைந்நுதி வேலே.

திணை: பாடாண்டிணை துறை: வாண் மங்கலம்

2. [வேள் பாரியைக் கபிலர் பாடியது.]

அளிதோ தானே பாரியது பறம்பே;
நளிகொண் முரசின் மூவிரு முற்றினும்
உழவ ருழாதன நான்குபய னுடைத்தே:
ஒன்றே, சிறியிலை வெதிரின் நெல்விளை யும்மே;
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் கும்மே;
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க்
[கும்மே;
நான்கே, அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றந் தேன்சொரி யும்மே;
வான்கண் அற்றவன் மலையே; வானத்து
மீன்கண் அற்றதன் சுனையே; ஆங்கு,
மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்,
புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினும்,
தாளிற் கொள்ளலிர்; வாளில் தாரலன்;
யானறி குவனது கொள்ளு மாறே:
சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி
விரையொலி கூந்தனும் விறலியர் பின்வர
ஆடினிர் பாடினிர் செலினே
நாடும் குன்றும் ஒருங்கீ யும்மே!

திணை: நொச்சி துறை: மகண் மறுத்தல்

குறிப்புரை

புறநானூறு:

1. இவ்வே – இவைதாம்; இந்த ஆயுதங்கள். கண் திரள் நோன் காழ்– உடலாகிய இடம் திரண்ட வலிய காம்பு. கடி – காவல். அவ்வே – அவைதாம்; அதியமானுடைய போராயுதங்கள். கோடு – கங்கு; அஃதாவது வேலின் இலைப்பகுதியைத் தாங்கும் நடுவிடம். நுதி – நுனி. கொல் துறை குற்றில் – கொல்லனது துறையாகிய குறிய கொட்டில்; குறுகிய இல் – குற்றில். என்றும் – எக்காலும். பதம் – உணவு. இல்லோர் ஒக்கல் – வறியோர் சுற்றம். வை – கூரிய.

இவ், அவ்: வகர ஈற்றுச் சுட்டுப் பெயர்கள். நகர, குற்றில: குறிப்பு வினைமுற்றுகள்.

அதியர் குடியில் பிறந்தவனாதலின் அதியமான் என வழங்கப்பட்டனன். நெடுமான் அஞ்சி என்பது இவன் இயற்பெயர். இவன் சேரர்க்குரியவன். ஒரு குறுநில மன்னன். தகடூர் இவனது தலைநகர். ஔவையின்பால் பேரன்பு பூண்டவன்.

பாடாண்டிணை: பாடப்படுகின்ற ஆண்மகனுடைய கீர்த்தி, வலி, கொடை, தண்ணளி இவற்றை ஆராய்ந்து சொல்லுதல்.

வாண்மங்கலம்: பகைவரால் கலக்குதற்கரிய கடல்போன்ற சேனையினையும் வலிய யானையினையும் உடையான் வாளைப் புகழ்தல்.

2. அளிது: வியப்பின்கண் வந்தது. தளி – பெருமை. வெதிர் – மூங்கில். ஓரி – தேன் முதிர்ந்த விடத்துப் பரக்கும் நீல நிறம். வான் கண் அற்று – வானிடத்தைப் போன்றது. தாள் – முயற்சி. கதிர் புரி – வடித்து முறுக்கப்பெற்ற. விரை – நறுமணம். ஒலி – தழைத்த.

சிறு + யாழ் = சீறியாழ்.

வேள்பாரி பறம்பு மலையை ஆண்டுவந்தவன். அது முந்நூறூர்களையுடையதாக விருந்தது. பாரி கடையெழு வள்ளல்களுள் ஒருவன். கபிலர் இவனது உயிர்த்தோழர். மூவேந்தரும் இவன்பால் பகைமையினை வளர்த்துப் போருடற்றிப் பன்முறையுந் தோற்றனர்.

நொச்சித் திணை: படைவீரர் தம் மதிலைக் காத்து நிற்றலாகிய செய்தியைக் கூறுவது.

மகண்மறுத்தல்: (பொருள் வெளிப்படை.)

வினாக்கள்.

1. அதியமான், வேள்பாரி, கபிலர்: குறிப்பு வரைக.

2. பொருள் தருக:

(அ) 'பகைவர் குத்திக் கோடுநுதி சிதைந்த குற்றில'

(ஆ) 'இல்லோர் ஒக்கல் தலைவன்'

(இ) 'அளிதோ தானே பாரியது பறம்பே'

(ஈ) 'அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றம் தேன்சொரி யும்மே'

3. பறம்பின்கண் விளங்கிய உழவர் உழாதன வாகிய நான்கு பயன்கள் எவை?

4. பறம்பு கொளற்குக் கபிலர் கூறிய வழி யாது? அக்கூற்றின் உட்கருத்தினைப் புலப்படுத்துக.

5. தொண்டைமான் படைக்கலக் கொட்டிலைக் கண்ட ஔவையாரின் வர்க்குத் திறமையைப் புலப்படுத்துக.

III

இடைக்காலக் காவியங்கள்

1. மணிமேகலை

ஆதிரை பிச்சையிட்ட காதை

[கோவலனுக்கு மாதவி என்னும் நாடகக் கணிகையின்பாற் பிறந்தவள் மணிமேகலை. அவளுடைய வரலாற்றைக் கூறுவது இந்நூல். இந்நூல் மணிமேகலை துறவு எனவும் வழங்கப்பெறும்.

இந்நூல் தமிழிலுள்ள ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. பிற நான்கும் சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்பன. மணிமேகலை பௌத்த சமயச் சார்புடையது. இது முதனூல்.

இதன் ஆசிரியர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்பவராவர். 'சீத்தலை' என்பது இவர்தம் ஊர்ப் பெயராகும். இவரது காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு; சமயம் பௌத்தம். இளங்கோவடிகளும் இவரும் சம காலத்தவர்கள்.

மணிமேகலை கோமுகிப் பொய்கையிலிருந்து அமுதசுரபி என்னும் பாத்திரத்தைப் பெற்றாள். அந்தப் பாத்திரத்தில் முதன்முதலாகக் கற்புடையாள் ஒருத்தியிடமிருந்து பிச்சை பெறுதல் வேண்டும் என விழைந்தாள். அப்போது காயசண்டிகை என்னும் வித்தியாதரப் பெண் தோன்றி ஆதிரை என்னும் கற்புடைய நங்கை ஒருத்தியின் வரலாற்றைச் சொல்லி 'அவளிடமே பிச்சை பெற்றிடுக' எனக் கூறினள். அவ்வரலாற்றைக் கூறுகின்ற பகுதி 'ஆதிரை பிச்சையிட்ட காதை' என வழங்கப்படுகிறது.]

(சாதுவன் கணிகை யொருத்தியின்பால் தன் பொருளெல்லாம் இழந்து வாணிகருடன் வங்கம் ஏறுதல்.)

ஆதிரை கணவன், ஆயிழை கேளாய்!
சாதுவன் என்போன் தகவிலன் ஆகி
அணியிழை தன்னை அகன்றனன் போகிக்
கணிகை யொருத்தி கைத்தூண் நல்க,

வட்டினும் சூதினும் வான்பொருள் வழங்கிக்
கெட்ட பொருளின் கிளைகே டுறுதலின்
பேணிய கணிகையும் பிறர்நலங் காட்டிக்
காணம் இலியெனக் கையுதிர்க் கோடலும்
வங்கம் போகும் வாணிகர் தம்முடன்

தங்கா வேட்கையின் தானுஞ் செல்வுழி
நளியிரு முந்நீர் வளிகலன் வௌவ
ஓடிமரம் பற்றி ஊர்திரை யுதைப்ப
நக்க சாரணர் நாகர் வாழ்மலைப்
பக்கஞ் சார்ந்தவர் பான்மைய னாயினன்.

(தன் கணவன் கலமுடைந்து பட்டனன் என்ற செய்தி கேட்ட ஆதிரை உடன்கட்டை ஏறவும் தீ அவளை அண்டாதாயிற்று. 'நின் கணவன் மீண்டும் வந்து சேருவன்' என அசரீரி எழுந்தது.)

அந்தரத் தோன்றி யசரீரி யறைதலும்
ஐயரி யுண்கண் அழுதுயர் நீங்கிப்
பொய்கைபுக் காடிப் போதுவாள் போன்று
மனங்கவல் வின்றி மனையகம் புகுந்தென்
கண்மணி யனையான் கடிதீங் குறுகெனப்
புண்ணிய முட்டாள், பொழிமழை தருஉம்
அரும்பெறன் மரபிற் பத்தினிப் பெண்டிரும்
விரும்பினர் தொழூஉம் வியப்பின ளாயினள்:
ஆங்கவள் கணவனும் அலைநீ ரடைகரை
ஓங்குயர் பிறங்க லொருமர நீழல்
மஞ்சுடை மால்கடல் உழந்தநோய் கூர்ந்து
துஞ்சுதுயில் கொள்ளவச் சூர்மலை வாழும்
நக்க சாரணர் நயமிலர் தோன்றிப்
பக்கஞ் சேர்ந்து, 'பரிபுலம் பினனிவன்;
தானே தமியன் வந்தனன்; அளியன்
ஊனுடை யிவ்வுடம் புண'வென் றெழுப்பலும்:
மற்றவர் பாடை மயக்கறு மரபிற்
கற்றன னாதலிற் கடுந்தொழின் மாக்கள்
சுற்று நீங்கித் தொழுதுரை யாடி
ஆங்கவ் ருரைப்போர் 'அருந்திறல் கேளாய்!
ஈங்கெங் குருமகன் இருந்தோன் அவன்பாற்
போந்தருள் நீ'யென, அவருடன் போகிக்
கள்ளடு குழிசியுங் கழிமுடை நாற்றமும்
வெள்ளென் புணங்கலும் விரவிய விருக்கையில்
எண்குதன் பிணவோ டிருந்தது போலப்

பெண்டுட னிருந்த பெற்றி நோக்கிப்
பாடையிற் பிணித்தவன் பான்மைய னாகிக்
கோடுயர் மரநிழல் குளிர்ந்த பின்னவன்
'ஈங்குநீ வந்த காரண மென்?' என,
ஆங்கவற் கலைகடல் உற்றதை யுரைத்தலும்

'அருந்துத லின்றி யலைகட லுழந்தோன்
வருந்தினன் அளியன் வம்மின் மாக்காள்!
நம்பிக் கிளையளோர் நங்கையைக் கொடுத்து
வெங்களும் ஊனும் வேண்டுவ கொடும்' என
அவ்வுரை கேட்ட சாதுவன் அயர்ந்து

'வெவ்வுரை கேட்டேன்; வேண்டேன்' என்றலும்,
'பெண்டிரும் உண்டியும் இன்றெனின் மாக்கட்(கு)
உண்டோ ஞாலத் துறுபயன்? உண்டெனிற்
காண்குவம் யாங்களும் காட்டுவா யா(க)' எனத்
தூண்டிய சினத்தினன்சொல்லெனச் சொல்லும்:

'மயக்கும் கள்ளும் மன்னுயிர் கோறலும்
கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்;
பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்ற துண்மையின்
நல்லறஞ் செய்வோர் நல்லுல கடைதலும்

அல்லறஞ் செய்வோர் அருநர கடைதலும்
உண்டென வுணர்தலின் உரவோர் களைந்தனர்;
கண்டனை யாக' . . . .

(என இவ்வாறுகப் பல அறவுரைகளைச் சாதுவன் உரைக்கவும், நாகர் தலைவன் அவற்றை ஏற்றுக்கொண்டு மேல் கூறுகின்றனன்:)

'ஈங்கெமக் காகும் இவ்வறஞ் செய்கேம்;
ஆங்குனக் காகும் அரும்பொருள் கொள்க' எனப்

பண்டும் பண்டும் கலங்கவிழ் மாக்களை
உண்டேம்; அவர்தம் உறுபொருள் ஈங்கிவை
விரைமர மென்றுகில் விழுநிதிக் குப்பையோ(டு)
இவையிவை கொள்(க)' என, எடுத்தனன் கொணர்ந்து
சந்திர தத்தன் என்னும் வாணிகன்
வங்கம் சேர்ந்ததில் வந்துட னேறி
இந்நகர் புகுந்தீங் கிவளொடு வாழ்ந்து
தன்மனை நன்பல தானமும் செய்தனன்.

மணிமேகலை : குறிப்புரை

1–4: *ஆயிழை – பெண்; இங்கு மணிமேகலை விளிக்கப்படுகிறாள். தகவு – நல்லொழுக்கம். அணியிழை – பெண்; இங்கு ஆதிரை.*

ஆயிழை, அணியிழை: வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைகள். அகன்றனன்: முற்றெச்சம்.

5–14: *வட்டு – சூதாடும் ஒருவகைக் கருவி. அதனைக் கொண்டு ஆடப்படுவது ஒருவகைச் சூதாட்டம். 'சூது' என்றது பிற சூதாட்டங்களை. கெட்ட பொருள் – கெட்ட முறையில் பயன்பட்ட செல்வம். இனை – செல்வத்தின் பற்பல வகைகள். காணம் – பொன். வங்கம் – கப்பல். நளி – அகன்ற. முந்நீர் – கடல். நக்க சாரணர் நாகர் – ஆடையின்றி சஞ்சரிக்கிறவர்களாகிய நாக சாதியினர்.*

நளி: உரிச்சொல். ஒடிமரம், வார்திரை, வாழ்மலை: வினைத்தொகைகள்.

15–24: *ஐ அரி உண் கண் – அழகிய செவ்வரி படர்ந்த மையுண்ட கண்களையுடைய ஆதிரை. புண்ணியம் முட்டாள் – அறம் செய்வதில் முட்டுப்பாடு இல்லாதவளாய். அரும் பெறல் மரபின் – பெறுதற்கரிய ஒழுக்கத்தினை யுடைய. பிறங்கல் – மலை.*

உண்கண்: வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. முட்டாள், விரும்பினர்: முற்றெச்சங்கள். உறுக + என = உற்கென; அகரம் தொக்கது. தருஉம், தொழூஉம்: செய்யுளிசையளபெடைகள்.

25–34: *மஞ்சு – மேகம். கூர்ந்து – மிக்கு. துஞ்சு துயில் – மிக்க உறக்கம். சூர் – அச்சம். பரி புலம்பினன் – மிகவும் வருந்தியுள்ளான். அளியன் – இரக்கத்தக்க எளியன். சுற்றுநீங்கி – அவனைக் கொல்வதற்காக சூழ்ந்து நின்ற தன்மையை விட்டு.*

சூர்மலை: உரிச்சொற்றொடர். அருமை + திறல் = அருந்திறல்: பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை

35–44: குருமகன் இருந்தோன் – தலைவன் இருக்கின்றான். குழிசி – பானை. முடை – புலால். உணங்கல் – வற்றல். எண்கு – ஆண் கரடி. பிணவு – இங்குப் பெண் கரடி.

அடுகுழிசி, அலைகடல்: வினைத்தொகைகள். கழிமுடை: உரிச்சொற்றொடர்.

47–54: நம்பி – ஆண்களிற் சிறந்தவன். சொல்லும் – சாதுவன் பின் வருமாறு கூறத் தொடங்கினன்.

வெங்கள் (வெம்மை + கள்), வெவ்வுரை (வெம்மை + உரை): பண்புத்தொகைகள். உழந்தோன்: உழ + த் + த் + ஆன்: 'ஆ ஓ ஆதலும் செய்யுளுள் உரித்தே.'

55–62: கோறல் – கொல்லுதல். மயக்கு – கலக்கம். 57, 58-ஆம் அடிகளுடன், "உறங்கு வதுபோலும் சாக்கா(டு) உறங்கி – விழிப்பது போலும் பிறப்பு" என்னும் குறளினை ஒப்பிடுக. உரவோர் – அறிவுடைய பெரியோர்.

கொல் + தல் = கோறல். கண்டனை: முன்னிலை ஒருமை வினைமுற்று; 'ஐ' அதன் விகுதி.

63–72: ஆங்கு – நீ செல்லும் அவ்விடமாகிய காவிரிப்பூம் பட்டினத்திற்கு. ஆகும் – பயன்படக்கூடிய. பண்டும் பண்டும் – முற்காலத்தில் பல முறை. விரைமரம் – சந்தன மரம்; விரை – மணம். ஈங்கு – இக் காவிரிப் பூம் பட்டினத்தில்.

உறுபொருள்: உரிச்சொற்றொடர். எடுத்தனன்: முற்றெச்சம்.

வினாக்கள்

1. சித்தலைச் சாத்தனார்: குறிப்பு வரைக.
2. 'ஆயிழை கேளாய்'—இஃது யாருடைய உரை? விளிக்கப்பட்டவர் யார்? ஏன் விளிக்கப்பட்டார்?—'ஆயிழை' தொகையிலக்கணம் வரைக.
3. சாதுவன் நாடு விட்டு வங்கம் ஏறியமைக்குக் காரணம் என்ன?
4. வங்கம் ஏறிய சாதுவனுக்கு உற்றது யாது?
5. "பொய்கைபுக் காடிப் போதுவான் போன்று"—விளக்குக.
6. அசரீரி கேட்ட ஆதிரைக்குற்ற பெருமை யாது?
7. "சுற்று நீங்கித் தொழுதுரை யாடி": யார்? எப்போது? ஏன்?
8. நாகர் தலைவன் இருந்த காட்சியினைப் புலப்படுத்துக.
9. சாதுவன் நாகர் தலைவனுக்கு உரைத்த அறநெறியில் குறட்கருத்து ஆளப்படும் ஓர் இடத்தினைச் சுட்டுக.
10. சாதுவன் நாகர் தலைவனுக்குரைத்த அறநெறி யாது?
11. அறவுரை கேட்ட குருமகன் செயல் யாது?
12. இடஞ் சுட்டுக:
    (அ) "வெவ்வுரை கேட்டேன் வேண்டேன்."
    (ஆ) "ஆங்குனக் காகும் அரும்பொருள் கொள்க."
    (இ) "பரிபுலம் பினனிவன்; தானே தமியன் வந்தனன்."

13. கோடிட்ட சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு வரைக:—

(அ) அணியிழை தன்னை அகன்றனன் போகி.

(ஆ) காணம் இலி எனக் கையுதிர்க் கோடலும்.

(இ) ஓடிமரம் பற்றி வார்திரை உதைப்ப.

(ஈ) விரும்பினர் தொழூஉம் வியப்பினன்.

(உ) வம்மின் மாக்காள்.

(ஊ) மன்னுயிர் கோறல்.

---

2. கம்ப ராமாயணம்

சுந்தர காண்டம் : கடலுாவு படலம்

[கம்ப ராமாயணம் என்பது கம்பரது ராமாயணம் என விரியும். ஆறும் வேற்றுமைத் தொகை. மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை எனலும் ஆம். இது வழிநூல். வடமொழி வான்மீகி ராமாயணம் முதனூல்.

ஆசிரியர் கம்பர் உவச்சர் மரபினர் என்பார் சிலர்; வேளாளர் என்பார் சிலர். இவர் விஷ்ணு சமயத்தினர். திருவெண்ணெய் நல்லூர் சடையப்பவள்ளலால் ஆதரிக்கப் பெற்றவர் இவரது காலம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு. கி.பி. 9-ஆம் நூற்றாண்டு என்றும் கூறுவர். சடகோபரந்தாதி, ஏரெழுபது, சிலையெழுபது ஆயனவும் சில பிறவுமாகிய நூல்களை இயற்றியுள்ளார் இவர்.

கம்ப ராமாயணத்துள் காண்டம் பெரும் பிரிவு; படலம் சிறு பிரிவு.

ஏனைய காண்டங்களிலும் இக்காண்டம் அழகாக அமைந்திருத்தல்பற்றி இதனைச் 'சுந்தர காண்டம்' என்றார் என்பர். அன்றி அநுமனுக்குச் சுந்தரன் என்னும் பெயருண்மைபற்றி, அவனைப்பற்றிய செய்திகளை மிகுதியாகக் கூறும் இக்காண்டம் இப்பெயர் பெற்றது என்றலும் உண்டு.

கடல் + தாவும் + படலம் = கடலுாவு படலம். சீதையைத் தேடிக் கண்டு பிடிக்க இலங்கைக்குச் செல்லுகின்றனன் அநுமன். இடையில் பரந்த கடலைத் தாண்டுதற் பொருட்டுத் தென்பால் அமைந்த மகேந்திர மலைமீது பேருருவெடுத்து நிற்கின்றனன் அவன்.]

(மலைமீதிருந்து இலங்கையைக் கண்டு அநுமன் ஆர்த்தல்.)

1. கண்டனன் இலங்கை மூதூர்க்
கடிபொழிற் கனக நாஞ்சில்
மண்டில மதிலுங் கொற்ற
வாயிலும் மணியிற் செய்த

வெண்டளக் கனக மாட
　　வீதியும் பிறவு மெல்லாம்;
அண்டமுந் திசைக ளெட்டும்
　　நடுங்கத்தோள் கொட்டி யார்த்தான்.

(அரக்கன் கால்களை யூன்றியதால் மலைக்கு உற்ற நிலை)

2. வன்றறந்த வரிகொள் நாகம்
　　வயங்கனல் உமிழும் வாய,
பொன்றறந்த முழைகள் தோறும்
　　புறத்துராய்ப் புரண்டு போவ,
நின்றறந்த மில்லா னூன்ற
　　நெரிந்துகீ ழழுந்தி நீலக்
குன்றறந்தன் வயிறு கீறிப்
　　பிதுங்கின குடர்கண் மான.

3. பொன்பிறழ் சிமயக் கோடு
　　பொடியுறப் பொறியுஞ் சிந்த
மின்பிறழ் குடுமிக் குன்றம்
　　வெரிநுற விரியும் வேலை,
புன்புற மயிரும் பூவாக்
　　கட்புலம் புறத்து நாறு
வன்பறழ் வாயிற் கவ்வி
　　வல்லியம் இரிந்த மாதோ.

4. தாரகை சுடர்கள் மேகம்
　　என்றிவை தவிரத் தாழ்ந்து
பாரிடை யழுந்து கின்ற
　　படர்நெடும் பனிமாக் குன்றம்,
கூருகிர்க் குவவுத் தோளான்
　　கும்பெனக் குமிழி பொங்க
ஆர்கலி யழுவத் தாழுங்
　　கலமென லாயிற் றன்றே.

(அநுமன் மலைமீதிருந்து இலங்கையினை நோக்கி விசையாகப் பாய்தல்)

5. 'இலங்கையின் அளவிற் றன்றால்
இவ்வுரு வெடுத்த தோற்றம்
விலங்கவும் உள'தென் றென்று
விண்ணவர் வியந்து நோக்க,
அலங்கருழ் மார்பன் முன்றாழ்ந்
தடித்துணை யழுத்த லோடும்
பொலங்கெழு மலையுந் தாளும்
பூதலம் புக்க மாதோ!

6. ஆயவன் எழுத லோடும்
அரும்பணை மரங்க டாமும்
வேயுயர் குன்றும் வென்றி
வேழமும் பிறவு மெல்லாம்
நாயகன் பணியி தென்றே
நளிர்கடல் இலங்கை தாமும்
பாய்வன வென்ன வானம்
படர்ந்தன எழுவ மான.

7. இசையுடை அண்ணல் சென்ற
வேகத்தா லெழுந்த குன்றும்
பசையுடை மரனும் மாவும்
பல்லுயிர்க் குலமும் வல்லே
திசையுறச் சென்று சென்று
செறிகடல் இலங்கை சேரும்
விசையில வாகத் தள்ளி
வீழ்ந்தன என்ன வீழ்ந்த.

(ஆகாசத்தில் செல்லும் அநுமனைக் கண்டு நாகசாதியர் அஞ்சுதல்)

8. வெய்தின்வான் சிறையி னணீர்
வேலையைக் கிழிய வீசி
நொய்தினு ரமுதங் கொண்ட
நோன்மையே நுவலு நாகர்,

'உய்துநாம் என்ப தென்னே?
உறுவலிக் கலுழன் ஊழின்
எய்தினன் ஆம்'என் றஞ்சி
மறுக்கமுற் றிரியல் போனார்.

9. விண்ணவ ரேத்த, வேத
முனிவரார் வியந்து வாழ்த்த,
மண்ணவர் இறைஞ்சச் செல்லும்
மாருதி, மறமுள் கூர
'அண்ணல்வா ளரக்கன் றன்னை
அமுக்குவாம் இன்னம்' என்ன
கண்ணுதல் ஒழியச் செல்லும்
கயிலையங் கிரியும் ஒத்தான்.

10. தாவிரே டுலக மூன்றும்
நடுக்குற அடுக்கி நாகர்
மேலின்மே னின்ற காறுஞ்
சென்றகூ லத்தின் விண்டு
காலினால் அளந்த வான
முகட்டையும் கடக்கக்கால
வாலினால் அளந்தா னென்று
வானவர் மருளச் சென்றான்!

வேறு

(அநுமன் இவ்வாறு செல்லவும் கொடிய அரக்கி ஒருத்தி அவனை இடைமறித்து 'எனை இங்கு ஆர் கடத்திர்?' எனச் சினந்து எழுந்தாள். அவள் பெயர் அங்காரதாரை என்பது.)

11. துண்டப் பிறைத்துணை யெனச்சுட ரெயிற்றாள்;
கண்டத் திடைக்கறை யுடைக்கடவுள் கைம்மா
முண்டத் துரித்த வுரியாள்; முளரிவந்தான்
அண்டத் தினுக்குறை அமைத்த பிலவாயாள்.

அநுமன் கூற்று

12. 'சாயா வரந்தழுவி னாய்; தழிய பின்னும்
ஓயா துயர்ந்தவிசை கண்டுமுணர் கில்லாய்;
வாயா லளந்துநெடு வான்வழி யடைந்தாய்;
நீயா ரை; யென்னையிவண் நின்றநிலை?' என்றான்

அவன் மறுமொழி

13. ‘பெண்பா லெனக்கருது பெற்றியொழி; உற்றால்,
விண்பா லவர்க்குமுயிர் வீடுவது மெய்யே;
கண்பா லடுத்தவுயிர் காலன்வரு மேனும்
உண்பா னருத்திய தொழிப்பரிய’ தென்றாள்.

(அநுமன் அவன்வாயினுள் புக்கு அவளுடலைப் பீறிக்கொண்டு வெளிப்படுதல்)

14. திறந்தாள் எயிற்றையவள்; அண்ணலிடை சென்றான்;
‘அறந்தான் அரற்றிய(து); அயர்த்தமரர் எய்த்தார்
இறந்தான் எனக்கொ(டு); ஒ ரிமைப்பதனின் முன்னம்
பிறந்தான் எனப்பெரிய கோளரி பெயர்ந்தான்.

(அநுமன் தோற்றம்)

15. கள்வாய் அரக்கிகத றக்குடர் கணத்திற்
கொள்வார் தடக்கையின் விசும்பின்மிசை கொண்டான்,
முள்வாய் பொருப்பின்முழை யெய்திமிக நொய்தின்
உள்வாழ் அரக்கொடெழு திண்கலுழ னொத்தான்.

16. சாகா மிருகத்தலைவ ரிற்றிலக மன்னான்;
ஏகா வரக்கிகுடர் கொண்டுட னெழுந்தான்!
மாகா லசைப்பவட மண்ணினுற வாலோ(டு)
ஆகா யமுற்றகத லிக்குவமை யானான்!

17. மாண்டாள் அரக்கி; அவள் வாய்வயிறு காறுங்
கீண்டான்; இமைப்பினிடை மேருகிரி கீழா
நீண்டான்; வயக்கதி நினைப்பினெடி தென்னப்
பூண்டான்; அருக்கனுயர் வானின்வழி போனான்.

வேறு

(இவ்வாறாகச் சென்ற அநுமன் இறுதியாக இலங்கையைக் கண்ணுற்றுப் பவள மலையில் பாய்தல்)

18. தசும்புடைக் கனக நாஞ்சிற்
கடிமதில் தரித்து நோக்கான்,
அசும்புடைப் பிரசத் தெய்வக்
கற்பக நாட்டை யண்மி,
விசும்பிடைச் செல்லும் வீரன்,
விலங்கிவே றிலங்கை மூதூர்ப்
பசுஞ்சுடர்ச் சோலைத் தாங்கோர்
பவளமால் வரையிற் பாய்ந்தான்.

19. மேக்குறச் செல்வோன் பாய
விலங்கிநீ ரிலங்கை வெற்பு
நூக்குறத் தங்கு மிங்குந்
தள்ளுற நுடங்கு நோன்மை,
போக்கினுக் கிடையூ றாகப்
புயலொடு பொதிந்த வாடை
தாக்குறத் தளர்ந்து சிந்தும்
கலமெனத் தக்க தன்றே!

கம்ப ராமாயணம் : குறிப்புரை

1. கடி பொழில் – நறுமணம் வீசுகின்ற சோலை. நாஞ்சில் – ஒரு வகை மதிலுறுப்பு. வெண் தளம் – வெண்ணிறமான தளவரிசைகள். "எல்லாம், கண்டனன்; கொட்டி ஆர்த்தான்," என்க.

2. வல் தந்தம் வரிகொள் நாகம் – கொடிய நச்சுப் பற்களையும் வரிகளையும் உடைய மலைப் பாம்புகள். வயங்கு அனல் – எரிகின்ற நச்சு நெருப்பு. வாய – வாய்களையுடையனவாய். பொன் தந்த முழைகள் – பொன் மயமான மலைக் குகைகள். அந்தம் இல்லான் – அநுமன். நீலக் குன்றம் – மகேந்திர மலை. இப்பாடலுள், மலை பிளந்து பாம்புகள் வெளிப்பட்டமை அம்மலையின் வயிறு கிழிந்து குடர்கள் சரிவதைப் போல்வதாயிற்று என்று கூறப்பட்டது. தன்மைத் தற்குறிப்பேற்றவணி.

3. பொன் பிறழ் சிமயக்கோடு – பொன் மயமான சிகரம். பொறி – தீப்பொறி. குன்றம் – மகேந்திரம். வெரிந் உற விரியும் வேலை – முதுகு கிழிந்து பிளவுபடுகின்ற சமயத்தில். புல் புற மயிர் – சிறிய உடம்பு மயிர். கண்புலம் புறத்து காணாமை – கண் வெளியில் தெரியாமை. பறழ் – குட்டிகள். வல்லியம் – புலிகள். மா து, ஓ: அசைகள்.

4. மிகவுயர்ந்த மகேந்திரம் நட்சத்திரம் முதலியவற்றை ஆகாயத்திலேயே விட்டுப் பூமியில் அழுந்துகின்ற காட்சி கப்ப லொன்று கடலில் அழுந்துவதைப் போன்றுள்ளது. நட்சத்திரம் முதலியவைகள் — நீர்க்குமிழிகள்; அநுமன் — கூம்பு; மலை — கலம். தன்மைத் தற்குறிப்பேற்ற வணி.

தாரகை — நட்சத்திரம். உகிர் — நகம். குவவு — திரண்ட. ஆர்கலி அழுவம் — சமுத்திர ஆழம்.

5. விலங்கவும் உளது — இலங்கைக்கு அப்பாலும் செல்லுதற்கு எடுத்ததாம். அலங்கல் தாழ் — மாலை தொங்கப் பெற்ற. அடித்துணை — இரண்டு பாதங்களையும். பொலம் செழு — பொன் மயமாக விளங்குகின்ற. தாள் — அநுமனுடைய பாதங்கள்.

6. அநுமன் பாய்ந்து சென்ற விசையினால் அவன் அருகிருந்த மரங்கள் முதலியன உடன் எழுந்து வானத்தில் படர்ந்தன.

பணை — கிளை. வேய் — மூங்கில். குன்று — அம்மலைமீதிருந்த பெரிய பாறைகள். நாயகன் — இராமபிரான். களிர் கடல் இலங்கை — குளிர்ந்த கடலால் சூழப்பட்ட இலங்கைக்கு.

இச்செய்யுள் ஏதுத் தற்குறிப்பேற்ற வணி. என்று: செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

7. பசை — பசுமை. வீழ்ந்த — வீழ்ந்தன. மா — மிருகங்கள்.

8. வெய்தின் — பலமாக. வான் சிறையினன் — கருடன். கொய்தின் — விரைவில். நுவலும் நாகர் — அச்சத்தால் பேசிக்கொள்ளுகிற நாகர். என்னே — என்ன நிச்சயம் உள்ளது. கலுழன் — கருடன். ஊழின் — நம் விதியினால். மறுக்கம் — மனக்கலக்கம். அநுமனைக் கண்ட நாகர் கருடன் என அஞ்சினர் என்க. மயக்கவணி.

'சிறையினன் நீர் வேலையைக் கிழிய வீசி நொய்தின் ஆரமுதம் கொண்ட' கதை:

கருடனும் அவன் தாய் விநதை என்பாளும் ஒரு பந்தயத்தில் தோற்றதன் காரணமாக நாகங்களுக்கும் அவைகளின் தாயாகிய கத்துருவுக்கும் அடிமைகளாயினர். அடிமைத்தனத்திலிருந்து விடுதலை வேண்டின் தேவரமுதம் கொண்டுவந்து தரவேண்டுமென்றன நாகங்கள். கருடனும் தேவலோகத்தின் மீது படையெடுத்துத் தேவர்களைத் தோற்கடித்து அமுதத்தைக் கவர்ந்து (மீட்டும் அந்த அமுதத்தைப் பெறுதற்கு உபாயம் ஒன்றனையும் இந்திரனுக்குத் தெரிவித்து, நாகங்களை விழுங்குதற்கு அவன்பால் வரமும் பெற்று,) பாதாளலோகத்தை யடைந்து நாகங்களிடம் அமுதத்தைக் கொடுத்தான்.

9. மாருதி — அநுமன். மறம் உள் கூர — பகைமை மனத்தில் மிக்கதனால். அண்ணல் — பெருமை பொருந்திய (வான் அரக்கன்) இராவணன். கண்ணுதல் — சிவனார். முன்னம் இராவணனின் இசைகேட்ட சிவனார் அவனை இமயத்தடியில் முழுவதுமாக நசுக்காமல் விட்டுவிட்டார். பகைமை தீராத கயிலைமலை சிவனார் இல்லாமலே சென்று, இராவணனை நசுக்கச் செல்லுவதுபோல் இருந்தது அநுமன் செலவு என்க. தற்குறிப்பேற்ற வணி.

10. நாலினோடு மூன்று – ஏழு. நாகர் – தேவர். கூலம் – எல்லை. விண்டு – விட்டுணு. முகடு – உச்சி.

நாகர் மேலின்மேல் அடுக்கி நின்றகாறும் சென்ற கூலத்தின் – தேவருக்குரிய உலகங்கள் ஒன்றன்மேல் ஒன்றதாக ஆறு அடுக்கி நின்றவரை சென்றதாகிய எல்லையினையுடையதும். அளந்த – அளந்ததும் ஆகிய. வான முகட்டையும் கடக்க – வான வெளியின் உச்சியையும் கடந்து. காலவால் – காலனின் (யமனின்) கையிலுள்ள பாசக் கயிற்றினைப்போன்ற வால்.

'நாகர் மேலின்மேல் அடுக்கி நின்ற......கூலத்தின், காலினால் அளந்த, முகட்டையும் கடக்க, வாலினால் அளந்தான் என்று வானவர் மருளச் சென்றான்,' என்க.

விட்டுணு காலால் அளந்ததை இவன் வாலால் அளந்தான் என்று தேவர் மருண்டனர்.

11. துணை – இணை, ஜதை. எயிறு – பல். கை மா – துதிக்கையையுடைய யானை. யானைத்தோலை அவள் போர்த்துக்கொண்டிருந்தாள் என்க. முளரிவந்தான் – பிரமன். முளரி – தாமரை. பிலம் – பெருந் துவாரம். 'கறையுடைக் கடவுள் போல' எனப் பொருளுரைக்க.

தாருக வனத்து முனிவர்கள் வேள்வி யொன்று செய்து பூதங்கள் முதலிய பலவற்றைச் சிவனாரை அழித்து மீள ஏவினார்கள். அவைகளுள் ஒன்று யானை. எதிர்த்த யானையின் தோலையுரித்து அவர் தமக்கு உரியாக உடுத்தார் என்பது புராணம்.

12. அங்காரதாரை வெறும் சாயையைப் பிடித்து இழுத்து அச்சாயையின் பொருளைக் கவரவல்ல வரம் பெற்றவள். தழிய பின்னும் – நீ என்னைப் பிடித்து இழுத்த பின்னும்.

உணர்கில்லாய்: 'கில்' ஆற்றல் உணர்த்தும் இடைநிலை. யாரை: 'ஐ' சாரியை.

13. உற்றால் – என் அருகில் வந்துற்றால். வீடுவது – வீழ்வது. அருத்தி – ஆசை.

இனி இச்செய்யுளுக்கு நேரே காணும் பொருளே யன்றி ஓர் அவலப் பொருளும் தோன்றுகிறது: 'என்னைக் கொண்டு செல்ல காலன் வந்தனன் எனினும், உண்ணவேண்டும் என்ற ஆசை ஒழிந்திலது; தேவர்களுக்கும் உயிர் வீடுவது மெய்தானே; பெண் என எண்ணி என்னை விட்டுவிடாதே,' என்று சாயாதேவி சொற்றனள் என்க.

உண்பான்: 'செய்பான்' என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

14. எயிறு: வாய்க்கு இலக்கணை. இடை – அவள் வாயினிடை. அரற்றியது – புலம்பியது. அயர்த்து எய்த்தார் – வருந்தி இளைத்தார்கள். இமைப்பு – மாத்திரை. பெரிய கோளரி பிறந்தான் எனப் பெயர்ந்தான் என்க. கோளரி – நரசிம்மன்.

இச்செய்யுளுள் உவமையணி அமைந்தது.

15. 'கணத்தில் குடர் கொள்' என்க. கையின் – கையோடு. விசும்பு – ஆகாயம். முள் வாய் பொருப்பின் முழை – முட்செடிகள் பொருந்திய மலையின் குகை. அர கொடு – பாம்புகளைக் கவர்ந்து கொண்டு.

கொடு: 'கொண்டு' என்பதன் இடைக்குறை. தடக்கை: உரிச் சொற்றொடர். திண்கலுழன் பண்புத்தொகை. குடர்: கடைப்போலி.

இச்செய்யுள் உவமையணி. முள்: அரக்கியின் பல். பொருப்பு: அவள் உடல். குகை: அவள் வாய். அரவு: அவள் குடர். கலுழன்: அநுமன்.

16. சாகா மிருகம் – குரங்கு; சாகை – குரங்கு. 'மா கால் அசைப்ப, வடம் மண்ணின் உற, வாலொடு ஆகாயம் உற்ற கதலி' என்க. கதலி – காற்றாடி. கால் – காற்று.

இச்செய்யுள் உவமையணி. காற்றாடி: அநுமன். காற்றாடியின் வால்: அநுமனின் வால். நூல்: அவள் குடர். இன்னும் கீழே சுற்றப்பட்டுக் கிடக்கும் வடம்: அவள் குடரும், உடலும்.

17. மேரு கிரி கீழ் ஆ நீண்டான் – மேருமலையும் தனக்குக் கீழாகுமாறு மிக உயரத்தில் சென்றுவிட்டான். 'வயம் கதி......பூண்டான்' –தன் வலிய வேகத்தை மனோ வேகத்திலும் அதிகம் எனும்படி கொண்டான். அருக்கன் – சூரியன்.

'கீண்டான்' முதலியவற்றை முற்றெச்சங்களாக்கியும் பொருள் கொள்ளலாம். மாண்டான், கீண்டான், நீண்டான், பூண்டான் ஆகியவற்றிற்குப் பகுதிகள் முறையே மாள், கீள், நீள், பூண் என்பன.

18. 'கற்பக காட்டை அண்மி விசும்பிடைச் செல்லும் வீரன், நோக்கான், மூதூர் விலங்கி, சோலைத்து, ஓர் வரையில் பாய்ந்தான்' என்க. அகம்பு – சேற்று. பிரசம் – தேன். கனகம் தசம்பு – பொன்மயமான கலசங்கள். காஞ்சில் – ஒரு மதிலுறுப்பு. கடி – காவல். நோக்கான் – நோக்காதவனாய்.

முதுமை + ஊர் = மூதூர்; பண்புத் தொகை.

19. மேக்கு உற செல்வோன் - மேலோங்கிச் செல்பவனாகிய அநுமன். இலங்கை வெற்பு – இலங்கையைச் சார்ந்ததாகிய அப்பவள மலை. நூக்குறந்து – அசைக்கப்பட்டு. சிந்தும் கலம் – தன்னிடத்தே யுள்ள பொருள்களை யெல்லாம் சிந்துகின்ற மரக்கலம். அசைகின்ற மலைக்கு அழிகின்ற மரக்கலம் உவமை காட்டப்பட்டது.

அன்றே: ஈற்றசை.

வினாக்கள்

1. கம்பரைப்பற்றிக் குறிப்பு வரைக.
2. சுந்தரகாண்டம்: குறிப்பு வரைக.
3. இத்தொடர்களுக்குப் பொருள் தருக:
   (அ) வெண்டளக் கனக மாட வீதி.
   (ஆ) வன்றந்த வரிகோள் நாகம்; பொன்றந்த முழைகள்.

(இ) பொன்பிறழ் சிமயக் கோடு பொடியுற.

(ஈ) 'நாலிரேண்டு உலக மூன்றும் நடுக்குற • அடுக்கி நாகர் – மேலின்மே லின்ற காறுஞ் சென்ற கூலம்.'

(உ) உண்பான் அருத்திய தொழிப்பரியது.

4. இடஞ்சுட்டிப் பொருளும் தருக:

(அ) 'உய்து நாம் என்ப தென்னே உறுவலிக் கலுழன் ஊழின் எய்தினன்.'

(ஆ) 'ஓயாது உயர்ந்த விசை கண்டும் உணர்கில்லாய்.'

(இ) 'பெண்பால் எனக்கருது பெற்றியொழி.'

5. இடஞ் சுட்டி விளக்குக:

(அ) 'வன்பறழ் வாயிற் கவ்வி வல்லியம் இரிந்த.'

(ஆ) 'வாலினால் அளந்தான்.'

(இ) 'கதலிக்கு உவமையானான்.'

(ஈ) 'தளர்ந்து சிந்தும் கலமெனத் தக்கது.'

6. அநுமன் காலூன்றியபோது மலைக் குற்ற நிலையினைக் கம்பர் எவ்வாறு புனைந்து கூறுகிறார்?

7. அநுமன் சென்ற விசையினைப் புலப்படுத்துக.

8. வான் சிறையினன் வேலையைக் கிழிய வீசி அமுதங் கொண்டு சென்ற வரலாறு யாது?

9. 'கயிலையங்கிரியும் ஒத்தான்' யாவன்? எங்ஙனம்?

10. அங்கார தாரை யார்? அவள் பெற்றிருந்த வரம் யாது? அவள் தோற்றம் எத்தகையது?

11. 'நீ யாரை' என்ற வினாவுக்கு அரக்கி விடுத்த விடை யாது? அவ் விடையினுள் கிடக்கும் அவலப்பொருளினைப் புலப்படுத்துக.

12. அங்காரதாரையின் முடிவினைப்பற்றிக் கம்பர் கூறுமாறு வரைக.

13. அரக்கியை அழித்து அவள்தன் குடருடன் அநுமன் எழுந்த காட்சியைக் கம்பர் எவ்வாறெல்லாம் புனைந்துரைக்கிறார்?

14. 'தலம்புடை' என்று தொடங்கும் கவிதைக்குப் பதவுரை தருக.

பயிற்சி

இப்பாடப் பகுதியை ஆதாரமாகக்கொண்டு இங்கே கொடுக்கப்பட்டுள்ள பொருள்பற்றிக் கட்டுரைகள் வரைக.

1. கம்பர் கவித்திறன்.

2. அநுமன் வலிமை.

3. திருத்தொண்டர் புராணம்

பூசலார் நாயனார் புராணம்

[மேன்மை பொருந்திய சிவனடியார்களின் பழமையான வரலாறுகளைக் கூறும் நூலாதலின் திருத்தொண்டர் புராணம் என்று பெயர் பெற்றது. புராணம்—பழைய வரலாறு. இஃது இந்நூலாசிரியர் இட்ட பெயர். ஆயின், இதற்குப் பெரிய புராணம் என்ற பெயரே பெரு வழக்கினதாக உள்ளது. சைவத் திருமுறைகளில் இது பன்னிரண்டாவதாகும்.

திருத்தொண்டர் புராணம்: ஆறாம் வேற்றுமைத் தொகை.

இதன் ஆசிரியர் சேக்கிழார். இவர்க்கிது குடிப் பெயர். இயற் பெயர் அருண்மொழித் தேவர் என்பது. இவர்தம் ஊர் தொண்டை நாட்டிலுள்ள குன்றத்தூர் என்பது. வேளாளர் மரபு. சிவ சமயம். இவர் காலம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு. 12-ஆம் நூற்றாண்டு என்பாரும் உளர்.

அபாய சோழனின் வேண்டுகோட் கிணங்கி இந்நூலைச் செய்தார் இவர்.

'நாயனார்' என்பது சிவ சமயக் குரவர்களுக்கு வழங்கும் பெயர். பூசலார் நாயனார், காஞ்சியில் காடவர்கோன் கழற்சிங்கன் என்ற பல்லவ மன்னன் ஆண்ட காலத்தில், திருநின்றவூரில் வாழ்ந்தவர். சிவனாருக்குக் கோயிலெடுக்க விழைந்த இவர், பொருளும் பிறவும் கிட்டாமையால், தம் சிந்தையினாலேயே நினைந்து மனக்கோயில் ஒன்று எடுத்தார். அவ்வரலாறு இங்கே கூறப்படுகின்றது.]

திருநின்றவூரின் சிறப்பு

1. உலகினில் ஒழுக்கம் என்றும்
   உயர்பெருந் தொண்டை நாட்டு
நலமிகு சிறப்பின் மிக்க
   நான்மறை விளங்கு மூதூர்
குலமுதற் சீலம் என்றுங்
   குறைவிலா மறையோர் கொள்கை
நிலவிய செல்வம் மல்கி
   நிகழ் திரு நின்ற வூராம்.

பூசலார் கல்வி

2. அருமறை மரபு வாழ
   அப்பதி வந்து சிந்தை
தருமுணர் வான எல்லாந்
   தம்பிரான் கழல்மேற்சார

வருநெறி மாரு அன்பு
வளர்ந்தெழ வளர்ந்து வாய்மைப்
பொருள்பெறு வேத நீதிக்
கலையுணர் பொலிவின் மிக்கார்.

கோயிலெடுக்க விழைவு

3. "அடுப்பது சிவன்பால் அன்பர்க்
காம்பணி செய்தல்" என்றே
கொடுப்பதெவ் வகையுந் தேடி
அவர் கொளக் கொடுத்துக் கங்கை
மடுப்பொதி வேணி ஐயர்
மகிழ்ந்துரை வதற்கோர் கோயில்
எடுப்பது மனத்துக் கொண்டார்
இருநிதி இன்மை எண்ணுர்.

மனக் கோயில்

4. மனத்தினுற் கருதி எங்கும்
மாநிதி வருந்தித் தேடி
'எனைத்துமோர் பொருட்பே றின்றி
என்செய் கேன்,' என்று நைவார்,
நினைப்பினுல் எடுக்க நேர்ந்து
நிகழ்வுறு நிதிய மெல்லாம்
தினைத்துணை முதலாத் தேடிச்
சிந்தையாற் றிரட்டிக் கொண்டார்.

5. சாதனத் தோடு தச்சர்
தம்மையும் மனத்தால் தேடி
நாதனுக் கால யஞ்செய்
நலம்பெறு நன்னுட் கொண்டே
ஆதரித் தாக மத்தால்
அடிநிலை பாரித் தன்பால்
காதலிற் கங்குற் போதுங்
கண்படா தெடுக்க லுற்ருர்.

6. அடிமுதல் உபானம் ஆதி
யாகிய படைக ளெல்லாம்
வடிவுறும் தொழில்கள் முற்ற
மனத்தினால் வகுத்து மான
முடிவுறு சிகரந் தானும்
முன்னிய முழத்திற் கொண்டு
நெடிதுநாள் கூடக் கோயில்
நிரம்பிட நினைவாற் செய்தார்.

7. தூபியும் நட்டு மிக்க
சுதையுநல் வினையுஞ் செய்து
கூவலும் அமைத்து மாடு
கோயில்சூழ் மதிலும் போக்கி
வாவியும் தொட்டு மற்றும்
வேண்டுவ வகுத்து மன்னுந்
தாபனஞ் சிவனுக் கேற்க
விதித்தநாள் சாரு நாளில்,

காடவர் கோமானின் கற்கோயிலும் கனவும்

8. காடவர் கோமான் கச்சிக்
கற்றளி எடுத்து முற்ற
மாடெலாஞ் சிவனுக் காகப்
பெருஞ்செல்வம் வகுத்தல் செய்வான்
நாடமா லறியா தாரைத்
தாபிக்கும் அந்நாள் முன்னாள்
ஏடலர் கொன்றை வேய்ந்தார்
இரவிடைக் கனவி லெய்தி,

9. 'நின்றவூர்ப் பூசல் அன்பன்
நெடிதுநாள் நினைந்து செய்த
நன்றுநீ டால யத்து
நாளைநாம் புகுவோம்; நீஇங்(கு)
ஒன்றிய செயலை நாளை
ஒழிந்துபின் கொள்வாய்' என்று
கொன்றைவார் சடையார் தொண்டர்
கோயில்கொண் டருளப் போந்தார்.

காடவர்கோன் திருநின்றவூர்க்குச் சேறல்

10. தொண்டரை விளக்கத் தூயோன்
அருள்செயத் துயிலை நீங்கித்
திண்டிறல் மன்னன் 'அந்தத்
திருப்பணி செய்தார் தம்மைக்
கண்டுநான் வணங்க வேண்டும்'
என்றெழுங் காத லோடுந்
தண்டலைச் சூழல் சூழ்ந்த
நின்றவூர் வந்து சார்ந்தான்.

கோமான் ஊராரை வினுதல்

11. அப்பதி யணைந்து 'பூசல்
அன்பர்இங் கமைத்த கோயில்
எப்புடை யது?' என் றங்கண்
எய்தினுர் தம்மைக் கேட்கச்
'செப்பிய பூசல் கோயில்
செய்ததொன் றில்லை' என்றுர்;
'மெய்பெரு மறையோ ரெல்லாம்
வருக' என் றுரைத்தான் வேந்தன்.

12. பூசுரர் எல்லாம் வந்து
புரவலன் தன்னைக் காண,
'மாசிலாப் பூச லார்தாம்
யார்?'என, மறையோ ரெல்லாம்
'ஆசில்வே தியனிவ் வூரான்'
என்றவர் அழைக்க ஒட்டான்
ஈசனுர் அன்பர் தம்பால்
எய்தினுன் வெய்ய வேலான்.

அவன் நாயனுரைத் தொழுது வினுதல்

13. தொண்டரைச் சென்று கண்ட
மன்னவன் தொழுது 'நீர்இங் (கு)
எண்டிசை யோரும் ஏத்த
எடுத்தஆ லயந்தான் யாதிங்(கு)?

அண்டர்நா யகரைத் தாபித்
தருளுநாள் இன்றென் றும்மைக்
கண்டடி பணிய வந்தேன்
கண்ணுதல் அருள் பெற்(று)' என்றான்.

பூசலார் மறுமொழி

14. மன்னவன் உரைப்பக் கேட்ட
அன்பர்தாம் மருண்டு நோக்கி,
'என்னையோர் பொருளாக் கொண்டே
எம்பிரான் அருள்செய் தாரேல் •
முன்வரு நிதியி லாமை
மனத்தினால் முயன்ற கோயில்
இன்னதாம்' என்று சிந்தித்
தெடுத்தவா றெடுத்துச் சொன்னார்.

முடிவு

15. அரசனும் அதனைக் கேட்டங்
கதிசயம் எய்தி 'என்னே
புரையறு சிந்தை யன்பர்
பெருமை!' என் றவரைப் போற்றி
விரைசெறி மாலை தாழ
நிலமிசை வீழ்ந்து தாழ்ந்து
முரசெறி தானை யோடு
மீண்டுதன் மூதூர் புக்கான்.

16. அன்பரும் அமைத்த சிந்தை
ஆலயத் தரனார் தம்மை
நன்பெரும் பொழுது சாரத்
தாபித்து நலத்தி னோடும்
பின்புபூ சனைக ளெல்லாம்
பெருமையிற் பலநாட் பேணிப்
பொன்புனை மன்று ளாடும் •
பொற்கழல் நீழல் புக்கார்.

திருத்தொண்டர் புராணம் : குறிப்புரை

1. குலம் முதல் சீலம் – நற்குலத்திற்கு முதன்மையாதல் வேண்டிய நல்லொழுக்கம். மறையோர் கொள்கை – அந்தணர்க்குரிய நியமங்கள். தொண்டை நாட்டில், நான்மறை விளங்கும் மூதூர், திருநின்றவூர்.

நான்கு + மறை = நான்மறை.

2. சிந்தை தரும் – மனத்தின்கண் நிகழ்கின்ற. வாய்மைப் பொருள் பெறு – உண்மைப் பொருள் அமைந்த. மிக்கார் – சிறந்து விளங்கினார்.

அருமை + மறை = அருமறை: பண்புத்தொகை. உணர் பொலிவு: வினைத் தொகை. கழல்: தானியாகு பெயர்.

3. அவர் கொளக் கொடுத்து – அவர்கள் பெற்றுக்கொள்ளும் வகையில் கொடுத்து. கங்கை மடு – கங்கையாறு. வேணி – சடை. கங்கை மடு: இருபெயரொட்டுப் பண்புத் தொகை. கோயில்: இலக்கணப்போலி.

4. பேறு இன்றி – பெறுதல் இன்றி. நிகழ்வுறு நிதியம் – வேண்டிய பொருள்கள்.

மாநிதி: உரிச்சொற்றொடர். பேறு: முதனிலை திரிந்த தொழிற் பெயர்; 'பெறு' முதனிலை (பகுதி).

5. சாதனம் – கருவிகள். ஆதரித்து – விரும்பி. ஆகமத்தால் – சைவாகமங்களில் சொன்னபடி. கண்படாது – தூங்காமல்: 'கண்படு' பகுதி.

6. அடி முதல் உபானம் – அடியில் உள்ள முதல் அடுக்குச் சித்திர வரிசை. படைகள் – அடுக்குகள். மான முடிவு உறு சிகரம் – மாட்சிமை பொருந்திய, முடிவில் வைக்கப்படும் சிகரம். முன்னிய – சிற்ப நூலிற் கூறிய. கூட – செல்ல, கழிய. உறுசிகரம்: வினைத்தொகை.

7. சுதை – சுண்ணம். கூவல் – கிணறு. மாடு – பக்கத்தில். வாவி – குளம். மன்னும் தாபனம் – நிலைபெறும் பிரதிஷ்டை.

தொட்டு: 'தொடு' பகுதி.

8. காடவர் கோன்: பல்லவர்க்குரிய பட்டப் பெயர். கச்சி–காஞ்சிபுரம். கல் தளி – கற்கோயில். மாடு – செல்வம். 'மாடு......செய்வான்' – தன் செல்வம் முழுவதும் சிவனார்க்கு ஆகும்படி மிகுந்த செல்வத்தை ஏற்படுத்திய வளமிய அவன். நாட மால் அறியாதார் – மால் நாட அறியாதார் – சிவனார்.

மால் நாட அறியாதார்: பிரமனும் விட்டுணுவும் தாமே பெரியவர் என ஒருவருக்கொருவர் மாறுபட்டுப் போருடற்றினர். சிவனார் அவர்தமக் கிடையில் பெரியதோர் நெருப்பு மலையாய்த் தோன்றவும், அம்மலையின் அடியையாவது முடியையாவது முதலில் கண்டு வருபவரே பெரியர் என முடிவு செய்து, பிரமன் அன்ன வுருவாய் முடியைக் காணவும், திருமால் வராக வுருவாய் அடியைக் காணவும் சென்றனர். இருவருமே தோற்று வெட்கினர்.

9. கொண்டு அருள – தமக்கு இடமாகக் கொள்ள. புகுவோம்: 'புகு' பகுதி.

10. தொண்டரை விளக்க – தொண்டர் பெருமையை விளக்க. தண்டலை – சோலை. திண்மை + திறல் = திண்டிறல்.

11. எப்புடையது – எந்தப் பக்கத்தில் உள்ளது. புடை – பக்கம். எ + புடை = எப்புடை.

12. பூசுரர் – அந்தணர். ஆசு – குற்றம். வேதியன் – வேதத்தில் வல்லவன்.

13. அண்டர் – தேவர். கண் நுதல் – சிவனுர். நுதல் – நெற்றி. 'நுதல் கண்' என்பது 'கண் நுதல்' என முன்பின்னுக மாறி வந்தது. எட்டு + திசை = எண்டிசை.

14. முன் வரும் நிதி இலாமை – எவற்றிற்கும் முக்கியமாக வர வேண்டுவதாகிய செல்வம் இன்மையால்.

15. புரை – குற்றம். விரை – மணம். தானை – சேனை. புக்கான்: புகு, பகுதி; ஆன், ஆண்பால் வினைமுற்று விகுதி; பகுதி ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டிற்று.

16. ஆரூர் – சிவனுர். பொன் புனை மன்று – பொன்னம்பலம். கழல்: தானியாகு பெயர். நீழல்: நீட்டல் விகாரம்.

வினுக்கள்

1. சேக்கிழார்: குறிப்பு வரைக.

2. திருநின்றவூர் எத்தகைய சிறப்பு வாய்ந்தது?

3. பூசலார் சிந்தையால் கோயி லெடுத்து முடித்த வகையினை வரைக.

4. காடவர் கோமான் கனவில் சிவனுர் உரைத்த தென்ன?

5. காடவர் கோன் திருநின்ற வூரை அடைந்ததிலிருந்து அவன் திரும்பியவரை நடந்தவற்றை நும் சொந்த சொற்களில் வரைக.

6. இத்தொடர்களுக்குப் பொருள் வரைக:
   (அ) குலமுதற் சீலம் என்றும் குறைவிலா மறையோர்
   (ஆ) மடிப்பொழி வேணி ஐயர்
   (இ) பொன்புனை மன்றுள் ஆடும் பொற் கழல் நீழல் புக்கார்.

7. 'காட மால் அறியாதார்'—வரலாறு யாது?

பயிற்சி

கட்டுரை வரைக:

1. காடவர் கோன் சைவப்பற்று.

2. பூசலார் பெருமை.

4. தேம்பாவணி

வளன் சனித்த படலம்

[தேம்பாத (குன்றாத) அழகினையுடைய நூலாதலின் 'தேம்பா அணி' எனப் பெயர் பெற்றது. தேம் + பா + அணி எனக்கொண்டு இனிமையான பாட்டு வரிசைகளைக்கொண்ட ஒரு நூலாதலின் அப்பெயர் பெற்றது எனவும் கொள்ளலாம்.

இந்நூல் மூன்று காண்டங்களுள் முப்பது படலங்களைக் கொண்டது. பாடப் பகுதி வளனது பிறப்பினைக் கூறும் படலமாதலின் 'வளன் சனித்த படலம்' எனப் பெயரேற்றது.

'பைபிள்' என்னும் திருமறையே இந்நூலுக்கு முதனூலாகும். ஆகவே இஃது ஒரு வழி நூல்.

இந்நூலாசிரியர் காஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி என்னும் இத்தலி நாட்டு அறிஞர் ஆவர். கிறிஸ்து சமயச் சேவைக்கெனத் தமிழ் நாடு போந்த இவர் வடக்கன்குளம் என்னும் ஊரில் தங்கிச் சுப்பிரதீபக் கவிராயர் என்பாரிடம் தமிழ் பயின்று புலமை எய்தினர். இவரைத் தமிழகம் வீரமாமுனிவர் என வழங்குகின்றது. இவர் உரோமன் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்; 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியினர்.

பாடமாக வந்துள்ள வரலாறு: சூதேயம் என்பது ஒரு நாடு. இஸ ரேலர் அந்நாட்டுக் குடிகள். அவர்களை சவுல் என்பான் ஆண்டுவந்தான். பிலித்தையர் என்னுமோர் மறக்குடியினர் இஸரேலர்க்கு எப்போதும் துயரிழைத்துவந்தனர். இருதரப்பினர்க்கும் போர் மூண்டது. பிலித்தையர் பக்கலில் கோலியாத்து என்னும் ஓர் அரக்கன் இருந்தான். அவன் எதிரில் நிற்க ஆற்றாமல் சவுலும் அவன் படைவீரரும் தயங்கிக் கிடந்தனர். அரக்கன் இழிசொல் பல சொல்லி இஸரேலரை மல்லுக்கிழுத்தனன்.

இந்நிலையில் பெத்தலே என்னும் சிற்றூரிலிருந்து தாவீதன் என்னுமோர் சிறுவன் இஸரேலின் படைவீரராக விருந்த தன் தமையன்மாரைப் பார்க்கச் சென்றனன். சென்றவன் அரக்கனின் இழிசொற்களைக் கேட்டுப் பொறுஞை, அரசனிடம் உத்தரவு பெற்றுத் தானே அவ்வரக்கனுடன் போர் செய்யச் சென்று, கவண் எறிந்து அவனை அழித்தனன்.]

தாவீதன் வினு

1. இன்ன வாய்பகல் நாற்பதும் இரிந்தபின்,
அண்ணர்
முன்னர் மூவரே முரண்செயப் போயினர்;
அவரைத்
துன்ன ஆசையால் தொடர்ந்திள தாவீ
தனெய்தி,
அன்ன யாவையும் அஞ்சினர் அறைதலுங்
கேட்டான்.

2. கேட்ட வாசகம் கிளர்திறம் நெஞ்சிடத்(து) எரியை
ஈட்ட லாமென எழுந்(து),'உளம் நினைந்தவை' ஆக்கிக்
காட்ட வாய்மையிற் கடந்தவல் கடவுளை, நகைப்பு
வேட்ட லால்விளி விழுங்கிய கயவனோ?' என்றான்.

தாவீதன் உறுதிமொழி

3. 'கைவ யத்தினுற் கருத்திடத்(து) உடலினூங்(கு) ஓங்கும்
பொய்வ யத்தினன் புகைந்தசொற்(கு) அஞ்சுவ தென்னோ?
மெய்வ யத்தினல் விழைசெயம் ஆவதோ? கடவுள்
செய்வ யத்தினுற் சிறுவனுன் வெல்லுவேன்' என்றான்.

அரசன் உரை

4. என்ற தண்ணல்கேட் டிவன்தனைக் கொணர்மி னென் றிசைப்ப
சென்ற அன்னநற் சேடனை நோக்கலும், 'நீயோ
பொன்ற உன்னினுய்? பொருப்பினைப் பெயர்த் தெறிந் துவமை
வென்ற திண்மையான் வெருளிமுன் நீயெவன்?' என்றான்.

தாவீதன் வீரவுரை

5. ஏந்தல் ஈரடி இறைஞ்சிய இளவலும் அறைவான்;
"காய்ந்த தோர்பகை கடுத்ததன் பவஞ்செயின், மீட்டும்
வேய்ந்த தோர்பகை வேண்டுமோ? கடவுளைப் பகைத்து
வாய்ந்த ஆண்மையை மறுத்தனே எவன்வெல்லான் ஐயா!

6. திறங்க டுத்தகொல் சிங்கமும் உளியமும், பாய்ந்து
மறங்க டுத்ததிர் வல்லியத் தினங்களும் எதிர்ந்து
கறங்க டுத்தகால், கழுத்தினை முருக்கிநான்
கொன்றேன்!
அறங்கெ டுத்தவன் அவற்றினும் வலியனோ?"
என்றான்.

அரசன் இசைவு

7. அரிய ஆண்மையை அதிசயித்(து) அரசன்நன்
றென்று
விரிய ளாவொளி வேலொடு தனதுபல் கருவி
உரிய போர்செய ஒருங்குதந் தனன்;அவற்
றொடுதான்
திரிய ஆய்முறை தெரிகிலேன் எனமறுத்
தகன்றான்.

தாவீதன் போருக்கெழுதல்

8. தெரிந்த ஆய்ந்தஐஞ் சிலையொடு கவணெடுத்
தெவரும்
இரிந்த பாலனை நோக்கியுள் அதிசயித் திரங்க,
விரிந்த ஆசையால் வேதியர் ஆசியைக் கூறப்
பிரிந்த கால்,ஒலி பெருகவாங் கனைவரும் ஆர்த்தார்.

கோலியாத்தின் இகழுரை

9. ஆர்த்த ஓதைகேட்(டு), அரக்கனின்(று) அமர்க்
கெதிர் வருகப்
பார்த்த பாலனைப் பழித்தெழுந் தியாவரும் அஞ்சக்
கூர்த்த வேலொடு குறுகவந்(து) அகல்கரு முகிலிற்
பேர்த்த கோடைநாட் பேரிடி யெனவுரை
செய்தான்.

10. "நீய டா!எதிர் நிற்பதோ? மதம்பொழி கரிமேல்
நாய டா!வினை நடத்துமோ? கதங்கொடு நானே
வாய டா!பிளந் துயிர்ப்பிட மறுகிநீ நுண்துாள்
ஆய டா!உல கப்புறத் தேகுவாய்!" என்றான்.

தாவீதன் கவணெறிதல்

11. "வெல்லவை வேல்செயும் மிடலதுன் மிடலடா! நானோ,
எல்லை ஆதர(வு) இயற்றெதி ரிலாத்திறற் கடவுள்
வல்லை யோடுனை மாய்த்துடல் புட்(கு)இரை யாக
ஒல்செய் வேன்"எனா உடைக்கவண் சுழற்றினன் இளையோன்.

அரக்கன் அழிவு

12. கல்லை ஏற்றுங் கவணினைச் சுழற்றலும் அக்கல்
ஒல்லை ஓட்டலும் ஒருவரும் காண்கிலர்! இடிக்கும்
செல்லை ஒத்தன சிலைநுதற் பாய்தலும் அன்னான்
எல்லை பாய்ந்(து)இருள் இரிந்தென வீழ்தலும் கண்டார்.

தேம்பாவணி : குறிப்புரை

1. *பகல் நாற்பது* — நாற்பது நாட்களாக இஸ்ரேலரும் பெலிஸ்தியரும் எதிரூன்றி நின்றனர். *அண்ணர்* — அண்ணன்மார்கள். *அன்ன* — கோலியாற்று என்னும் அரக்கனால் கூறப்பட்ட தூஷண மொழிகள்.

அஞ்சினர்: முற்றெச்சம்.

2. *கிளர் திறம் நெஞ்சிடத்து* — மிக்க கிளர்ச்சியும் ஆற்றலும் உடைய தாவீதனின் நெஞ்சிலே. *ஈட்டலாம் என* — மூட்டியதால். *வாய்மை* — சொல். *நகைப்ப வேட்டல்* — இகழ விரும்புதல். *விளி* — சாவு.

3. *வயம்* — வலிமை. *உடலின் ஊக்கு* — தன் உடலால் மேம்பட்டெழுகின்ற. கோலியாற்று என்னும் இவ்வரக்கன் ஒன்பதடி உயரமுடையனாக விருந்தான். ஆகவே அவன் உடலால் கருத்திடத்துப் பொய் வலிமை உண்டாயிற்று. *மெய்* — உடல்.

4. *அண்ணல்* — சவுல் அரசன். *சேடன்* — சிறுவன். *பொன்ற* — சாக. *பொருப்பு* — மலை.

5. *ஏந்தல்* — அரசன். 'காய்ந்தது (சினந்ததாகிய) ஓர் பகை கடுத்த (கொடிய) தன் பாவத்தைச் செய்ய ஆரம்பித்தால்,' என இரண்டாமடியைக் கொள்க.

மறுத்தன்: வினையாலணையும் பெயர்.

6. *உளியம்* — கரடி. *வல்லியம்* — புலி. *கடுத்த* — விரைந்து பாய்ந்த. *கறங்கு* — சுழல் காற்றைப்போல. தாவீதன் வெளிதனில் தன் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்த காலத்தில் தன்னை எதிர்த்து வந்த கரடி முதலியனவற்றைத் தான் ஒருவனாகவே எதிர்த்துக் கொன்றனன்.

கொல்சிங்கம்: வினைத்தொகை.

7. தான் ஆடுகளை மேய்த்துவரும் சிறுவனுதலின் 'போர்க்கருவிக ளோடு உலாவ ஆய்முறை தெரிகிலேன்' என்றனன்.

8. ஐந்து + சிலை = ஐஞ்சிலை. சிலை – கல்; கவணில் வைத்து எறிவதற் கென. பிரிந்தால் – பிரிந்து சென்றபோது.

9. ஓதை – ஓசை. அகல் கரு முகிலின் பேர்த்த – அகன்ற கரிய மேகத்திடத்தினின்று பெயர்ந்து வந்த. முகிலிற் பேரிடி: உவமையணி.

10. உயிர்ப்பிட – ஊதினல். மறுகி – சுழன்று.

11. வை – கூரிய. மிடல் – வலிமை. எல்வை – எல்லை – காலம், பொழுது. வல் கை – வல்ல கைத் துணை. புள் + கு = புட்கு. ஒல் – விரைவு. எனு – என்று சொல்லி.

12. தாவீதன் கவணைச் சுழற்றியதனையும் கல்லை விரைவாகச் செலுத்தியதனையும் ஒருவரும் சரியாகப் பார்க்க இயல வில்லை. அவ்வளவு விரைவுடன் கல்லை அனுப்பினன். செல் – மேகம். அன்னுன் – அரக்கன். எல்லை – சூரியன். இரிந்த + என = இரிந்தென. கவண்கல் கதிரவனுக்கும், இருள் அரக்கனுக்கும் உவமை.

வினுக்கள்

1. தேம்பாவணி ஆசிரியரைப்பற்றிக் குறிப்பு வரைக.

2. 'விளி விழுங்கிய கயவன்'—நயம் காட்டுக.

3. உடல் வலிமையைப்பற்றித் தாவீதன் கருத்து என்ன?

4. 'நீயோ பொன்ற வுன்னினுய்?'—இடஞ் சுட்டுக.

5. 'உவமை வென்ற திண்மையான்'—இஃது யாவர் கூற்று? இத் தொடரால் குறிக்கப்பட்டவன் யாவன்? அவனைப்பற்றிச் சிறு குறிப்பு வரைக.

6. 'நீ சாவ நினைத்தனையோ?' என்ற வினுவிற்குத் தாவீதன் கொடுத்த மறுமொழி யாது?

7. 'அகல் கரு முகிலிற் பேர்த்த கோடைகாட் பேரிடி' – இடமும் பொருளும் பொருத்தமுங் கூறுக.

8. அரக்கன் தாவீதனை எவ்வாறு இகழ்ந்தனன்?

9. அரக்கன் கூறிய இகழ் மொழிக்குத் தாவீதன் கூறிய எதிர் மொழி யாது?

10. சுற்றியிருந்தவர் காணுததும் கண்டதும் யாவை?

பயிற்சி

இப்பாடப் பகுதியினுல் அறியப்படுகின்ற அறத்தினையும் இன்றுள்ள உலக நிலையினையும் ஆய்ந்து ஒரு கட்டுரை வரைக.

IV

சிறு நூல்களும் பிறவும்

1. திருவாரூர் நான்மணி மாலை

[வெவ்வேறு வகையான நான்கு மணிகளை அமைத்து மாலை தொடுத்தாற்போல வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம், ஆசிரியப்பா என்ற செய்யுள் மணிகள் முறையே அந்தாதியாக அமையப் பாடப்பட்ட நூல் நான்மணி மாலை எனப்படும். திருவாரூரில் எழுந்தருளியுள்ள சிவனார் பெருமையைப் பாடுவது திருவாரூர் நான்மணி மாலை. திருவாரூர் 'ஆரூர்' எனவும் வழங்கப்படும்.

இந்நூலின் ஆசிரியர் குமரகுருபர அடிகள் 'ஸ்ரீவைகுண்டம் என்னும் திருப்பதியில்' சண்முக சிகாமணிக் கவிராயருக்கும் சிவகாமசுந்தரி யம்மையாருக்கும் பிறந்தவர். இவர் முதல் ஐந்தாண்டுகள்வரை பேச்சின்றி ஊமையாய் இருந்தார் எனவும், பின் இறையருளால் அக்குறைபாடு நீங்கப் பெற்றார் எனவும் கூறுவர். மாசிலாமணி தேசிகர் என்பாரைத் தமக்கு ஞானாசிரியராகக் கொண்டு துறவு பூண்டார். இவருடைய பாடல்கள் ஓசை நயம் மிக்கவை.]

(நேரிசை வெண்பா)

தம்மேனி வெண்பொடியால் தண்ணளியால் ஆரூரர்
செம்மேனி கங்கைத் திருநதியே;—அம்மேனி
மானே யமுனை;யந்த வாணிநதி யுங்குமரன்
தானே; குடைவேந் தனித்து.

(கட்டளைக் கலித்துறை)

தன்னொக்குஞ் செல்வக் கமலைப் பிரான்செஞ் சடாடவிமற்(று)
என்னொக்கும் என்னின், எரியொக்கும்; கொன்றை எரியிலிட்ட
பொன்னொக்கும்; வண்டு கரியொக்கும், கங்கையப் பொன்செய்விக்கும்
மின்னொக்கும்; பொன்செய் கிழக்கொல்லன் ஒக்குமவ் வெண்பிறையே

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் விடப்பட்டது)

(நேரிசை யாசிரியப்பா)

வண்டுகூட் டுண்ண, நுண்துளி பிலிற்றித்
தண்தேன் உறைக்குந் தடமலர்ப் பொதும்பரின்
விழுக்குலை தெறிப்ப விட்புலத் தவர்க்குப்
பழுக்காய் தூக்கும் பச்சிளங் கமுகிற்
செடிபடு முல்லைக் கொடிபடர்ந் தேறித்
தலைவிரித் தன்ன கிளைதொறும் பணைத்து,
மறித்துகீழ் விழுந்(து), அந் நறுந்துணர்க்
கொடிகள்
நாற்றிசைப் புறத்தும் நான்றன மடிந்து,
தாற்றிளங் கதலித் தண்டினிற் படர, அப்
பைங்குலைக் கமுகிற் படர்சிறை விரித்(து) ஒரு
கண்செய் கூந்தற் களிமயில் நடிப்ப
நெடுந்தாள் மந்திகள் குடங்கையிற் றூக்கி
முட்புறக் கனிகள் தாக்கக் கொட்புறும்
வானர மொன்று வருக்கைத் தீங்கனி
தானெடுத் தேந்துபு தலைமேற் கொண்டு
மந்திகள் தொடர மருண்டுமற் றந்தப்
பைந்துணர்க் கொடியிற் படர்தரு தோற்றம்
வடஞ்சூழ்ந்து கிடந்த நெடும்பெருங் கம்பத்(து)
அணங்கனுள் ஒருத்தி யாடினள் நிற்பப்
பெரும்பணை தாங்கி மருங்கினர் கொட்டக்
குடம்தலைக் கொண்டொரு கூன்கழைக் கூத்தன்
வடந்தனில் நடக்கும் வண்ணம(து) ஏய்க்கும்
பூம்பணை மருதத் தீம்புனற் கமலைத்
திருநகர் புரக்குங் கருணையங் கடவுள்

....

மேவர வழங்குமால்: மன்ற
யாவரும் நமர்காள் இறைஞ்சுமின் நீரே.

---

2. வஞ்சப் புகழ்ச்சி

[வஞ்சப் புகழ்ச்சி என்பது ஓர் அணி. இதனை வடநூலார் நிந்தாஸ்துதி என்பார். இங்குக் கொடுக்கப்பட்டுள்ள பகுதிகள் ஜெபமாலை என்னும் நூலில் 'ஆத்துமப்பெண் நிந்தாஸ்துதி' என்னும் அதிகாரத்தில் வருவன. ஆசிரியர் தஞ்சைக் கவிராயர் வேதநாயக சாஸ்திரியா ரவர்கள்.

கிறிஸ்துவைப் பழிப்பதுபோல் புகழும் பாடல்கள் இவைகள்.]

1. உன்றனின் செய்தி யானறிந் திலனோ
உடுப்பதற் கங்கியொன் றதனை
உவந்துசே வகர்தாம் பீலிபோட் டெடுத்தார்,
ஒன்றுமற் றம்மணத் திருந்தாய்,
அந்தநா ளுனக்கோர் மடத்திலும் இடமற்
றயல்வனத் திடைவிடை யடையும்
அகத்தினிற் பிறந்தாய், மிடியினா லுனைப்புல்
லணையின்மேற் கிடத்தின ரன்றோ?
கந்தையா லுன்னைப் பொதிந்ததும் அழுது
கதறிநீ பால்குடித் திருந்த
கவடமும் அறிவேன், தலைமுடி சாய்க்கக்
கழுமரத் திடமிருந் ததுவோ?
எந்தையே யுனக்கோர் நீசவா கனந்தான்
இருந்துனை ஆட்டுதோ ஐயா,
எழில்பெறு சீயோன் மகண்மண வாளா
இறைவனே, ஏசுநா யகனே!

2. அப்பனோ தச்சன், தாயரோ எளியகன்
னியாஸ்திரி, சமுத்திரத் தணுகி
அடர்ந்துமீன் பிடிக்கும் வலையருன் சீடர்,
ஆயமத் தேயுனக் கடுத்தோன்,
ஒப்பியே வெட்டுக் கிளியொடு தேனை
உண்டொரா ரணியமே கிடந்தங்
கொட்டகத் தோலை யுடுத்தவோ ரிருடி
உன்றன்முன் தூதனாய் வந்தோன்,
செப்புபா விகளே உன்சினே கிதர்கள்,
தினச்செல விடுபவன் திருடன்,
சேட்டனா யிருந்தோன் அசத்தியக் காரன்,
சின்னப்பன் கண்ணையுங் கெடுத்தாய்,

இப்படிக் கொத்த கொள்ளையி லெனை நீ
எப்படித் தாங்குவாய், ஐயா!
எழில்பெறு சீயோன் மகண்மண வாளா
இறைவனே, ஏசுநா யகனே!

---

3. சிலேடை

பாம்புக்கும் எலுமிச்சம் பழத்துக்கும்

பெரியவிட மேசேரும் பித்தர்முடி யேறும்
அரியுண்ணு முப்புமே லாடும்—எரிகுணமாம்
தேம்பொழியுஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்புமெலு மிச்சம் பழம்.

—காளமேகப் புலவர்.

---

4. மடக்கு

வனம டங்கலும் போதகம் வரியளி மருவும்
வனம டங்கலும் போதகக் குருளையு மயங்குங்
கனம டங்கலும் போதக வுங்களி மயில்கள்
கனம டங்கலும் போதகந் தரும்பல காட்சி.

இரட். யாத்திரிகம்—எய்ச். ஏ. கிருஷ்ண பிள்ளை

---

5. யானைமறம்

[புறங்கடையில் நிற்கும் கிள்ளியினுடைய யானையின் பெருமிதத்தைக் கூறுதல்.]

கொடிமதில் பாய்ந்திற்ற கோடும் அரசர்
முடியிடறித் தேய்ந்த நகமும்—பிடிமுன்பு
பொல்லாமை நாணிப் புறங்கடை நின்றதே
கல்லார்தோட் கிள்ளி களிறு.

—முத்தொள்ளாயிரம்.

---

6. சீட்டுக் கவி

[செய்யுள் வடிவிலுள்ள கடிதமே 'சீட்டுக் கவி' என்பது. இச்சீட்டுக் கவியினை இயற்றியவர் அட்டாவதானம் சரவணப் பெருமாள் கவிராயர் அவர்கள். பாண்டி நாட்டில் பரம்பைக் குடிக்குத் தெற்கேயுள்ள முதுகுளத்தூரில் பிறந்தவர் இவர்; வேளாண் மரபினர்; பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதி இவரது காலம்.]

கல்விச் சமுத்திரம் கமலா லயம்தமிழ்க்
கடன்மடை திறந்த வெள்ளம்
கற்பனை பிறப்பிடம் கலைமக ளிருப்பிடம்
கவிமாரி பொழியு மேகம்
சொல்விற் பனம்விளையும் மதுரக் களஞ்சியம்
தோன்றுகற் பூர தீபம்
சுகிர்தகுண அவதானி சரவணப் பெருமாள்கை
தொட்டெழுதி விட்ட சனது;
வில்லுக் கருச்சுனன் சொல்லுக் கரிச்சந்த்ரன்
வெற்றிக்கு விக்ர மார்க்கன்
வித்தைக் ககத்தியன் முத்துக் கறுப்பண
விலட்சணன் எதிர்ந்து காண்க:
மல்வெற்றி யாய்என்று தாய்என்று நீயென்று
மாலென்று வேலென்று கா
மாவென்று காவென்று நாவொன்று பாவொன்று
வருகின்ற தருள்புரி கவே.

---

7. தமிழ்த்தாய்

[இக்கவிதையின் ஆசிரியர் வரகவி சுப்பிரமணிய பாரதியா ரவர்கள். தமிழானது தானே தன் வரலாற்றைக் கூறுவதுபோல, நமக்கே யுரிய எளிய எழில் நடையில் இக்கவிதையை அமைத்திருக்கிறார் கவிஞர்.

கவிஞரவர்கள் திருநெல்வேலி எட்டயபுரத்தில் தோன்றியவர்கள். காலம் கி.பி. 1882–1921.]

1. ஆதிசி வன்பெற்று விட்டான்;—என்னை
ஆரிய மைந்தன் அகத்திய னென்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்த—நிறை
மேவும் இலக்கணஞ் செய்து கொடுத்தான்.

2. மூன்று குலத்தமிழ் மன்னர்—என்னை
மூண்டநல் லன்பொடு நித்தம் வளர்த்தார்;
ஆன்ற மொழிகளி னுள்ளே—உயர்
ஆரியத் திற்கு நிகரென வாழ்ந்தேன்.

3. கள்ளையுந் தீயையுஞ் சேர்த்து—நல்ல
காற்றையும் வான வெளியையுஞ் சேர்த்து
தெள்ளு தமிழ்ப்புல வோர்கள்—பல
தீஞ்சுவைக் காவியஞ் செய்து கொடுத்தார்.

4. சாத்திரங் கள்பல தந்தார்;—இந்தத்
தாரணி யெங்கும் புகழ்ந்திட வாழ்ந்தேன்;
நேத்திரங் கெட்டவன் காலன்—தன்முன்
நேர்ந்த தனைத்துந் துடைத்து முடிப்பான்.

5. நன்றென்றுந் தீதென்றும் பாரான்;—முன்பு
நாடும் பொருள்கள் அனைத்தையும் வாரிச்
சென்றிடுங் காட்டுவெள் ளம்போல்—வையச்
சேர்க்கை யனைத்தையுங் கொன்று நடப்பான்

6. கன்னிப் பருவத்தில் அந்நாள்—என்றன்
காதில் விழுந்த திசைமொழி யெல்லாம்
என்னென் னவோபெய ருண்டு;—பின்னர்
யாவும் அழிவுற் றிறந்தன கண்டீர்!

7. தந்தை யருள்வலி யாலும்,—முன்பு
சான்ற புலவர் தவவலி யாலும்,
இந்தக் கணமட்டுங் காலன்—என்னை
ஏறிட்டுப் பார்க்கவும் அஞ்சி யிருந்தான்!

8. இன்றொரு சொல்லினைக் கேட்டேன்!—இனி
ஏது செய்வேன்? என தாருயிர் மக்காள்!
கொன்றிடல் போலொரு வார்த்தை—இங்குக்
கூறத் தகாதவன் கூறினன் கண்டீர்!

9\. 'புத்தம் புதிய கலைகள்—பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்!
மெத்த வளருது மேற்கே—அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.

10\. 'சொல்லவுங் கூடுவ தில்லை;—அவை
சொல்லுந் திறமை தமிழ்மொழிக் கில்லை;
மெல்லத் தமிழினிச் சாகும்;—அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்!'

11\. என்றந்தப் பேதை யுரைத்தான்:—ஆ!
இந்த வசையெனக் கெய்திட லாமோ!
சென்றிடுவீ ரெட்டுத் திக்கும்:—கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு
சேர்ப்பீர்!

12\. தந்தை யருள்வலி யாலும்,—இன்று
சார்ந்த புலவர் தவவலி யாலும்,
இந்தப் பெரும்பழி தீரும்;—புகழ்
ஏறிப் புவிமிசை என்று மிருப்பேன்!

திருவாரூர் நான்மணி மாலை : குறிப்புரை

நேரிசை வெண்பா: பிரயாகை (அலகாபாத்து), திரிவேணி சங்கமத்தில் கங்கையும், யமுனையும், வாணியும் கலக்கின்ற காட்சி சிவனும், பார்வதியும், முருகனும் கூடியிருக்கும் காட்சியாகும் என்பது இப்பாடலின் கருத்து.

வெண்மையாலும் தண்மையாலும் சிவனார் மேனி கங்கை எனப்பட்டது. தம்மேனி வெண் பொடி – தம் மேனியிலுள்ள திருநீறு. அம் மேனி மான் – அழகிய மேனியையுடைய உமாதேவி. குமரன் – முருகன். குடைவேம் – (ஆகவே) யாம் தியானிப்போம்.

கட்டளைக் கலித்துறை: ஒக்கும் – ஒத்திருக்கும். கமலை – திருவாரூர். சடாடவி – சடைத் தொகுதியாகிய காடு. அடவி – காடு. கங்கை – கங்காதேவி. மின் – பெண்.

நேரிசை யாசிரியப்பா: கூட்டுண்ண — கொள்ளையிட. உறைக்கும் — துளிக்கும். பொதும்பர் — சோலை. விழு — சிறந்த. பழுக்காய் — பாக்கு. செடிபடு — செடியைப்போல் பரந்து வளர்ந்துள்ள. கிளை — கமுக மட்டை. பணைத்து — பருத்து. கான்றன மடிந்து — தொங்கி வளைந்து. தாறு இளங் கதலித் தண்டினில் — குலையினையுடைய இள வாழை மரத்தில். சிறை — சிறகு. கண் செய் கூந்தல் — தோகை. குடங்கை — உள்ளங்கை. முட் புறக் கனிகள் — பலாப் பழங்களை. கொட்புறும் — சுழன்று வரும். வருக்கை — பலா. ‘அந்தப் பைந்துணர்க் கொடி’ என்றது கமுக மரத்திலிருந்து தாழ்ந்து வாழையின்மீது படர்ந்த முல்லைக் கொடியை. பெரும்பணை — பெரிய பறை வகை. எய்க்கும் — ஒத்திருக்கும். பூம்பணை — அழகிய வயல். மேவர — விரும்ப. ஆல்: அசை. மன்ற — நிச்சயமாக.

ஒப்பனை: கமுகு, கம்பம்; முல்லைக்கொடி, கம்பத்தின் உச்சியிலிருந்து சுற்றிலும் கட்டப்பட்டுள்ள வடங்கள்; வாழை, அவ்வடங்களுக்கு முளைகள்; கமுகின் உச்சியில் ஆடும் மயில், கம்பத்தின் உச்சியில் ஆடும் பெண்; பலாக்கனிகளைத் தாக்கும் மந்திகள், பறையடிப்போர்; பலாப்பழத்துடன் கொடிமீது ஏறும் குரங்கு, குடத்துடன் மேல் செல்லும் கழைக் கூத்தன்.

இலக்கணம்: சடாடவி, சடா + அடவி, வடமொழி தீர்க்க சந்தி. விண் + புலம் = விட்புலம். கான்றன: முற்றெச்சம். படர்சிறை: வினைத் தொகை. ஏந்து — செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

வஞ்சப் புகழ்ச்சி : குறிப்புரை

1. பீலி போட்டு — சீட்டுப் போட்டு. “உன்றனின்......அம்மணத் திருந்தாய்”: கிறிஸ்துவைச் சிலுவையி லறைந்தபோது அவர்தம் மேலங்கியை, அது தைக்கப்படாமல் முழுவதும் நெய்யப்பட்டிருந்ததால், தங்களுக்குள் சீட்டுப்போட்டு எடுத்துக்கொண்டார்கள் சேவகர்கள். விடையடையும் அகம் — மாட்டுக் கொட்டில். மிடி — வறுமை. கவடம் — வஞ்சகம். கழுமரம் — சிலுவை: ஏசுவானவர் தமக்குத் தலை சாய்க்க இடமில்லை என ஒரு சமயம் சொல்லியிருந்தார்.

கீச வாகனம்: அவர் ஒரு முறை, அடியார்களும் சிறுவர்களும் ஆரவாரிக்க ஒரு கோவேறு கழுதையின்மீது ஏறி எருசலேக்குப் பவனி சென்றார்.

சீயோன் மகள் மணவாளன்: சீயோன் மகள் என்பது கிறிஸ்துவின் அடியார்களின் கூட்டம், அவர்களுக்கு மணவாளனைப்போன்றவர் கிறிஸ்துபிரான்.

2. ஆய மத்தேயு — சுங்கம் வாங்கும் வேலையிலிருந்த மத்தேயு என்பவர். “ஒப்பியே......தூதனுய் வந்தோன்” — இங்கே குறிக்கப்பட்டவர் யோவான்ஸ்நானகர் என்ற ஒரு முனிவர். இருடி — ரிஷி; முனிவர். ஆரணியம் — காடு. முன் தூதன்: கிறிஸ்து இவ்வுலகத்தில் தோன்றப் போகிறார் என்பதை இவ்வுலகுக்கு முன்னதாகவே அறிவிக்க வந்தவர். திருடன் — யூதாஸ்காரியோத்து என்பவன். சேட்டன் — சிரேஷ்டன்; இவர் பேதுரு என்பவர். இவர், கிறிஸ்து அநியாயமாக அடிக்கப்பட்டு விசாரிக்கப்பட்டபோது, பகைவர்க்கு அஞ்சிக் கிறிஸ்துவை ‘அறியேன்’

என்று சொல்லிப் பொய்யானை யிட்டவர். பின்பு மன்னிப்புப் பெற்று சிறந்த தொண்டரானார்.

சின்னப்பன் கண்ணையும் கெடுத்தாய்: சவுல் என மறு பெயர் கொண்ட சவுல் என்பவர் வைராக்கிய யூதராக இருந்தார். சகல சாத்திரங்களையும் கற்றுத் தேர்ந்தவர். இவர் கிறிஸ்தவர்களைச் சிறைபிடித்துத் துன்புறுத்த வேண்டு மென எருசலேமிலிருந்து வீரர் சிலருடன் குதிரைமீது சவாரி செய்துகொண்டு போனார். அப்போது நடு வெயில். திடீரெனப் பேரொளி ஒன்றினைக் கண்டு குருடாகிக் கீழே விழுந்தார். அவ்வொளியிலிருந்து கிறிஸ்து இவருடன் பேசினார். அன்றுதொட்டு சிறிய தொண்டரானார் இவர். சில நாட்களில் இழந்த கண்களைப் பெற்றார்.

சிலேடை

காளமேகர் வசை பாடுவதில் வல்லவர் என்பர். திருமலைராயன் காலத்திருந்தவர். சிலேடையாவது ஒரு சொல் இரண்டும் அதற்கு மேற்பட்டதுமான பொருள் தரப் பாடுவது.

பாம்புக்கு: பெரிய விடம்; விடம் — நஞ்சு. பித்தர் — சிவனார். அரி — காற்று. உப்பும் — படம் விரித்து எழும். எரி குணம் — சீறும் பண்பு.

எலுமிச்சம் பழத்துக்கு: பெரிய இடம் — பெரியவர்களிடம். பித்தர் — வைத்தியக்காரர். அரியுண்ணும் — அரியப்படும். எரிகுணம் — எரிச்சல் தரும் பண்பு.

மடக்கு

மடக்காவது வந்த சொல்லே வரப் பாடுவது. இதனை 'யமகம்' என்பர் வடநூலர்.

"வனம் அடங்கலும் போது அகம்; வரி அளி மருவும்; வன மடங்கலும் போதகக் குருவையும் மயங்கும்; கனம் மடங்கு (அல் உம்) போது களி மயில்கள் அகவும்; கன மடம் கலும் (கல்லும்) போதகம் தரும் பல காட்சி" எனப் பிரிக்க.

இங்கு ஒரு மலைக்காட்சி கூறப்படுகிறது. போது அகம் — மலர்களுக்கு உறைவிடம் ஆம். அளி — வண்டுகள். மடங்கல் — சிங்கம். போதகம் — யானை. மயங்கும் — உறவுகொள்ளும். கனம் மடங்கு (அல் உம்) போது — மேகம் கவியும்போது; அல்: சாரியை, உம்: அசை. அகவும் — ஆடும். கன மடம் கல்லும் — மிக்க அறியாமையைக் கல்வி எறியத்தக்க. போதகம் — போதனை.

யானை மறம்

யானையினது வீரத்தைப்பற்றிப் பாடுவது யானை மறம் என்னும் துறையின்பாற்பட்டது. இப்பாடல் முத்தொள்ளாயிரம் என்னும் நூலினது. சேரசோழ பாண்டியரைப் பற்றித் தனித்தனியே தொள்ளாயிரம் தொள்ளாயிரம் பாடல்களை யுடைய நூல் இது. மூன்று + தொள்ளாயிரம் = முத்தொள்ளாயிரம். இந்நூல் பத்தாம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாக விருக்கலாம். ஆசிரியர் இன்னார் எனக் கூற இயன்றிலது.

கல் ஆர் தோள் – மலைபோன்ற தோள். கிள்ளி – சோழன். கொடி மதில் – (பகைவர்களது) கொடி கட்டப்பெற்ற மதில். கோடு – தந்தம். இடறி – உதைத்து. பொல்லாமை – அழகின்றித் தோன்றும் தனது பொல் லாத் தன்மை.

இற்ற கோடும் தேய்ந்த நகமும் கொண்ட தோற்றத்தோடு களிறு தன் பிடி முன்பு செல்ல நாணிற்று! இது தற்குறிப்பேற்ற அணி.

சீட்டுக் கவி

கமலாலயம் – தாமரைப் பொய்கை. விற்பனம் – அறிவு. மதுரம் – இனிமை. சனது – கடிதம். காமா வென்று – காமனே என்று. நாவு ஒன்று – உண்மையான.

தமிழ்த்தாய்

1. திறை – மாண்பு. 3. நள் – தேன்; தீ – இனிமை. 4. காலன் – இயமன். 5. வையம் – உலகம். 9. மேற்கே – மேலை நாடுகளில்.

வினாக்கள்

திருவாரூர் நான்மணி மாலை

1. நான்மணி மாலை என்பது என்ன?

2. திரிவேணி சங்கமத்தைக் குமர குருபரர் எவ்வாறு வருணிக்கிறார்?

3. சிவனாரின் மகுட அலங்காரத்தினை ஆசிரியர் எவ்வாறு கற்பனை செய்கின்றார்?

4. இங்குச் சொல்லப்படுகின்ற மருத நிலத்து இயற்கை வளத்தினைத் தெரிவிக்க.

5. மருத நிலக் காட்சி எவ்வாறு கற்பனை செய்யப்பட்டது என்பதனை நும் சொந்த சொற்களில் வரைக.

6. சடாடவி, விட்புலம்: புணர்ச்சி விலக்கணம் தருக.

வஞ்சப் புகழ்ச்சி

7. வஞ்சப் புகழ்ச்சி என்றால் என்ன?

8. அங்கி யொன்றினைச் சேவகர் பீலி போட்டெடுத்த வரலாறு யாது?

9. கிறிஸ்துவின் பிறப்பினைப்பற்றி வரைக.

10. கிறிஸ்துவின் உறவினரும் நண்பரும் எத்தகையரா யிருந்தனர் என வரைக.

சிலேடை

11. சிலேடை என்பது என்னை?

12. பாம்புக்கும் எலுமிச்சத்துக்கும் சிலேடை எவ்வாறு அமைந்தது?

மடக்கு

13. மடக்கு என்ப தென்னை?

14. 'வள மடங்கலும்' என்ற கவிதைக்குப் பதவுரை தருக.

யானைமறம்

15. 'முத்தொள்ளாயிரம்': குறிப்பு வரைக.

16. களிறு நாணியமை ஏன்?

சீட்டுக் கவி

17. 'சீட்டுக் கவி' என்ப தென்ன?

18. கவிராயர் தம்மை எவ்வாறு புகழ்ந்து சொல்லுகிறார் என்பதையும் முத்துக் கறுப்பண்ணரை எவ்வாறு புகழ்ந்து கூறுகிறார் என்பதனையும் வரைக.

தமிழ்த்தாய்

19. காலனை ஏன் பழிக்கிறார் பாரதியார்?

20. 'கொன்றிடல் போலொரு வார்த்தை'—விளக்கமாக்குக.

21. 'தமிழ்த் தாய்' வரலாற்றை ஒரு கட்டுரையாக வரைக.

உரைநடை : சிறப்புப் பகுதி

1. இறையனார் அகப்பொருளுரை—நக்கீரர்

சந்தனமும் சண்பகமும் தேமாவும் தீம்பலவும் ஆசினியும் அசோகமும் கோங்கும் வேங்கையும் குரவமும் விரிந்து, நாகமும் திலகமும் நறவும் நந்தியும் மாதவியும் மல்லிகையும் மௌவலொடு மணம் கமழ்ந்து, பாதிரியும் பாவை ஞாழலும் பைங்கொன்றையொடு பிணி யவிழ்ந்து, பொரிப்புன்கும் புன்னாகமும் முருக்கொடு முகை சிறந்து, வண்டறைந்து, தேனார்ந்து, வரிக்குயில்கள் இசைபாட, தண்தென்றல் இடைவிராய்த் தனியவரை முனிவு செய்யும் பொழிலது நடுவண், ஒரு மாணிக்கச் செய்குன்றின்மேல், விசும்பு துடைத்துப் பசும்பொன் பூத்து வண்டு துவைப்பத் தண்தேன் துளிப்பதோர் வெறியுறு நறுமலர் வேங்கை கண்டாள்; கண்டு, பெரியதோர் காதல் களிகூர்ந்து, தன் செம்மலர்ச் சீறடிமேல் சிலம்பு கிடந்து சிலம்பு புடைப்ப, அம்மலரணிக் கொம்பர் நடை கற்பதென நடந்து சென்று, நறை விரி வேங்கை நாண்மலர் கொய்தாள்; கொய்த இடத்து, மரகத மணி விளிம்படுத்த மாணிக்கச்சுனை மருங்கினதோர் மாதவி வல்லி மண்டபத்துப் போது வேய்ந்த பூ நாறு கொழுநிழற் கீழ்க் கடிக்குருக்கத்தி கொடிப் பிடித்துத் தகடுபடு பசும்பொன் சிகரங்களின் முகடு தொடுத்து ஞான்று வந்து இழிதரும் அருவி, பொன் கொழித்து மணி வரன்றி மாணிக்கத்தொடு வயிர முந்தி அணி கிளர் அருவி ஆடகப் பாறைமேல் அதிர்குரல் முரசின் கண்ணிரட்ட, வண்டும் தேனும் யாழ் முரல, வரிக்குயிலும் கிளியும் பாட, தண்தாது தவிசுபடப் போர்த்ததோர் பளிக்குப் பாறை மணித்

தலத்துமிசை, நீல ஆலவட்டம் விரித்தாற்போலத் தன் கோலக் கலாவம் கொள விரித்து, முளையிள ஞாயிற்று இளவெயில் எறிப்ப, ஓர் இள மயில் ஆடுவது நோக்கி நின்றாள்.

குறிப்புரை

ஒரு சமயம், எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் வல்ல புலவரைப் பெற்ற மதுரை மன்னன் பொருளதிகாரம் செய்ய வல்ல புலவரைப் பெற்றிலேனே எனக் கவன்றனனாக, அவன் கவற்சி நீக்க, இறையனார் அறுபது சூத்திரத்தான் ஒரு நூலெழுதி யுதவினார் என்ப. அந்நூலே 'இறையனார் களவியல்' எனப்படுவது. இந்நூற்குப் பலர் செய்த உரையினும் நக்கீரர் உரையே புலவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தேமா – இனிய மாமர வகை. பலவு – பலா. ஆசினி – பலா வகை. கோங்கு – கெல்வி. குரவம் – மருத்தோன்றி. நாகம் – சுரபுன்னை. திலகம் – மஞ்சாடி. நறவு – மயில் கொன்றை மரம். மாதவி – குருக்கத்தி. மௌவல் – முல்லை. பாவை ஞாழல் – குங்கும மரம், புலி நகக் கொன்றை. பிணி – கெட்டு. பாரிப்புன்கு – அடி பொரிந்த புன்க மரம். புன்னாகம் – புன்னை.

முகை – அரும்பு. பொழில் – சோலை. செய்குன்று – கையால் செய்யப்பட்ட குன்று. வெறி – வாசனை. சிலம்பு புடைப்ப – ஓசை செய்ய. நாண் மலர் – அன்று அலர்ந்த மலர். போது – மலரும் பருவத்திலுள்ள பேரரும்பு. தகைபெற – தகடாகப் பொருந்திய. ஞான்று – தொங்கி இழிதரும் – இறங்கும். வான்றி – வாரி. அணி திகழ் – அழகு விளங்கு கின்ற.

சிறுமை + அடி = சீறடி.

கொம்பர்: குற்றியலுகரத்திற்கு 'அர்' போலி யாயிற்று.

வினாக்கள்

1. இறையனார் அகப்பொருள்: குறிப்பு வரைக.
2. பொழில் எவ்வாறு விளங்கிற்று?
3. வேங்கை எத்தகைய காட்சி தந்தது?
4. பொழிலின்கண் தலைவியின் செயல் யாது?
5. தலைவி கண்ட காட்சியினை விளக்க எழுதுக.

பயிற்சி

நீங்கள் கண்ட ஓர் இயற்கைக் காட்சியைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.

---

2. உரைபெறு கட்டுரை : சிலப்பதிகாரம்

(இளங்கோ வடிகள்)

க. அன்றுதொட்டுப் பாண்டியனாடு மழை வறங் கூர்ந்து வறுமை யெய்தி வெப்பு நோயுங் குருவுந் தொடரக் கொற்கையிலிருந்த வெற்றிவேற் செழியன் நங்கைக்குப் பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று களவேள்வியால் விழவொடு சாந்தி செய்ய நாடு மலிய மழை பெய்து நோயும் துன்பமும் நீங்கியது.

உ. அது கேட்டுக் கொங்கிளங்கோசர் தங்கணாட் டகத்து நங்கைக்கு விழவொடு சாந்தி செய்ய மழை தொழி லென்றும் மாறா தாயிற்று.

ங. அது கேட்டுக் கடல்சூ ழிலங்கைக் கயவாகு வென்பான், நங்கைக்கு நாட்பலி பீடிகை கோட்ட முந்துறுத் தாங்கு அரந்தை கெடுத்து வரந்தரு மிவ ளென ஆடித்திங்க ளகவையி னாங்கோர் பாடிவிழாக் கோள் பன்முறை யெடுப்ப மழை வீற்றிருந்து வளம் பல பெருகிப் பிழையா விளையுள் நாடாயிற்று.

ச. அது கேட்டுச் சோழன் பெருங்கிள்ளி கோழி யகத்து எத்திறத்தானும் வரந்தரு மிவளோர் பத்தினிக் கடவுளாகு மென நங்கைக்குப் பத்தினிக் கோட்டமுஞ் சமைத்து நித்தல் விழாவணி நிகழ்வித்தோனே.

குறிப்புரை

உரை பெற கட்டுரை என்பது செய்யுள் நூலுள் இடையே உரை மொழி வாயிலாக அமைக்கப்படுவது. இது சிலப்பதிகாரத்தில் கண்டது. ஆசிரியர் இளங்கோவடிகள் செங்குட்டுவனின் இளவல்.

வெப்பு — தொழுநோய். குரு — கொப்புளம். நங்கை — கண்ணகி. விழவு — விழா. கொங்கு இளங்கோசர் — கொங்கு மண்டிலத்து இளங் கோக்களாகிய கோசர். பீடிகை — பீடம். கோட்டம் — கோயில். அரந்தை — துன்பம். பாடி — நகர். கோழி — உறையூர்.

மூன்றுறத்தாங்கு: ஆங்கு, அசை நிலை. நிகழ்வித்தோனே: ஏ, அசை நிலை. அகவை: ஏழனுருபு.

பயிற்சி

இங்குக் கூறப்பட்டுள்ள வரலாற்றை நும் சொந்த சொற்களில் ஒரு கட்டுரையாக வரைக.

---

3. வீணைக் கொடியோன்*

பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள், B.A., B.L.

இக்காலத்தில் தன்னரசு பெற்ற நல்லரசுகள் தனிக் கொடியுடையனவாக விளங்குதல்போன்று முற்காலத்து மன்னரும் கொடியுடைய கொற்றவராக விளங்கினர். நானிலம் காக்கும் மன்னரும், தேவரிற் சிறந்த மூவரும், தமக்குரிய தனிக்கொடியோடு திகழ்ந்தனர். அண்டங் களனைத்தையும் ஆக்கும் தொழிலுடைய அயன், அழகிய அன்னத்தைக் கொடியில் எழுதி அன்னக் கொடியோனாக அமைந்தான். காக்குந் தொழிலுடைய திருமால் வலிய கலுழனைத்தன் கொடியில் எழுதிக் கரு டக்கொடியோன் என்று பெயர் பெற்றான். அழிக்குந் தொழில் கொண்ட அரன் மழவிடையைத் தன் கொடி யில் எழுதி விடைக்கொடியோன் என்று வழங்கப்பெற் றான்.

இவ்வாறே முடியுடை மன்னராய் முற்காலத்தில் தமிழகத்தை ஆண்டுவந்த மூவேந்தரும் அழகிய கொடி யுடையோராக அமைந்திருந்தார்கள். சேர நாட்டை ஆண்டுவந்த அரசன், தன் கொடியில் வில் எழுதி, வில்லவன் என்று பெயர் பெற்றான். சோழ நாட்டை ஆண்டுவந்த அரசன் கடும்புலியைக் கொடியில் எழுதிப் புலிக்கொடியோன் என்று போற்றப்பட்டான். பாண்டி

---

* 'வீரமா நகர்' என்ற நூலிலிருந்து கொள்ளப்பட்டது.

நாட்டை ஆண்ட தென்னவன், கயல்மீனைக் கொடியி லமைத்து மீனவனாக மிளிர்ந்தான். ஆகவே, தமிழ் மன்னராய சேர சோழ பாண்டியர் மூவரும், வில்லையும் புலியையும் மீனையும் முறையே கொடியில் எழுதி மகிழ்ந்தனர் என்பது இனிது விளங்கும்.

இங்ஙனமே மறைந்து நின்று மாயப்போர் புரியும் மாரவேளை மீனக்கொடியோன் என்றும், குழைந்த அன்பர்க்கு அருள்செய்யும் குமரவேளைச் சேவற்கொடி யோன் என்றும், செந்தமிழ் நூல்கள் சிறப்பித்துக் கூறு கின்றன. பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் நிகழ்ந்த பாரதப் பெரும்போரில் துற்குணக் கொழுந்தாய துரி யோதனன், நஞ்சுமிழும் நாகக் கொடியோடு நின்றான். தன்னேரிலாத தருமன் முரசு எழுதிய கொடியோடு முனைந்து நின்றான். ஆகவே விண்ணரசாளும் தேவரும் மண்ணரசாளும் மன்னரும் தம் மனப்பான்மைக் கேற்ற உருவினைக் கொடிகளிற் பொறித்து அமைத் தார்கள் என்னும் உண்மை நன்கறியப்படும்.

தென்னவன் நாட்டிற்குத் தென்பா லமைந்த கடல் சூழ் இலங்கைக் காவலனாகிய இராவணன் தன் வீரக் கொடியில் வீணையை எழுதி அமைத்தான். தேவரை யும் மூவரையும் வென்று திசை யானைகளின் வலி அழித்து மன்னர் மன்னனாய் இலங்கிய இலங்கை நாதன் வீரச் செல்வத்தோடு வீணைச் செல்வமும் வாய்ந்து விளங்கினான்.

> "சேணுயர் நெறிமுறை திறம்ப லின்றியே
> பாணிகள் பணிசெயப் பழுதில் பண்ணிடை
> வீணையின் நரம்பிடை விளைத்த தேமறை
> வாணியின் நாரதன் செவியின் வார்க்கவே"

என்று கல்வியிற் பெரிய கம்பர் கூறுமாறு நரம்பின் நயம் தெரிந்த நாரதன் முறை திறம்பாது பாடற் கிசைந்த பண்ணோடு அருமறையை இசையி லமைத்துப் பாடி இலங்கை மன்னனை இன்புறுத்தினான். இன்னும்

இசைவல்லார் பலர் இராவணன் வீரத்தையும் வெற்றி யையும், இசைக் கருவியி லமைத்து இசைத்தார்கள். இங்ஙனம் இசை இன்பம் நுகர்ந்து மகிழ்ந்த இராவ ணன் நகர மெங்கும் இன்னொலியே நிரம்பி நின்றது. அரசன் வழி நின்ற அரக்க ரெல்லாம் ஆடலும் பாட லும் நிகழ்த்தி அகமகிழ்ந்தார்கள். நகர மெங்கும் மகர வீணையின் மந்திர கீதமும், ஆடலும் அமிழ்தின் ஆன்ற பாடலும் நிறைந்து நின்ற நீர்மையை நேரிற் கண்ட மாருதி,

"புளிக்கு மாளிகைத் தலந்தொறும்
இடந்தொறும் பசுந்தேன்
துளிக்கும் கற்பகத் தண்ணறும்
சோலைகள் தோறும்
அளிக்கும் தேறலுண்டு ஆடுநர்
பாடுந ராகிக்
களிக்கின் றாரலாற் கவல்கின்றார்
ஒருவரைக் காணேன்"

என்று மனமாரப் புகழ்ந்தான். அந்நகரில் வாழ்ந்த மங்கையர் இசையினும் இனிய சொல்லமைந்தவராக இலங்கிய பெருமையைக் கண்ட இராமதூதன், "குழ லும் வீணையும் யாழும் என்றினையன குழைய மழலை மென்மொழி கிளிக்கிருந் தளிக்கின்ற மகளிர்" என்று புகழ்ந்து மகிழ்ந்தான்.

இவ்வாறு இன்னொலி நிரம்பிய நன்னகரில் இன் புற்றிருந்த இலங்கை நாதன், நாரத முனிவனும் நயக்கு மாறு நல்லிசையில் வல்லனா யிருந்தான். வெள்ளி மால் வரையை அசைத்த வீரன், சீற்ற முற்ற ஈசன் சேவடிக் கொழுந்தின் ஊற்றத்திற்கு ஆற்றாது அம்மலையி னுள்ளே அகப்பட்டு நைந்தபோது, நசையினாற் பாடிய இசையினுக்கு இரங்கி, இறைவன் அருள் செய்தான் என்று வழங்கும் வரலாறு, அவன் இசைப் புலமைக்கு இணை யற்ற சான்றாகும்.

இவ்வுலகில் இசைத்திறம் வாய்ந்த மக்கள் உயர்ந்தோராகவும், அத்திறம் அமையப் பெறுதோர் நாகரிக மற்றவராகவும் எண்ணப்படுவர். மக்கள் கருத்தைக் கவர்ந்து கவலையை ஒழிக்கும் அருங்கலைகளுள் இன்னிசையே தலைசிறந்த தென்று எந்நாட்டினரும் இசைந்து கூறுகின்றார்கள். நஞ்சுமிழும் கொடிய நாகமும், வெம்மை சான்ற வேழமும் இன்னிசையில் இன்புற்று அடங்கு மென்றால் இசையின் பெருமையை இசைக்க வல்லார் யாவர்? குழலோசை கேட்ட நாகம் புற்றினின்றும், புதரினின்றும் வெளிப்போந்து இசையினை நுகர்ந்து இன்புறுதலை இன்றும் கண்கூடாகக் காண்கின்றோம். யாழ் ஒலி கேட்ட ஓர் வேழம் தன் வெம்மையை இழந்து அடங்கிப் பணி செய்த பான்மையைப் பழந்தமிழ் நூலாய பெருங்கதை பாராட்டிக் கூறுகின்றது. ஆகவே நஞ்சுமிழும் நாகமும், மதம் பொழியும் நாகமும் நல்லிசையில் ஈடுபடும் தன்மை நன்கறியப்படும்.

இன்னும் அறிவற்ற பொருளாய கருங்கல்லும் இசை இன்பத்தால் நெகிழ்ந்து இளகு மென்று பழந்தமிழ் நூல்கள் பாராட்டுகின்றன. இசை பாடுந் திறமையில் ஒப்புயர் வற்று விளங்கிய தமிழ் முனிவரை இசையில் வெல்லக் கருதிய இலங்கை வேந்தன், புகழ் பூத்த பொதியம் போந்தா னென்றும், அரக்கன் கருத்தறிந்த அருந்தவ முனிவர், தமிழ் மணக்கும் திருக்கரத்தில் யாழ் ஏந்தி இசை பாட அருகே யிருந்த கரும்பாறை இளகிற் றென்றும், அதன்மீது அகத்தியர் தம் யாழை வைத்தபோது இளகிய பாறை இறுகி அவ்விசைக் கருவியைப் பற்றிக்கொண்ட தென்றும், பாறையை நெகிழ்த்துப் பதிந்த யாழை யெடுக்கக் கருதிய இராவணன் நெடும்பொழுது பாடியும் இளகாத கருங்கல் மீண்டும் அகத்தியனார் பாடியபொழுது நெகிழ்ந்து யாழைக் கைவிட்ட தென்றும் பழந்தமிழ்க் கதை யொன்று வழங்குகின்றது. இதனால் உயிரற்ற பொருள்களையும் உருக்கும் திறம் வாய்ந்த இன்னிசையில் இலங்கை வேந்தன் மூத்

தமிழ் முனிவர் ஒருவரை யன்றி மற்றைய முனிவர்க்கும் தேவர்க்கும் மேலவனாக விளங்கிய தன்மை இனிது உணரப்படும்.

இவ்வாறு ஏனைய செல்வங்களோடு இசைச் செல்வமும் பெற்று அச்செல்வத்தை மற்றைய செல்வங்களினும் மாண்புடையதாகக் கருதி மகிழ்ந்த இலங்கை மன்னன், உலகெலாம் புகழ் விரித்த தன் ஓங்கிய கொடியில் வீணையை எழுதிய தன்மை வியப்பாகுமோ? இத்தகைய மன்னன் இசையால் உலகாண்டான் என்று கருதுதல் இழுக்குடைய தாகுமோ? இலங்கை வேந்தனைப் போன்ற இசைவல்லார் அவன் காலத்திற்கு முன்னும் பின்னும் பலர் இருந்திருப்பினும் இசைக்கலையில் அளவிறந்த ஆர்வமுற்று இறைக்கொடியில் இசைக் கருவியை எழுதி யமைத்த பெருமை அவ்வீரனுக்கே உரியதாகும். இன்றளவும் அத்துறையில் இராவணனை வென்றார் எவரும் இலர். இசைக்கொடியோடு இலங்கையை ஆண்ட இராவணன், தன் இசைக்கொடியை இவ்வுலகில் என்றும் அசைக்க இயலாதவாறு நிலை நிறுத்தினான்.

வினாக்கள்

1. பண்டைக் காலத்தே கடவுளரும் மன்னரும் தத்தமக்குரிய தனிக் கொடியோடு திகழ்ந்தனர் என்பதனைக் காட்டுக.

2. மன்னரும் பிறரும் தத்தம் மனப்பான்மைக் கேற்ற உருவினைத் தம் கொடிகளில் பொறித்து வைத்தனர் என்பதனை விளக்குக.

3. இராவணனது நகர் முழுவதும் இசை நிரம்பியது என்பதனைக் காட்டுக.

4. இராவணனது இசைத் திறமையைப்பற்றி நீவிர் யாது அறிவீர்?

5. மக்களுயிரே யன்றிப் பிற உயிர்களும் இசைக்கு இயையும் என்பதனைப் புலப்படுத்துக.

6. தமிழ் முனிவரின் இசைத்திறனைப் புலப்படுத்துக.

7. 'இன்றளவும் அத்துறையில் இராவணனை வென்றார் எவரும் இலர்' என ஆசிரியர் குறிப்பது எதனை?

4. மூதின் மகளிர்*

வித்துவான் ஜி. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், M.A., B.L.

பெண்டிருளத்தைப் பெண்டிரே நன்கறிவர். இம் மூதின் முல்லையாகிய மகளிரது வீரத்திறத்தை ஔவையார், பொன்முடியார், மாசாத்தியார், நச்செள்ளையார், நன்முல்லையார் முதலிய பல பெண்புலவர்கள் சுவையுள்ள பல பாக்களாக நமக்களித்திருக்கின்றனர். அப்பாக்களில் அக்கால மகளிரது உள்ளக்கிடக்கையும், வாழ்வின் சீரிய நோக்கங்களும், மானமும் அறமும் இழந்தபின் உயிர் வாழாத அவர்களது உத்தம குணமும், இன்னும் பல சிறப்புக்களும் இனிது தீட்டப்பட்டிருக்கின்றன. அவ்வரிய பாக்களை ஒவ்வொரு தமிழ் மகனும் நன்கு கற்று அதன்படி ஒழுகப் பயிலல் வேண்டும். அக்காலம் எப்பொழுது கிட்டுமோ அப்பொழுதுதான் நம் நாடு முன்னேற்ற மடையு மென்பதில் யாதொரு ஐயமு மில்லை.

ஊற்று நீர் அல்லது வேற்று நீர் அறியா ஒரு சிற்றூர். அங்கு ஓரிளம் பெண். அவள் காசறு கூந்தலை உடையாள். மாசறு நுதலை உடையாள். கடவுளைக் கைதொழுது நிற்கிறாள். போரில் மடிந்து துறக்க மெய்திய ஒரு வீரனின் நடுகல்லே அவளது கடவுள். அதுவே அவளது குலதெய்வம். அக்கடவுளைப் பல முறையும் பணிந்து மன்றாடி இரண்டு வரம் வேண்டுகிறாள். அவளது பிரார்த்தனை என்ன? 'வைகலும் விருந்தினர் தவிராது என் வீட்டிற்கு வர, யான் அவர்களை உபசரிக்க வேண்டும். ஒரு பெரிய அரசன் பகைவனைக் கிடைத்து, அவனை என் கணவன் போரில் எதிர்க்க வேண்டும்,' என்று வேண்டுகிறாள்.

---

*'தமிழ் உள்ளம்' என்ற நூலிலிருந்து கொள்ளப்பட்டது.

'களிறுபொரக் கலங்கு கழன்முள் வேலி
அரிதுண் கூவ லங்குடிச் சீறூர்
ஒலிமென் கூந்தல் ஒண்ணுதல் அரிவை
நடுகற் கைதொழுது பரவும் ஒடியாது
விருந்தெதிர் பெறுகதில் யானே யென்னையும்
...........வேந்தனொடு
நாடுதரு விழுப்பகை யெய்துக வெனவே."
(புறநானூறு—306)

ஓர் அரசனை எதிர்த்தாலே தன் கணவன் பெரிய செழிப்புள்ள நாட்டை வென்று கைக் கொள்ள முடியும் என்பது அவளுடைய எண்ணம், தன் கணவன் நிச்சயமாக வெற்றியடைவான் என்று துணிந்தே இவ்வாறு வேண்டுகிறாள். அவ்விதம் பெரிய நாட்டைத் தன் கணவன் வென்று கைக்கொண்டால், தான் அதிகமான விருந்தினரை இனிது உபசரிக்க முடியும் என்பது அவளுடைய குறிப்பு. மறப்போரும் அறப்போராகவே இருக்க வேண்டும் என்னும் அவாவினால், தன் கணவன், "பகை எய்துக" என்கிறாள். 'என்னையும்' என்று அவள் தன் கணவனைக் குறிப்பது அவள் அகத்திருந்தெழும் அன்பின் முதிர்ச்சியைக் காட்டுவதே யாகும். இதனால் பெண்களுக்குள்ள ஈகைக் குணமும், விருந்தினரை உபசரிப்பதில் அவர்களுக் குள்ள ஆர்வமும், அவ்வீகை தியாகமே யாகும் என்பதும், தியாகமும் ஒரு வீரமே யாகி மகளிர்க்குச் சிறப்புக் கொடுத்து நிற்கும் என்பதும் தெளிவாகும். இவ்விதச் சிறந்த குணம் ஒரு பெண்ணிற்கமைவது கல்வியால் நிரம்பிய அறிவின் பயனே யாகும். இதைக் கம்ப நாடர் ஒரு செய்யுளில் அழகுறக் கூறியிருக்கிறார்.

'பெருந்த டங்கண் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையே.'

மாசாத்தியார் என்னும் பெண் புலவர் புறநானூறு 279-ஆம் பாடலில் ஒரு தாயின் வீரச் செய்கையைக் கூறி,

'கெடுக சிந்தை கடிதிவள் துணிவே!' என்று விம்மிதங் கொள்கிறார். அதே செய்தி புறப்பொருள் வெண்பா மாலையிலும் எடுத்தாளப்பட் டுள்ளது. அக்காலத்த வரும் அதைக் கண்டு வியப்பெய்தினர். நாமும் இக் காலத்திற் சொல்லிச் சொல்லி வாயார முடிவ தில்லை. ஒரு பெண்ணின் தமையன் முதல்நாட் போரில் விழுந் திறந்தான். பகைவர் ஆனிரையைக் கவர்ந்து செல்ல லுற்றனர். மறுநாள் அவள் கணவன் அவ்வானிரையை மீட்டுவரச் சென்று, வீரத்துடன் பொருது மாண்டான். மூன்றுவது நாட் காலையிலும் போர்க்கு அழைக்கும் முரசம் அறையப் பெற்றது. அப்பெண் அதனைக் கேட்டுப் பொங்கி யெழுந்தாள். வீட்டில் எஞ்சி நின்ற வன் தன் ஒரே மகன். அவனும் பாலரு வாயன். அவனைத் தன் அருகழைத்து அன்போ டணைத்து உச்சி மோந்தாள்; தலைக்கு எண்ணெய் இட்டுச் சீவி, முடித் தாள்; தும்பைப் பூப்போன்ற தூய ஆடையைச் சுற்றிக் கட்டினுள். அவன் கையில் நிமிர்த்துத் திருத்தின வேலைக் கொடுத்துப் போர்க்களத்தை நோக்கிச் செல்லும் படி விடுத்தாள். என்னே பெண்ணின் துணிவும், வீரமும், தியாகமும்! பொதுச் சமுதாய வாழ்க்கைக்கு ஓர் இடுக்கண் வந்தபோது தன் ஒரே மகனையும் நாட் டின் நலத்திற்காகத் துறந்து போர்க்கு விடுத்த இவ்வீரத் தாயின் சமுதாய உணர்ச்சியையும்[1] தியாகத்தையும் அறிஞர் போற்றுவாராக!

போர் முடிந்த வுடன் வீரர்களின் தாயரும்பெண்டி ரும் போர்க்களஞ் சென்று அங்கு விழுந்து கிடப் போரின் நிலையை அறிவது தமிழ் வழக்கம். இவ் வழக்கம் மிகச் சமீப காலமான கி.பி. 1800 வரை தமிழ் நாட்டில் நடந்து வந்த தென்று சொல்லலாம். இது சிலருக்கு வியப்பை விளைவிக்கக் கூடும். ஆனல் கால்டுவேல் என்பவர் எழுதியிருக்கிற தமிழ் நாட்டுச் சரித்திரத்தைப் படிப்பவர்களுக்கு இதன் உண்மை

[1] Public Spirit.

விளங்கும். தமிழ் நாட்டுச் சரித்திரத்தில் அநேக போர்கள் நடந்திருக்கின்றன. அவற்றில் மிகச் சிறப்பு வாய்ந்தவைகளில் ஒன்று தலையாலங்கானத்துப் போர். அப்போரிற் பாண்டியன் நெடுஞ்செழியன் இரு பெருவேந்தரையும் ஐம்பெரு வேளிரையும் வென்று வாகை சூடினன். போர்க்களத்திற்கு மகளிர் சென்று பிணங்களைப் புரட்டி ஆராயலுற்றனர். அங்குத் தம் கணவரும், புல்லிய தலையை யுடைய பொன்போற் புதல்வரும் வாள் வெற்றியை யுடையோராய், மடிந்து கிடப்பதைக் கண்டு, 'இச்சிறப்பு வாய்ந்த வெற்றியும் நமக்குக் கிடைத்ததா!' என்று இன்புற்று உவகை எய்தினர். ஆனல் அங்குச் சில அம்பு தைத்துப் புண்பட்ட யானைகளின் துதிக்கை அறுபட்டுக் கிடப்பதைக் கண்டு, அது மறத்திற்கு இழிபென்று கொண்டு, இரங்கி அழத்தொடங்கினர். அக்காட்சியைக் கொடிய கூற்றுவனுங் கண்டிருந்தால் நாணி இரங்கி இருப்பான். குடபுலவியனர் என்னும் புலவர் அவ் அஞ்சத் தக்க போர்ச் செய்தியைக் கூறியிருக்குங் கவி வருமாறு:

'குன்றத் திறுத்த குரீஇயினம் போல
அம்புசென் றிறுத்த வரும்புண் யானைத்
தூம்புடைத் தடக்கை வாயொடு துமிந்து
நாஞ்சில் ஒப்ப நிலமிசைப் புரள
எறிந்துகளம் படுத்த வேந்துவாள் வலத்தர்
எந்தையொடு கிடந்தோரெம் புன்றலைப் புதல்வர்
இன்ன விறலு முளகொல் நமக்கென
மூதிற் பெண்டிர் கசிந்தழ நாணிக்
கூற்றுக் கண்ணோடிய வெருவரு பறந்தலை'

(புறநானூறு—19)

இவ்விதம் போர்க்களஞ்சென்று தேடும் பெண், தன் கணவன் இறந்துபட்டிருப்பானயின், தானும் உயிர் வாழமாட்டாள். கணவன் மார்பைப் பொருந்தி, முகத்தோடு முகம் வைத்து முயங்கி அந்நிலேயே உயிரை விடு

வாள். இவ்வித வீரப்பெண்டுகள் கைம்மை விரதம் பூண்டு உயிர் வாழ்வதைக் கைக்கொள்வதில்லை.

'.................................பெண்டிரும்
பாசடகு மிசையார் பனிநீர் மூழ்கார்
மார்பகம் பொருந்தி யாங்கமைந் தனரே'

(புறநானூறு — 62)

இது மட்டு மன்றி உடன்கட்டை யேறும் வழக்கமும் தமிழ் நாட்டிலிருந்த தென்பது பூதப்பாண்டியன் தேவி தீப்பாய்ந்த செய்தியிலிருந்து நாம் உணர்ந்து கொள்ளலாம்.

போரிற் பொருது புண்பட்டு வீடு திரும்பும் வீரர்களை அவர் மகளிர் உளமகிழ்ந்து குதூகலத்துடன் விரைந்தேற்று, அப்புண்களுக்குச் சிகிச்சை செய்வது ஒரு சிறந்த திருவிழாக் கொண்டாட்ட மாகவே யிருக்கும். வீட்டின் கூரையிலும் வாயில் நிலைகளிலும் இரவந் தழைகளும் வேப்பந் தழைகளும் தோரணமாகத் தொங்க விடப்பட்டிருக்கும். வீடு முழுவதும் தூபங் காட்டி நறும்புகை கமழும். வெண்சிறு கடுகையும் நெருப்பிலிட்டுப் புகைப்பர். மணிகள் கல்லென ஒலித்து நிற்கும். மகளிர் பலவகை வாத்தியங்களிலிருந்தும் இன்னிசை இயக்கி, யாழை வாசித்துக் காஞ்சிப் பண்ணைப் பாடுவர். புண்பட்டோர் உடலை இரவிற் பேய்கள் தீண்டித் துன்புறுத்து மென்று ஒரு நம்பிக்கை யிருந்தது. ஐயவிப் புகையையும் வேப்பந்தழை முதலியவற்றையும் கண்டு பேய்கள் பயந்து கிட்ட நெருங்கமாட்டா என்று இவ்வாறெல்லாம் செய்தனர். எங்கும் ஆரவாரமாய் இருக்கும். இவ்வித அரிய தொண்டாற்றுவதில் மகளிர்க்குள்ள மகிழ்ச்சியும் உத்சாகமும் இவ்வள வென்று அளவிட வியலாது. இச்செய்தி பின்வரும் அழகிய செய்யுளில் மிகவுந் திறமாகச் சித்திரிக்கப்படுகிறது.

'தீங்கனி யிரவமொடு வேம்புமனைச் செரீஇ
வாங்குமருப் பியாழொடு பல்லியங் கறங்கக்
கைபயப் பெயர்த்து மையிழு திழுகி
ஐயவி சிதறி யாம்ப லூதி
இசைமணி யெறிந்து காஞ்சி பாடி
நெடுநகர் வரைப்பிற் கடிநறை புகைஇக்
காக்கம் வம்மோ காதலந் தோழி
வேந்துறு விழுமந் தாங்கிய
பூம்பொறிக் கழற்கால் நெடுந்தகை புண்ணே'
(புறநானூறு—281)

போரில் அரசனுக்கு நேராக வந்த படைக்கலங்களைத் தானே ஏற்றுக்கொண்டு புண்பட்டவன் அவ்வீரன். அத்தகைய வீரன் காலில் பூத்தொழில் அமைந்த கழலை அணிந்திருந்தான். அது அவன் மனைவிக்குக் கண் கொள்ளாக் காட்சியாகவே இருக்கும். அவ்வீரனது புண்களின் துயரைத் தன் இன் குரலில், இசை மதுரச் சுவையாலே தணித்து ஆறுதல் அளிக்கும் தமிழ் மகளின் பெருமையை விளக்க வேறு சான்று வேண்டுவது மிகையே யன்றோ!

குறிப்புரை

மூதின் முல்லை: மகளிர் வீரத்தைப் பற்றிச் சொல்லும் ஒரு புறத்துறை. காசு அறு – குற்றம் அற்ற.

"களிறு பொர......எனவே"—முதலிரண்டடிகளும் நேர் நிரல் நிரை, யானை உழக்குதலால் கலங்கிய கூவல்; கழற் கொடியாகிய முள் வேலியையுடைய சீறூர். ஒலி – தழைத்த. ஒடியாது – ஓயாது, ஒழியாது. தில்: அசைநிலை. என்னையும் = என் + ஐயும் – என் கணவனும். இக்கவிதையின் ஆசிரியர் அள்ளூர் நன்முல்லையார் என்பவர்.

"பெருந்தடங்கண்......யாவையே" – 'செல்வமும் கல்வியும் பூத்தலால் ஈதலும் விருந்து மன்றி யாவை விளைவன" என்க.

'குன்றத்......பறந்தலை': குன்றின் மீது தங்கிய பறவைகள் யானையின் மீது தைத்த அம்புகளுக்கு ஒப்பனை. குரீஇ – குருவி. தூம்பு – துளை. துமிந்து – துணிக்கப்பட்டு வீழ்ந்து. ஞாஞ்சில் – கலப்பை. 'எறிந்து களம் படுத்த வாள் ஏந்து வலத்தர்' என்க. படுத்த – பகைவரை வீழ்த்த. விறல் – வெற்றி. கண்ணேடிய – இரங்கிய. பறந்தலை – போர்க்களம். 'கை வாயோடு

துமிந்து, நாஞ்சில் ஒப்ப, புரள, வாள் ஏந்து வலத்தர் புதல்வர், கிடந்தோர்! விறலும் உள கொல்! என, பெண்டிர் அழவும், கூற்றுக் கண்ணோடிய பறந்தலை' என்க.

'பெண்டிரும்......அமைந்தனரே' – பெண்டிர் பச்சிலை உண்ணாராய், குளிர் நீர் மூழ்காராய் தங்கணவரின் மார்பொடு பொருந்திப் போர்க்களத்தே கிடந்தார். பச்சிலை யுண்ணுதலும் பனி நீர் மூழ்குதலும் கைம்மை விரதம்.

'தீங்கனி......புண்ணே': இரவம் – இரவந்தழை. செரீஇ – செருகி. வாங்கு மருப்பு – கோடு என்னும் வளைவான யாழ் உறுப்பு. கறங்க– ஒலிக்க. பயப் பெயர்த்து – பையப் பெயர்த்து. மையிழுதிழுகி – மையிட்டு. ஐயவி – வெண்சிறு கடுகு. ஆம்பல் – ஆம்பலங்குழல். காஞ்சி – காஞ்சிப் பண். புகைஇ – புகைத்து. நறை – மணம். காக்கம் வம்மோ – காக்க வா. 'புண் காக்கம் வம்மோ' என்க.

வினாக்கள்

1. நடுகல் என்பதென்ன?

2. நடுகல்லைத் தொழுது ஒருத்தி வேண்டியதனை விளங்க வரைக.

3. அங்ஙனம் வேண்டினளின் உள்ளக் கருத்தினைப் புலப்படுத்துக.

4. மாசாத்தியார் கூறும் வீர வரலாறு யாது?

5. தலையாலங்கானத்துப் போர்க்களக் காட்சியினை வரைக.

6. கூற்றுவனும் இரங்கற் குரியதாய் அப்போர்க்களத்தே நிகழ்ந்தது யாது?

7. போரில் தம் கணவர் இறந்துபட்டபின் தமிழ் மகளிர் கைக்கொண்ட வழி யாது?

8. விழுப்புண் பட்டு வெற்றியுடன் திரும்பிய ஆடவரை மகளிர் எவ்வாறு சிறப்பித்து ஓம்பினர்?

பயிற்சி

'பண்டைத் தமிழ்ப் பெண்கள்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

5. தொல்காப்பியம்*

செல்லூர்க்கிழார் சே. ரே. இராமசாமிப் பிள்ளை அவர்கள்

'நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ்வரம் பறுத்த தண்புனல் நன்னாட்டு
மாட மதுரை'

என, ஆசிரியர் இளங்கோ வடிகளால் போற்றப்படும் மதுரைமா நகர்க்கண் முதல் இடை கடை யென்னும் முச்சங்கங்கள் நிறுவித் தென்மொழியாம் நம் சீர்சால் தமிழ் மொழியை நன்கு வளர்த்து வளம்படுத்தின ரென்ப. அச்சங்கங்களுள் இடைச் சங்ககாலத்தே தொல்காப்பியனாரால் இயற்றப்பெற்ற முதல் இயல்நூல் தொல்காப்பியம் ஆகும்.

தோல்காப்பியத்தின் தோன்மை

இதனை நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையில் இயற்றி அரங்கேற்றியதாகத் தொல்காப்பியப் பாயிரம் வகுத்த பனம்பாரனார் கூற்றால் அறியக்கிடக்கின்றது. இந்நூல் இற்றை நாள் நமக்குக் கிடைத்துள்ள நூற் களுள் காலத்தால் முந்தியதோ டன்றிச் சிறப்பினாலும் தமிழர்தம் மொழிச் சீர்மை அறம் மறம் மானம் அரசு அமைச்சு படை செல்வம் முதலிய எல்லாச் சிறப்பும் அறிதற்கு உறுகருவியாய் நின்று உதவும் பெற்றியானும் வீழா ஞாயிறுபோன்று நின்றொளிர்கின்றது. ஆகலான் இயற்கைப் பண்பினாலும் முந்தியதாகவே உள்ளது.

தோல்காப்பியம் போதுவாக நவன்ற போருள்கள்

இஃது, எழுத்து சொல் பொருள் என முப்பகுப் புடையது. எழுத்ததிகாரத்தால் தமிழ் மொழியின் சீரிய கூரிய இனிய மெல்லிய ஒலி யமைப்பு முறை,

*இக்கட்டுரை சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் வெளியிட்டுள்ள தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணர்திற்கு எழுதப்பட்டுள்ள முகவுரையாகும்.

அதன் புணர்நிலையால் ஒலிமாற்ற அமைப்பு முதலியன விளக்கப்பட்டுள்ளன. சொல்லதிகாரத்தால் தமிழ்ச் சொல்லின் சிறப்பும் திணை பால் முதலிய உயிர்ப் பகுப்பு உயிரில் பகுப்பு முறையும் தமிழர் நாகரிகச் சொற்றிறமை யும் ஒவ்வொரு சொற்களும் காரணத்தோடு அமைக்கப் பெற்றன வென்பதற்குரிய விதி வழி வகைகளும் தெற் றென விளக்கப் பெற்றுள்ளன. பொருளதிகாரத்தால் மக்களின் மன இயல்பாகிய அகமும் வீரமும் சுவை களும் உவமங்களும் பாவின் பண்பு மரபுமுறை முதலிய யாவும் ஒருங்கே முற்ற முடிய எடுத்து விளக்கிக் காட்டப் பெற்றுள்ளன.

தொல்காப்பியர் வரலாறும் காலமும்

இச்சீரிய நூலை ஆக்கி உதவி யருளிய இந் நூலா சிரியரான தொல்காப்பியரைப் பற்றிய வரலாறுகள் ஒன்றும் தெற்றெனப் புலனாக வில்லை. திருவள்ளுவர் வரலாறு அறிதற்குரிய சான்றுகள் இல்லாதனபோலவே, ஆசிரியர் தொல்காப்பியனார் வரலாற்றுண்மைகள் நன்கறி தற்குரிய சான்றுகள் இந்நூலகத்தும் பிற நூல்களி னகத் தும் தென்பட வில்லை. இவ்வாறே பழங்காலந்தொட்டு இற்றை ஞான்றுவரை தமிழகத்தில் வாழ்ந்த புலவர்கள் வள்ளல்கள் அரசர்கள் பெரியார்கள் கூத்தர்கள் பாணர் கள் முதலியோர்களின் வரலாறுகள் ஒன்றும் தெளிவாக அறிதற் கில்லை. வரலாறுகள் எதை யெடுத்தாலும் யாருடைய வாழ்க்கை முறைகளை ஆய்ந்துணர முற் பட்டாலும் அவைகளுள் பிற்காலக் கட்டுக் கதைகளைப் புகுத்தியும், முற்கால வழக்கில் இல்லாதனவும் பிற்கால வழக்கத்தில் வந்தனவு மாகிய பாக்களைக் கொண்டு அவர் புனைந்தனவாகக் கொண்டு காட்டியும், அவர்தம் உண்மை வரலாற்றை அறிய வொண்ணாத வகையில் போலி வரலா றெழுதிய பலர், வரலாற்று முறைக்குக் கறை செய்து போதருவாராயினர். இன்னும் இதனானே எதையும் சிக்கறுத்துக் காண்டற் கியலாத தாயிற்று. சங்க கால நூல்களில் பல்லாயிரக் கணக்கான பாடல்கள்

உள்ளன. அவைகளைப் பாடிய புலவர்களின் பெயரே தெரியாத வண்ணம் இருக்கின்றன. ஆனால், அவர் அமைத்த அரிய சொற்றொடர், உவமை, கருத்து நயம் இவைகளைக் கொண்டே பெயர்கள் அமைத்துத் தொகுப் பாசிரியர் வெளியிட்டுள்ளனர். அவை, கல்பொரு சிறு நுரையார், தொடித்தலை விழுத்தண்டினார், பதடி வைகலார், அணிலாடு முன்றிலார், கவைமகனார் என்பன போன்ற பல புலவர்களின் பெயர்களைக் கொண்டு தெளிக.

இவ்வாறே இந்நூலாசிரியரைத் தொல்காப்பிய ரல்லர், இவர் பெயர் திரணதூமாக்கினியென்றும், இவர் சமதக்கினியார் புதல்வரென்றும் கூறி ஆரியராக்கு வாரும் உள்ளனர். இந்நூற்றாண்டினும் இதற்கு முந்திய நூற்றாண்டினும் வாழ்ந்திருந்த புலவர்கள் பெயர்களும் கூட மறைந்து வருகின்றன வென்றால் தமிழக மாந்தர் தம் மொழிப் பற்று நாட்டுப் பற்று அறிஞர்பற்று எவ் வள வென்பதை அளந்தறிமின்! இவ்வாறு பற்றற்று இருந்த காரணத்தால் நூல்களை யெல்லாம் 'வாரணங் கொண்ட தந்தோ வழிவழிப் பெயரும் மாள' என்று இரங்கும் நிலை வந்துற்றது.

இதுகாறும் நாம் ஆய்ந்து கண்டவற்றால் தொல் காப்பியர் காலத்தை இவ்வளவிற்றென வரையறுத்துக் கூறுதற் கியலாததாய் இருக்கின்றது. வரலாற்றாசிரியர் பலரும் இவர் வாழ்ந்த காலம் ஐயாயிரம் யாண்டுக்கு முற்பட்ட தென்பாரும் பதினாயிரம் யாண்டென்பாரும் இன்னும் பல திறத்தினராய்ப் பிளவுபட்டு ஒருவர்க் கொருவர் முரண்பட வுரைப்பர். அஃது எவ்வாறா யினு மாகுக. ஆசிரியர் தொல்காப்பியனார் இருந்த காலம் மிகப் பழமையான கால மென்பது மட்டும் எவ ரும் மறுக்க வொண்ணாதை தாகும்.

ஆனால் இவர் காலத்தேயே தமிழகத்தில் ஆரியக் கொள்கைக் கலப்புக்கள் நிகழ்ந்துவிட்டன. ஆரிய மொழிகளும் தமிழ் மொழியிற் கலந்து வழக்காறாக

வழங்கத் தலைப்பட்டன வென்பதற்குரிய சான்றுகள். இந்நூற்கண் காணப்படுகின்றன. அதற்குச் சான்றாக இவர் சொல்லதிகார எச்சவியலில்,

'வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே'

என்று வடமொழி தமிழிற் கலந்து வழங்குதற்கு வரையறை செய்து வகுத்துரைத்திருப்பதும், காதலாற் பிணைப் புண்ட தலைவன் தலைவியர்களிடையே உண்மைக் காதல் திரிந்து பொய்ம்மை புகுந்த தெனவும், அதனால் ஆன்றோர் முன்னிலையில் ஒரு கட்டுப்பா டமைத்துத் திருமணம் நிகழ்ந்து வந்ததாகவும், கற்பியலில்,

'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப'

என நூற்பா வகுத்தமைத் துரைத்திருப்பதும் நோக்கின் பழங்காலத்துக்கும் பிற்காலத்துக்கும் இடைப்பட்ட காலத்தேதான் தொல்காப்பியர் வாழ்ந்தனராக ஊகிக்கலாம். எனவே ஏறக்குறைய இற்றைக்கு ஐயாயிரம் யாண்டெனக்கொள்ளுதல் சாலும். இந்நூல் மரபியலில்,

'வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை'

என்றும்,

'வேளாண் மாந்தர்க் குழுதூண் அல்லது
இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி'

என்றும் கூறப்பட்டுள்ளன. ஆனால், இது பழந்தமிழர் கொள்கைக்கு முற்றும் மாறுபட்டனவாக இருத்தல் கண்கூடு. தமிழர் வாழ்வு முறை நிலத்தை யொட்டியது; நிலச்சார்பாக அவர்கள் பெயரமைத்து அழைக்கப் பட்டன ரன்றிப் பிறப்பால் சாதி வகுக்கப்பட்டு அழைத்தனரில்லை; இவரே பிறிதோரிடத்து,

'ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்'

என்று கூறுகின்றார். எனவே மேற்கூறிய சாதிபற்றிய வகுப்பு முறைகொண்ட நூற்பாக்கள், பிற்கால இளம் புலவர்களால் ஆக்கி இடைச் செருகலாக அமைக்கப் பெற்றனவோ என ஐயுறற்கு ஏற்றனவாக இருக்கின்றன. இவைகளுள் வரும் சொற்களையும் குலம் வகுத்துக் குலத்துக் கேற்ற நீதிநெறிகளும் வகுக்கின்ற முறையையும் நோக்கின், பிற்காலத்தன வென்பது தெற்றென விளங்கும். அவைகளை ஈண்டு விரித்தல் மிகை. எனவே, இவைகட்கு உரை வகுத்த ஆசிரியர்களும் எவ்வாறாயினும் நூலினுள் அடங்கிக் கிடப்பதால் அவைகளை ஒதுக்கிவிடாது, அவைகட்கும் உரை வகுத்துரைப்பாராயினர். கற்று உண்மை காண விழைவார் காய்தல் உவத்தல் அகற்றி நோக்கின் உண்மை தோன்றாமற் போகாது.

தோல்காப்பிய உரை எழுந்த வரலாறு

இவ்வெல்லாச் சிறப்பும் ஒருங்கே வாய்ந்த அரிய பெரிய இந்நூலுக்குப் பல நூற்றாண்டுகள்வரை உரையெழுதப் பெறவில்லை. ஆசிரியர்கள் வழி வழியாகத் தத்தம் மாணவர்கட்குத் தாம் தாமே உணர்ந்த அளவுக்கு உரையமைத்துப் பாடஞ் சொல்லி வருவாராயினர். இவ்வாறு தொன்றுதொட்ட மரபு மரபாக உரை சொல்லப் போந்தவர்கள், நாளாக நாளாகத் தற்காலம்போல், தத்தமக்குத் தோன்றியவாறே தம் கருத்துக் கேற்பத் திரித்துப் பொருள் கூறி வருவா ராயினர். அதனால் நாட்டில் பல்வேறு திறப்பட்ட கருத்துடை ஆசிரியர் பல்கி, யானை கண்ட குருடர்போலத் தாம் தாம் சொல்வதே உண்மை யுரையென வீணுரை பகர்வா ராயினர். இங்ஙனமே சில நூற்றாண்டுக் காலங்கள் கழிவ வாயின. இக்காலத்தே, தமிழ்நாடு செய்த நல்லூழ் வகையால் இளம்பூரண வடிகள் தோன்றினார்கள். இவர் தமிழ் மொழியை முற்றக் கற்ற முழுதுணர் பெரியராய் இலகி, தொல்காப்பிய நூற்பெருங் கடலுட் புக்குத் தம் நுண்

மாண் நுழைபுல மாட்சியால் நுணுகி ஆய்ந்து தெள்ளத் தெளிந்த பேருரை வகுப்பா ராயினர். இவருரை மூன்றதிகாரங்கட்கும் முற்ற முடிய வுள்ளது. இவர் முதன் முதல் இதற்கு உரை யெழுதிய பெருமைச் சிறப்புக்கொண்டு இவரை இடுகுறிப் பெயராற் கூறாது, உரையாசிரியர் என்னும் சிறப்புப் பெயரால் வழங்குவா ராயினர். இவர்தம் உரைச் சிறப்புக்கு இப்பெய ரொன்றே சான்று நின்று பகரும்.

இவரின் பின்னர் வடநூற் கடலை நிலைகண்டுணர்ந்த சேனாவரையர், நுணுகி ஆழ்ந்து விரிந்த தம் மதிநுட் பங்கொண்டு சொல்லதிகாரத்துக்கு மட்டும் ஒரு நல்லுரை வரைந்தளித்தனர். பேராசிரியர் பொருளதி காரம் மெய்ப்பாட்டியல் முதலாக மரபியல் இறுதியாக ஐந்தியல்களுக்கு மட்டுமே உரை யெழுதி யுள்ளனர். உற்று ஆய்ந்தால் இவர் தொல்காப்பியம் முழுமைக்கும் உரை கண்டன ரெனத் தெரிகின்றது. ஆனால் முழுதும் இதுகாறும் கிட்டிற் றில்லை. நச்சினார்க்கினியர் எழுத்ததி காரம் சொல்லதிகாரங்கட்கும் பொருளதிகார அகத் திணையியல் முதலாகப் பொருளியல் இறுதியாக ஐந்தியல் களுக்கு மட்டுமே உரை வகுத்துள்ளனர். ஏனைய பகுதிகட்கு எழுத வில்லை யென்றே தோன்றுகின்றது. கல்லாடர் சொல்லதிகாரச் சில பகுதிகட்கு மட்டும் உரை வரைந்துள்ளனர். அவர் உரையில் சில பகுதிகளன்றி முழுதும் வெளிவந்திலது. தெய்வச்சிலையார் உரை, சொல்லதிகாரத்துக்கு மட்டுமே இன்றுகாறும் வெளி வந்துள்ளது.

எனவே, இன்ன இன்ன பகுதிகட்கு இன்னின்னார் இவ்விதுவரை உரைகண்டாரென்று அறுதிகொண் டுரைத்தற்கு அகப்புறச் சான்றுகள் ஒன்றும் இல்லை. 'வந்தது கொண்டு வாராதது உணர்த்தல்,' என்பது கொண்டு அவையிற்றை ஆய்வாளர் முடிபு காண்பாராக.

இத்தன்மைத்தாம் ஒரு பெருநூல் தமிழகத்தில் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னே தோன்றி வேருன்றி

நிற்பதாயின் அது, தமிழர்தம் பழமையையும் நாகரிக மேம்பாட்டையும் தெள்ளத்தெளிய விளக்குவ தொன்றாம்.

குறிப்புரை

நெடியோன் – திருமால்; நெடியோன் குன்றம் – வேங்கட மலை. தொடியோள் – குமரி. பௌவம் – கடல். வரம்பு அறுத்த – எல்லையாக வரையறுக்கப்பட்ட. இயல்நூல் – இலக்கணம். நிலந்தரு திருவிற் பாண்டியன் – பகைவரது நிலத்தைக் கொள்ளும் போர்த்திருவினையுடைய பாண்டியன் மாகீர்த்தி. வாரணம் – கடல்.

வினாக்கள்

1. *தமிழ் நாட்டு எல்லைகளாக இளங்கோ வடிகள் கூறுகின்றன யாவை?*

2. *தொல்காப்பியம் எவ்வெவ் வகைச் சிறப்பினுன் மேம்பட்டுள்ளது?*

3. *எழுத்து, சொல், பொருள் அதிகாரங்களான தொல்காப்பியம் நுவலும் பொருள்கள் யாவை?*

4. *பண்டைப் புலவர்களின் வரலாறு கிடைக்கப் பெருமைக்குக் காரணங்கள் என்னை?*

5. *ஏறக்குறைய இற்றைக்கு ஐயாயிரம் யாண்டுகட்கு முன்னர் தொல்காப்பியர் வாழ்ந்தார் என்றற்கு இக்கட்டுரை யாசிரியர் கூறும் நியாயம் என்ன?*

6. *இடைச் செருகல் என்பது என்னை?*

7. *இடைச் செருகல் தொல்காப்பியத்துள்ளும் நுழைந்த தென்றற்குச் சான்று காட்டி விளக்கமுந் தருக.*

8. *தொல்காப்பியத்திற்கு உரை எழுந்த வரலாற்றினைப் பத்து வரிகளில் அமைக்க.*

9. *தொல்காப்பியத்திற்கு உரை வழங்கிய அறிஞர்களைப்பற்றித் தெரியுமளவுக்கு வரைக.*

பயிற்சி

கட்டுரை: 'தொல்காப்பியச் சிறப்பு'.

6. கூழடுதல்*

(கலிங்கத்துப் பரணி வசனம்)

ந. சி. கந்தையா பிள்ளை அவர்கள்

'போர்க்களத்தை முற்றாகக் காட்டுவதற்கு முடிவ தன்று; ஆளை அடுதற்குக் கவிழுகின்ற மதயானையின் இரத்தஞ் சொரியக் குமிழி விட்டுக் குளம் மடைதிறந் ததுபோற் பெருகும் இரத்தத்திற் றோய்ந்து கூழடுங்கள்" என்று அணங்கு சொல்லக் கணங்கள் கும்பிட்டுக் கூழ டத் தொடங்கின.

குறுமோடீ! நிணமாலே! கூடைவயிறீ! கூரெயிறீ! நீலீ! மாடீ! குதிர்வயிறீ! எல்லீரும் கூழட வாருங்கள். யானை மருப்பினாற் பல்லை விளக்குமின்; அதன் பழு வெலும்பை ஒடித்து நாக்கை வழியுமின்; அம்பின் வாயாகிய உகிர்க் கொள்ளியால் நகங்களைக் களைமின்; பாய் களிற்றின் மதமாகிய எண்ணெயை ஒழுக ஒழுகத் தலைக்கு வைமின்; எண்ணெய் போக வெண்மூளை என்னும் களிமண்ணைத் தேய்த்து இரத்த மடுவிற் கூட்டமாகப் பாய்ந்து நீந்தி யாடுமின்; இரத்த மடு அத்தனையும் அம்பும் வேலும் குந்தமும் கிடப்பதால் இக்கட்டுக்குப் பயந்தோர் கரையிடத்தே இருந்து குளிமின்; ஆழ்ந்த இரத்த மடுவில் நீந்தி நெடுநேரம் விளையாடாது கரை யேறி, வீழ்ந்த கலிங்கரின் நிண ஆடையை விரித்து உடுமின்; மதயானைகளின் கிம்புரிகளை அழகிய கை வளையல்களாக அணிமின்; குதிரைகளின் சதங்கை சேர்த்திய மாலைகளை, முத்தை உள் மணியாக இட்ட பாதசரங்களாக அணிமின்; செருவிடத்து வீர ரெறிந்த பெரிய வளைதடிகளை, வேண்டியளவும் வாயை நெகிழ்த்து, விடுகம்பிகளாக அணிமின்; பெரிய யானை யின் கரிய கரங்களைக் கரு நாணாகக் கட்டுமின்; இரட்டை முரச மெடுத்து நடுவே வாளின் பிடியைச் செருகி

(*இக்கட்டுரை 'கலிங்கத்துப் பரணி வசனம்' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. சென்னை, 'Teachers' Publishing House' என்ற தாபனத்தாரால் வெளியிடப்பட்டுள்ள நூல் இது.)

இரட்டை வாளியாக அணிமின்; பட்ட குதிரையின் குளம்புகளை வர்குவலயமாக அணிமின்; எறிந்து கிடக்கும் புரியுடைய சங்குகளை ஏகாவலியாக அணிமின்; சினந்து பொருத வீரரின் கண்மணியும் யானை மத்தக மூத்துங்கொண்டு மயிரிற் கோத்து அழகிய மாலைகளாக அணிமின். இன்னும் பலவாருக அணிகளைச் சுமத்தி அலங்கரித்துக்கொண்டிருப்போமாயின் பொழுதுபோய் விடும்; பசி அதிகரிக்கும். ஆதலின் பணி பூணுவதை இவ்வளவில் நிறுத்தி உண்பதற்காகிய சமையலுக்கு ஆயத்தஞ் செய்யுங்கள்.

பெரிய உடலுடைய மதயானையின் பிணமாகிய மலைமீது வலிய கழுகின் சிறகால் வேய்ந்த அழகிய பந்தரின்கீழ் அடுக்களையைக் கொள்ளுங்க ளம்மா; யானைகள் பொழிகின்ற மதத்தால் நிலம் மெழுகிப் பொடிந்துதிர்ந்த முத்தை உலக்கைமேல் வைத்திழைத்துக் கோல மிடுமின்; மதயானைகளின் மத்தகங்களை அடுப்பாகக்கொண்டு விரைவாகச் சமையுங்களம்மா; கொற்றவாளை வீர ரோச்சக் குடரொடு தலையும் காலும் அற்று வீழ்ந்த ஆனையாகிய பானையை அடுப்பில் ஏற்றுங்களம்மா; வெண்தயிரும் செந்தயிரும் கலந்து கிடக்கும் மிடாக்கள்போற் கிடக்கும் வீரரின், மூளையாகிய குளிர்ந்த தயிரையும் ஈரலையும் பெரிய மிடாக்களிற் கொள்ளுங்க ளம்மா; கொல்லுகின்ற யானையாகிய மிடாவுட் குதிரையின் குருதியைக் கூழடுதற்கு உலையாக வாருங்கள்; களத்தே துள்ளி வீழ்ந்த குதிரையின் வெண்பல்லாகிய உள்ளியும் கிள்ளி யிட்டு, நகங்களாகிய உப்பையும் இடுமின்; விண்ணுல கடையினும் கண்ணினின்றும் நீங்காத வீரரின் கோபாக்கினியாகிய நெருப்பை மூட்டுமின்; வேலும் அம்பும் குந்தமும் எறிதடிகளுமாகிய விறகுத் தடிகளை முரித்தெரிமின்; கல்லைக் கறித்துப் பல் மூறிந்து கவிழ்ந்து வீழ்ந்த கலிங்கர்தம் பல்லைத் தகர்த்துப் பழவரிசியாக எடுங்கள்; சுவையைத் தரும் மிகுந்த கூழுக்கு இடும் அரிசியைக் கறைபோகத் தீட்டுங்கள்; கண்ணுடைந்த முரசங்களை உரல்களாகக் கொள்ளுங்

கள்; இவ்வுரல்களின் எல்லா அரிசியையும் கொட்டிக் கொல்லும் யானையின் தந்த உலக்கையைப் போட்டுச் சலுக்கு மொலுக்கெனக் குத்துங்கள்.

"கல்லைக் கறித்துப் பன்முறிந்து
கவிழ்ந்து விழுந்த கலிங்கர்தம்
பல்லைத் தகர்த்துப் பழவரிசி
யாகப் பண்ணிக் கொள்ளீரே"

"இந்த வுரற்க ணிவ்வரிசி
யெல்லாம் பெய்து கொல்லானைத்
தந்த வுலக்கை தனையோச்சிச்
சலுக்கு மெலுக்கெனக் குத்தீரே."

குறிப்புரை

முதற் குலோத்துங்கனது கலிங்க வெற்றியைப் பரணியாய்ப் பாடினார் சயங்கொண்டார் என்ற புலவர். பரணி என்பது பிரபந்த வகைகளுள் ஒன்று.

கலிங்கப் பேயின் அழைப்பின்பேரில் காளி தன் பேய்களுடன் போர்க்களத்துக்குச் சென்று அக்காட்சியைக் கண்ட பின், பேய்களைப் பார்த்து 'இனிக் கூழடுக' எனக் கட்டளையிட்டனள். பேய்கள் அவ்வாறு செய்யத் தொடங்கின.

மோடி, நீலி – தேவியின் பெயர்கள் பேய்களுக்கு இடப்பட்டன. பிற யாவும் பேய்களின் பெயர்கள். அவை காரணப்பெயர்கள். எயிறு – பல். மருப்பு – தந்தம். பழு – விலா. இம்புரி – யானைத் தந்தப் பூண். கருகாண் – காப்புக் கயிறு. இரட்டை வாளி – ஓர் ஆபரண வகை. மத்தகம் – யானையின் தலை. கலிங்கர் கல்லைக் கறித்தனர்: தம்மினும் வலியராகிய சோழ வீரர்களுடன் போர் புரிந்தனர்.

வினாக்கள்

1. பேய்களுக்கு இங்கு வருகின்ற பெயர்களுடன், அப்பெயர்களுக்குக் காரணங்களையும் கூறுக.

2. பழுவெலும்பு, மதம், வெண்மூளை, குதிரைப் பல் ஆயன பேய்களால் எவ்வாறு உபயோகிக்கப்பட்டன.

3. பேய்கள் எவ்வெவற்றை எவ்வெவ் வாபரணங்களாக அணிந்து கொண்டன?

4. பேய்கள் கூழடு காட்சியினை நும் சொந்த சொற்களில் ஒரு கட்டுரையாக வரைக.

7. கயிலாய வாயில்*

(செலவு)

வித்துவான் ம. வி. இராகவன் அவர்கள்

நீர்வீழ்ச்சிகள்

காளிகங்கையின் இடக்கரையினின்றும் நேபாள நாட்டு எல்லை தொடங்குகிறது. வழி, ஆற்றின் கரையோரமே செல்வதால், பெரிய ஏற்றம் இறக்கம் ஏதும் இல்லை. ஆயினும் மேடும் பள்ளமும் நிறைந்து கரடு முரடாக உள்ளது. இரு பக்கங்களிலும் விண்ணுற நிவந்து நிற்கும் வியன் பெருமலைகள்; தேவதாரு மரம் செறிந்த செழுங்காடுகள், விளைபுலங்கள், பன்னிற மலர்களை யுடைய காட்டு ரோஜாச் செடிகள், காளி கங்கையோடு கலக்கும் கணக்கற்ற சிற்றாறுகள் காணப்படுகின்றன. †கர்பியாங்கை அடுத்துக் காணப்படும் மலை வீழருவிகள் கணக்கில் அடங்கா. ஓர் இடத்தில் பெருவெள்ளமாகப் பெருகி வீழ்ந்து ஓடும் ஒரு பேரருவி உயரமான மலை முகட்டினின்றும் வீழ்ந்து தத்தளிக்கும் தண்ணீரினின்றும் சிதறும் திவலைகள், புகைபோலச் சூழ்ந்துகொள்ளும். அத்தூமிப் படலத்தின்மீது சூரிய கிரணம் பட்டுப் பல வானவிற்களை ஒரு சேரத் தோற்றுவிக்கும். சுவர்போன்று நிற்கும் ஒரு மலையைத் துளைத்துப் பீறிட்டுக்கொண்டு வரும் மற்றோர் அருவி. தொலையில் உள்ளதொரு மலையின் சரிவில் தவழ்ந்து இறங்கும் வேறோர் அருவி மலையின் முடி முதல் அடிவரை வெள்ளிப் பட்டம் பதித்தாற்போன்று காட்சி அளிக்கும். கருவரை ஒன்றன்மீது வளைந்து நெளிந்து கொடி கொடியாகப் பிரிந்து வழியும் மற்றொரு நீர்வீழ்ச்சி கார் மேகத்திடையே தோன்றும் மின்னற்கொடிபோன்று

*சென்னை, 'பழனியப்பா பிரதர்ஸ்' வெளியிட்டுள்ள 'கயிலாய வாயில்' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது இக்கட்டுரை.

†இடப்பெயர்.

மிளிரும். இன்னோரருவி, நாணிக் கோணி அடங்கி ஒடுங்கி ஒசிந்து அசைந்து நடந்து வரும் இளநங்கை போன்று ஆரவாரம் இன்றி அமைதியாக இறங்கி வரும். நெடிய மலைமுடியினின்றும் புறப்படும் சில நீர் வீழ்ச்சிகளை—அவை அடியிடத்தை அடையுமுன்னரே—காற்று நுண்ணிய அணுக்களாக்கிச் சிதறடித்துவிடும். சில விடங்களில் நீர் தூவானமாகத் துளித்து வழிச் செல்வோரை மஞ்சன மாட்டும். மற்றுஞ் சில விடங்களில் முத்துமழை பொழிவது போன்று, நீர் சிதைந்து சிதறித் திரள் திரளாகச் சிந்திக்கொண்டிருக்கும். இக் கவர்ச்சி மிக்க நீர்வீழ்ச்சிகள், வழிச்செல்வோர் உள்ளத்தில் எழுச்சியை உண்டாக்கி மகிழ்ச்சி யூட்டும். இங்குக் காணும் நீரருவிகள் யாவும் உயிரொளி பெற்றுப் பெண்மை நலங்கனிந்து காட்சி யளிக்கின்றன.

காலபாணி

இவ்வழி இங்ஙனம் இன்ப மூட்டும் இயற்கைக் காட்சிகள் நிறைந்ததாயினும் கடப்பதற் கரிய கடுமை வாய்ந்தது. வழிகாட்டி சமயம் அறிந்து சாமர்த்திய மாக முன்வந்து உதவி செய்வான்; இடுக்கண் உள்ள இடம் அறிந்து அடுத்து நின்று அழைத்துச் செல்வான். இவ்வழியில் பத்து மைல் தூரம் சென்றதும் காலபானி என்னும் இடம் உள்ளது. அதனை அடைவதற்கு முன் ஒரு மலையடியின் கீழே பெரிய கரும்பாறையினின்றும் ஒரு நீரூற்று பீறிட்டு எழுந்து பாய்ந்து ஓடுகிறது. அது சேறு படிந்து கறுப்பு நிறமுடையதாக இருப்ப தால், கால்பானி (கறுப்பு நீர்) எனப்படுகிறது. அதன் அருகில் உள்ள இடமும் அதன் பெயரால் வழங்கப் படுகின்றது. காலபானி என்பது ஊர் அன்று. அங்குத் தங்குவதற்கு வீடோ குடிசையோ ஏதும் இல்லை. காலபானியினின்றும் கூடார வாசம் தொடங்குகின்றது. மீண்டும் கர்பியாங் வந்து சேரும் வரை யாத்திரை செய்வோர் கூடாரங்களிலேயே தங்க வேண்டும். கூடாரம் அடிப்பதற்கு ஏற்ற சமவெளி கால்பானியில்

உள்ளது. விறகடுப்பில் சமைக்கும் வேலையும் கர்பியாங் கோடு முடிவுறுகிறது. காலபானியினின்றும் உறைபனிப் பிரதேசம் தொடங்குவதால், அங்கு மரம் செடி கொடிகள் வளர மாட்டா. ஆகவே, அங்கு விறகும் கிடைக்காது. அங்கிருந்து மண்ணெண்ணெய் அடுப்பையே பயன் படுத்திக் கொள்ள வேண்டும். காலபானி கடல் மட்டத் தினின்றும் பன்னிரண்டாயிரம் அடி உயரத்தில் உள்ளது. குளிரின் கடுமையும் இங்கேயே உணரப் படும். கர்பியாங் வரை பருத்தியுடையோடேயே பிரயாணம் செய்யலாம். குளிர் மிகுதியாக உள்ள சில இடங்களில் உடலுக்கு மட்டும் கம்பளிச்சட்டை அணி வது சாலும். ஆயின் காலபானியினின்றும் பருத்தி புடைகள் பயன்படா. தலைமுதல் கால் வரை கம்பள உடையே அணிய வேண்டும். காலுக்குக் கம்பளச் சட்டை, உடலுக்கு ஒன்றன்மேல் ஒன்றாக நான்கைந்து கம்பளச் சட்டைகள், அவற்றின்மேல் நீண்ட கம்பள அங்கி, தலைக்குக் கம்பளத்தா லான குல்லாய், கழுத்துக் குக் கம்பளப் பட்டை, கம்பளக் கையுறை காலுறை கள், காலில் பாதத்தினின்றும் முழந்தாள்வரை சுற்றிக் கட்டும் கம்பளப்பட்டை ஆகிய இவ்வளவும் அணிந்து கொள்ள வேண்டும். காலில் அல்மோராவினின்றும் வாங்கிவந்த ஆணிகள் தைத்த தோற் செருப்புக்களைப் பூட்டிக்கொள்ள வேண்டும்.

காலபானியினின்றும் கம்பள உடைகளோடேயே பிரயாணம் செய்ய வேண்டும். பெண்களும் தங்கள் ஆடைக்குமேல் கம்பள உடைகளை அணிந்துகொண்டே செல்லவேண்டும். பனியால் முகமும் உடலும் கருகி வெடித்துவிடும். உடலிலும் முகத்திலும் அடிக்கடி 'வாஸ்லைன்' எண்ணெய் பூசிக்கொள்ள வேண்டும். காலபானியிலிருந்தே பனிக்கட்டி மழை தொடங்கி விடும். கணவாயின் அருகில் செல்லச் செல்ல அது மிகுதியாகப் பொழியும். அங்கு விழும் பனிக்கட்டியில் மனிதன் புதைந்து விடுவான். எனவே, வானநிலை தெளிந்து பனி மழை நிற்கும் வரை, வழிகாட்டி

கணவாயை நோக்கி முன்னேற விடான். கணவாய்க்குச் சில மைல்கள் இப்பாலேயே கூடாரம் அடித்துத் தங்கி, அதனைக் கடப்பதற்கு ஏற்ற சமயத்தை எதிர் பார்த்திருக்க வேண்டும். கணவாயைக் கடப்பதற்குக் காலை நேரமே ஏற்ற சமயமாகும். வெயில் எழுந்து பனிக்கட்டி உருகத் தொடங்குவதற்கு முன்னரே அதனைக் கடந்துவிட வேண்டும். வழிகாட்டி வான நிலையை நோக்கி அது தெளிவுற்றிருக்கும் செவ்வி அறிந்து புறப்படுமாறு கட்டளையிடுவான். புறப்படுவதற்கு முன் வயிறு நிரம்ப உணவுகொள்ள வேண்டும். லிப்புத் தடாகக் கணவாய் பதினாறாயிரம் அடி உள்ளது. அது கடப்பதற்கு அரிய கடுமையான இடமாகும். இதன் உச்சியில் ஏறிச் செல்லுகையில் வயிறு நிறைந்திருக்க வேண்டும். உயரச் செல்லச் செல்ல காற்றுக் குறைவாக இருக்குமாகையால், வெறும் வயிற்றோடு செல்லின் வாந்தியும் மயக்கமும் வரும். எனவே, வயிறு நிறைய உணவுகொள்ள வேண்டுவதோடு, சிறிதளவு சிற்றுண்டியும், மாங்காய் வற்றல், கிச்சிலிக்காய் ஊறுகாய், பேரீச்சம் பழம், மிளகு ஆகியவற்றையும் சட்டைப்பையில் எடுத்துச் செல்ல வேண்டும். அடிக்கடி, முகம், கைகால்களில் பூசிக்கொள்ள வாஸ்லேன் எண்ணெயும், மயக்கம் வரின் முகர்வதற்கு முகர் உப்பும் உடன்கொண்டு செல்ல வேண்டும்.

இப்பகுதியில் யாத்திரிகர்கள் தங்கள் விருப்பம் போல் நடந்துகொள்ள முடியாது. அனைவரும் வழிகாட்டியின் ஆணைக்கு அடங்கியே நடந்துகொள்ள வேண்டும். இடுக்கண் இன்றி அனைவரையும் கணவாயைக் கடப்பிப்பது வழிகாட்டியின் பொறுப்பு. ஆகையால், அவன் ஒவ்வொரு சிறு செயலையும் கூர்ந்து கவனிப்பான்; ஒவ்வொருவரையும் அணுகி யாவும் குறைவின்றி இருக்கின்றனவா என்று அன்போடு உசாவுவான். வேண்டுவன யாவும் மறவாமல் எடுத்துக் கொள்ளுமாறு ஒவ்வொருவருக்கும் அடிக்கடி நினைவூட்டுவான். அனைவரும் ஆயத்தமானதும் வழிகாட்டி

புறப்பட அனுமதி அளிப்பான். செல்வோர் தங்கள் உடலைக் கம்பளத்தால் மூடி மறைத்துக்கொண்டு செல்ல வேண்டும்.

கணவாயைக் கடத்தல்

லிப்புத் தடாகக் கணவாய் கடல் அளவினின்றும் பதினாறாயிரத்து எண்ணூறு அடி உயரத்தில் உள்ளது. முதல் நான்கு மைல் தூரம், செங்குத்தான ஏற்றம் இவ் வழியில் விரையாமல் மெல்ல நடந்து ஏற வேண்டும். இன்றேல் தொடக்கத்திலேயே உடல் தளர்ந்து உள்ளம் சோர்ந்துவிடும். உயரச் செல்லச் செல்ல வேண்டு மளவு காற்று இன்மையால் மூச்சுத் திணறும். மூக்கு, வாய் ஆகிய ஈருறுப்புக்களையும் சேரப் பயன்படுத்தி னும் இதயம் துடிக்கும். வயிற்றில் உணவு குறைவா யிருப்பின் குமட்டலும் வாந்தியும் வரும். காற்றின் குறைவினால் தலை சுழன்று மயக்கம் உண்டாகும். இவற்றிற்குப் பரிகாரமாக அவ்வப்போது சிற்றுண்டி உட்கொள்ள வேண்டும். பின்னர் மாங்காய் வற்றல், கிச்சிலிக்காய் ஊறுகாய், பேரீச்சம்பழம், மிளகு இவற்றை மென்றுகொண்டும் முகர் உப்பை முகர்ந்து கொண்டும் செல்ல வேண்டும். குதிரைமீது செல்வோர்க் கும் இவ்வின்னல்கள் உண்டு. பனிக்கட்டியின்மீது, நடந்து செல்லுகையில் குருதியோட்டம் மிகவும் குறைந்துவிடும். உயிர்ப்புக்குப் போதிய காற்றின்மை யால் களைப்பும் மயக்கமும் உண்டாகும். அந்நிலையில் யார்க்கும் அயர்ச்சி தீரச் சற்றுப் பனிக்கட்டியின்மீது அமரத் தோன்றும். ஆயின் அயர்ந்துள்ளோர் எவரும் பனிக்கட்டியின்மீது அமரலாகாது. அமரின் உணர்ச்சி ஒடுங்கி உறக்கம் வரும். படுத்து உறங்குவார், பின்னர் விழித்து எழார்; பேருறக்கத்தில் ஆழ்ந்து பிண மாவார். எனவே, வழிகாட்டி யாரையும் உறைபனியின் மீது அமரவிடாமல் தடுத்துத் தொடர்ந்து நடக்குமாறு தூண்டுவான்.

பனியடையின்மீது நடந்து செல்வது மிக்க. துன்பம் தருவ தொன்ருகும். காலையிற் செல்வதில் துன்பம் குறைவு என்று கூறலாமே அன்றித் துன்பமே இல்லை என்று கூறமுடியாது. கீழே பனியடை, மேலே பனிக்கட்டித் தூள் சிதறல். எனவே, கம்பளத்தை விலக விடாமல் இறுகப் போர்த்திக் கொண்டு செல்ல வேண்டும். மேலே செல்லச் செல்ல சில இடங்களில் வழி மிகவும் குறுகிவிடும். ஒருபுறம் ஆழம் காண முடியாத பள்ளம்; மறுபுறம் பனிக்கட்டி யால் மூடப்பட்ட நெடிய மலை. மேலே உறைபனிப் பாறை உருகி நழுவிக்கொண்டிருக்கும். கீழுள்ள பனி யடையும் மெல்ல உருகிக்கொண்டிருக்கும். பனி இளகியிருக்கும் இடங்களில் இறுகிய சேற்றிற் புதைவது போன்று கால் புதையும். அவ்விடங்களில் ஊன்று கோலின் உதவிகொண்டு மெல்ல நடந்து செல்ல வேண் டும். பனியடையின்மீது நடந்து செல்கையில் கால் தளர்ந்து தடுமாறும்; தலை சுழலும்; கண் சிவந்து விடும்; உயர நோக்கின் வானுலகேற வகுத்தது போன்று மேனேக்கிச் சென்றுகொண்டிருக்கும் வழி மனத்தைத் திகைப்புறுத்தும். குனிந்து செல்வோர், முன்னுள்ள வழியை நிமிர்ந்து நோக்காமல் காலடியை நோக்கிய வாறே உறுதியோடு செல்ல வேண்டும்.

லிப்புத் தடாகம்

லிப்புத் தடாகக் கணவாயின் உச்சி, கடலளவுக்கு மேல் பதினாருயிரத்து எண்ணூறு அடி உயரத்தில் உள்ளது. அதன் உச்சியை அணுக அணுக உள்ளத் தில் உவகை ஊற்றெடுத்துப் பெருகும். உச்சியை எய்தியதும் உள்ளத்தில் எழும் கிளர்ச்சி உரைக்கு அடங்காது. இங்கு இயற்கை யன்னை ஒருகால் உயிருண்ணும் வீரமாகாளிபோன்று தோன்றி அச் சுறுத்துவாள்; மற்ருெருகால் அன்னை மலர்மகள் போன்று நன்னயங் காட்டி இன்புறுத்துவாள். உறை பனிப்படலமாக வுள்ள கணவாய் சோதி மயமாக இருக்

கும். அதனை வெறுங் கண்ணால் நோக்கின் விரைவில் கண்ணொளி மழுங்கிவிடும். எனவே, இங்குக் கறுப்பு அல்லது பச்சை நிறக் கண்ணாடி அணிந்துகொள்ளுதல் வேண்டும். கீழே சிறிது தூரத்தில் வெள்ளி மயமாக விளங்கும் மலையின் இடையில் பச்சை நிறமாகத் தோன்றும் நீரையுடைய லிப்புத் தடாகம் காணப்படும். அத் தடாகத்தினின்றும் தோன்றிச் சிற்றோடைபோன்று கீழ்நோக்கித் தவழ்ந்து செல்லும் காளி நதியின் குழந்தைப் பருவத்தை இங்குக் காணலாம்.

வினாக்கள்

1. கர்பியாங் என்ற இடத்தினை அடுத்துத் தோன்றும் அருவிகளின் அழகினை விரித்துரைக்க.
2. 'காலபானி' என்பது என்ன?
3. 'காலபானி'யின் இயற்கை நிலை எத்தகையது?
4. 'காலபானி'யிலிருந்து முன்னேறிச் செல்லுவோர் இயற்கை நிலையில் இன்றியமையாமல் கவனிக்க வேண்டியன யாவை? ஏன்?
5. அங்கிருந்து செல்வோர் உடன்கொண்டு செல்ல வேண்டுவன யாவை? ஏன்?
6. லிப்புத் தடாகத்தினைப் பற்றி நீவிர் அறிந்ததை வரைக.

பயிற்சி

கட்டுரை வரைக:

1. லிப்புத் தடாகக் கணவாய்ச் செலவு.
2. கயிலாய வாயிலின் வழிகாட்டி.

---

8. கால்டுவெல்

வித்துவான் திரு. பி. பி. எஸ். இராமானுசாச்சாரியார் அவர்கள்

அமிழ்தினும் இனிதாய தமிழ் மொழியை அலை கடலுக்கப்பாற்பட்ட அயல் நாட்டவரும் போற்றிப் பயின்றதோடு அதன் பெருமையை உலகறியச் செய்து யர்த்தி யுள்ளனர். கிறித்து சமயத் தொண்டாற்றும் பொருட்டு மேனாடுகளினின்றும் தமிழ்நாடு போந்த

பெருமக்கள் பலர் அருந்தமிழன்னைக்கு அணி பல புனைந்து போற்றினர். அத்தகையோருள் தலைசிறந்தவர் இங்குக் கூறப் போந்த கால்டுவெல் ஐயர் அவர்கள். இப்பெரியார் சமயப் பணி புரிவான் வேண்டித் தமிழ் நாடெய்தித் தமிழோடு ஆரியம் முதலிய பிற இந்திய மொழிகளையும் பயின்று, அவற்றிற் புலமை யெய்தி, அரும்பெற லாராய்ச்சிகள் செய்து 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்ற ஒப்பற்ற நூலொன்றை எழுதி யுள்ளார். அந்நூல் இன்று தமிழ் மொழிக்கு எல்லை யற்ற பெருமை யீந்துள்ளது.

அன்றியும் இவர்தம் வாழ்நாளில் உலகுக்கு, சிறப்பாகத் தமிழ் நாட்டுக்குச் செய்துள்ள நன்மைகள் மிகப் பல. ஏசு பெருமான் உபதேசித்த உயர் நெறியைப் பாமர மக்கட்குக் காட்டினர். எத்தகைய இன்னல்கட்கும் உடையாது தொட்ட காரியத்தை முட்டின்றி முடிக்கும் பண்பாளரிவர். எளிய வாழ்க்கையை மேற்கொண்டவர்; காலமெல்லாம் இறைவனை நினைந்துருகி அவன் அருள்வழி நின்றே பணி யாற்றியவர். ஏழைகட்கு உதவிகள் பல புரிந்து அவர்தம் வறுமை யகற்றிய வள்ளல். வாழுமுயிர்க்குக் கண்ணாகிய எண்ணையும் எழுத்தையும் அறியாமலும் பேணாமலு மிருந்த மக்கட்குக் கல்வியாம் கருந்தனத்தை யீந்து கண் விழிக்கச் செய்த காருணியர். ஆங்கில நாட்டிற் பிறந்தவ ராயினும் தமிழ் நாட்டில் வாழ்ந்து தமிழகமே தாயகமாகக் கொண்டு தமிழ் மொழியோடு உடலும் உயிருமாய் ஒன்றிய உத்தமர். தமிழ் மொழியின் ஏற்றத்தைத் தமிழ் மக்களுக்கே எடுத்துணர்த்திய ஏந்தல். கடவுட் பற்று முதலான அரும் பண்புகளை மக்களுள்ளத்தே வித்தி விளைவித்த நல்லுழவர். 'உழைப்பின் வாரா உறுதி யொன்றில்லை' என்பதை நடைமுறையிற் செய்து மெய்ப்பித்துக் காட்டிய பண்பாளர். தொகுத்துரைக்கப் புகின்,

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்'

என்னும் தமிழ் மறைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இலங்கியவர் இவர் என்னலாம். இவர் வாழ்க்கை வரலாறு தமிழ் இளைஞர்கட்கு நல் விருந்தாம்; மடியைப் போக்கும் மருந்தாம். ஆதலின் அதனைச் சிறிதே நோக்குவாம்.

இராபர்ட் கால்டுவெல் அயர்லாந்தில் கிளாடி என்னும் ஆற்றங்கரையில் அமைந்துள்ள ஒரு சிற்றூரின் கண் 1814 ஆம் ஆண்டில் தோன்றினர். இளமையிலேயே மதிநலம் மிகவாய்க்கப் பெற்றவராய்ப் பதினாறு வயதில் ஆங்கில இலக்கிய இலக்கணங்களை நன்கு கற்றுத்தேர்ந்தார். இவர் கருத்து நீக்கமற எங்கும் நிறைந்துள்ள இறைவன தியல்பை ஆராய்ந் தறிந்து, இறை யுண்மையை அறியாதோர்க் குணர்த்தித் தமது சமய நெறியை எங்கும் பரப்பும் உயர் தொண்டினைப் புரிவதிலேயே ஒன்றி நின்றது. 'உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்'. என்ற தேவர் வாக்குக் கிலக்காய் அவ்விளமையிலேயே விளங்கினர் நம் ஐயரவர்கள். இவர் கருத்திற் கிணங்கவே, இலண்டன் மாநகரச் சமயத்தொண்டர் குழுவினர் தமிழ்நாட்டில் சமயப் பணி புரியத்தக்க கல்வியும் ஒழுக்கமும் நிறைந்த சீலர் ஒருவரை நாடி, அதற்கேற்ற தகுதியாளர் இவரே எனத் தேர்ந்து 1838 ஆம் ஆண்டில் இவரைத் தமிழ்நாட்டிற் கனுப்பினர். அது காலை நான்கு திங்களைக் கப்பற் செலவிற் கழித்தார் கால்டுவேலர்.

காலத்தின் அருமையறிந்த கால்டுவெல் ஐயர் அங்ஙனம் செய்த அச்செலவுக் காலத்தை வீணே கழிக்காமல் தம்முடன் பயணஞ் செய்த சி. பி பிரௌன் என்னும் பேரறிஞருடன் பழக்கம் செய்துகொண்டார். சென்னை அரசாங்கத்தைச் சேர்ந்தவராய், ஆந்திரமும் ஆரியமும் வல்லுநரான அப்பெரியாரிடம் அவ்விரு மொழிகளையும் கற்றுத் தேர்ந்தார். தாம் செல்லும் இந்திய நாட்டில் மக்களுடன் பேசிப் பழகவும், அவர்கட்குச் சமய உண்மையை உணர்த்தவும் வேண்டியவராதலின் அதற்கேற்ற மொழிக் கல்வியைப் பிரயாண காலத்

திலேயே கற்றுக்கொண்ட இவரது மடியின்மை நம் இளைஞர்கட்குச் சிறந்த வழிகாட்டியா மன்றோ! நம் இளைஞர்களுள் சிலர் காலத்தின் அருமை யறியாது மடியுடையராய்க் களியாட்டங்களிற் காலம் போக்கி அதனைக் கொல்கின்றனரே! தம்மைக் காலங் கொல்லும் என்னுங் கருத்தின்றித் திரிகின்றனரே! அவர்கள் ஐயரவர்களின் அருமுயற்சியைக் கண்டு அறிவு பெறுவார்களாக.

இங்ஙனம் அசைவிலா ஊக்கத்துடன் அன்னிய மொழி பயின்ற ஐயரவர்களை ஆக்கம் தேடிவந் தடைந்தது பிற்காலத்தில்.

'ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை'

என்பது பொய்யாமொழி யன்றோ?

சென்னை வந்திறங்கிய நம் ஐயரவர்கள் அங்குத் தமிழ்ப் புலமை நனி பெற்ற துருவர் ஐயர் என்பாரிடம் மூன்றாண்டுகள் தமிழ்க் கல்வி பயின்றார். தாம் தொண்டு செய்தற்குரிய இடம் பாண்டி நாடே என் றுறுதி யிட்டதோடு அவ்விடத்திற் குள்ள நானூறு கல் தொலைவையும் நடந்தே கடப்ப தென முடிவு செய்தார். அவ்வாறு செய்வதனால் தமிழ் நாட்டின் இயற்கை வளங்கள், தமிழ் மக்களின் பழக்க வழக்கங்கள், தமிழ் மொழியின் பண்புகள் இவற்றை நன்கு அறிந்துகொள்ளலாம் என்பது ஐயர் துணிபு. தாம் துணிவு கொண்டவாறே சென்னையிலிருந்து கால் நடையாகப் புறப்பட்டார். இடைவழியில் இவர் எய்திய தொல்லைகட்கோ எல்லை யில்லை. தமிழ் மக்களிடம் இவர்க்கு ஆதரவு கிடைக்க வில்லை. அயல் நாட்டவன் என்னும் வேற்றுமை யுணர்ச்சியால் மக்கள் இடந்தர மறுத்தனர். 'பழவினையால் பரிதவிக்கும் பரதேசி இவன். வழி செல்வதற்கு வண்டி யமைத்துக்கொள்ள வகை யில்லாத வறிய னிவன்' என்றேசுவாராயினர். எல்லாவற்றையும் பொறுமையோடு சகித்துக் கொண்டு,

'மெய்வருத்தம் பாராமலும் பசிநோக்காமலும் கண் துஞ்சாமலும் எவ்வெவர் தீமையும்மேற்கொள்ளாமலும் செவ்வி அருமையும் பாராமலும் அவமதிப்பும் கொள்ளாமலும் கருமமே கண்ணுகை' வழி நடந்தார் நம் ஐயர். முடிவில்,

'எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்'

என்பதற்கிணங்கத் தாம்தொடங்கிய செயலில் வெற்றியடைந்தவராய்ப் பாண்டி நாட்டினை அடைந்து, இடையன் குடி என்னும் ஊரைத் தமக்குரிய இடமாகத் தேர்ந்துகொண்டு அங்கு வதிவா ராயினர்.

இடையன்குடி என்பது ஒழுங்கற்ற தெருக்களையும் வீடுகளையு முடைய சிறிய குப்பைக் காடு. அதனில் ஐயரவர்கள் பல ஒழுங்குகளைச் செய்து கிணறுகள் தோண்டுவித்துத் தெருக்களையும் வீடுகளையும் புதுக்கி, அதனை நாகரிகத்தில் நனி சிறந்த இடமாகச் செய்தார். அவ்வூரில் துவக்கப் பள்ளிகளை அமைத்தார். கண்ணைக் கவரும் வனப்புடையதாய்க் கிறித்துவ ஆலயம் ஒன்றைக் கட்டினர். இவர் தமிழ் நாடெய்து முன் திருநெல்வேலி மாவட்டத்துக் கிறித்துவரின் தொகை ஆறுயிரமாக விருந்தது. இவரது அருமுயற்சியால் அத்தொகை ஒரு லட்சமாகப் பெருகிற்று.

'அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்'

என்று நாயனர் அருளிச் செய்தது நம் ஐயர் திறத்தில் மெய்யே பயனளித்தது.

இந்நிலையில் தமிழ் நாட்டில் ஆயிரக்கணக்காயினோர் கிறித்தவ மதத்தினராகவே, அவர்கள் வழிபாட்டிற்குப் பயன்படுமாறு கிறித்துவரின் ஒப்பரிய வேத நூலான விவிலிய நூலை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்க வேண்டிய பணி யொன்று தோன்றியது. மேனுடுகளிலிருந்து தமிழ்நாடு போந்து

வாழ்ந்துவந்த அறிஞர் பன்னிருவருக்கு அப்பணி அளிக்கப்பட்டு, பத்தாண்டுகளளவும் அது தொடர்ச்சியாக நடந்தேறியது. அதனில் பெரும்பங்குகொண்டு தலையாய தொண்டு புரிந்தவர் நம் ஐயர் ஒருவரே எனல் மிகை யாகாது.

'மலையாய நூலையெலாம் கல்லிக்கல்லி மற்றொரு நூல் மாண்புடனே செய்மின்கள்' என்று புதுமை வேட்கையுடைய புலவர் ஒருவர் கூறியாங்கு மலைபோலு மாண்புடைய விவிலியத்தைத் தமிழிலாக்கித் தமிழ்க் கிறித்துவ அறிஞர்க்கு நிலைநின்ற தொண்டு புரிந்தார் நம் அருள் வள்ளல்.

தமிழ் நாட்டுக்கு ஐயரவர்களால் ஏற்பட்ட பெருமைகள் பல. இடையன்குடியில் ஐயரவர்கள் கண்ட செந்நிற மமைந்த மணல் இவர் கருத்தை ஈர்த்தது. அதனைச் சிறிதளவு எடுத்து வியன்னா நகர ஆராய்ச்சி நிலையத்திற் கனுப்பினார். அந்த ஆராய்ச்சி நிலையத்தினர் அம்மணலை நன்கு ஆராய்ந்து உலகிலேயே வேறெங்கும் இத்தகைய பண்பமைந்த மணல் இல்லை என முடிவு கண்டறிவித்தனர். பண்டைத் தமிழர்கள் கடல் கடந்து சென்று அயல் நாட்டினரோடு வாணிகம் செய்துவந்த பெருமையை ஆராய்ந்து விளங்க எழுதியுள்ளார் நம் ஐயர். தென்னிந்தியாவில் வழங்கிவரும் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளுவம், குடகு ஆகிய ஆறு திருந்திய மொழிகளையும், துதம், கோதம், கோண்டு, கந்தம், இராஜ்மகால், ஒரோவான் ஆகிய ஆறு திருந்தா மொழிகளையும் ஒப்பு நோக்கி ஆராய்ந்து "திராவிடக் குழு மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்னும் பெரிய நூலை ஆங்கில மொழியில் எழுதி வெளியிட்டார். அதனில் மலையாளம், தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிகளுக் கெல்லாம் தாய்மொழி நம் தமிழ் மொழியே என்பதை விளக்கிக் காட்டி யுள்ளார். இம் மொழிக ளெல்லாம் தமிழ் மொழியின் வழிமொழிகளே யாயினும் நாளடைவில் வடமொழியோடு கலந்து, வட

மொழி விதிகளை நிறைய ஏற்றுத் தனித் தியங்கும் ஆற்ற லிழந்தன. தமிழ் மொழி ஒன்றே பிற மொழிக் கலப்பால் கலங்காது தனித் தியங்கும் தன்மை வாய்ந்துள்ளது. இவ்வரிய உண்மைகளும் இவைபோன்ற பிற நுட்பங் களும் இவ்வொப்பிலக்கண நூலுள் விரிவாகக் கூறப் பட்டுள்ளன. இங்ஙனம் பல மொழிகளை ஆய்ந்து ஒப்பிலக்கணம் எழுதி வெளியிட்ட பெருமை முதன் முதல் கால்டுவெல் ஐயர் ஒருவர்க்கே அமைந்த தாகும். இதுமட்டுமே யன்றித் திருநெல்வேலி சரிதம், தாமரைத் தடாகம், ஞானஸ்நானம், நற்கருணை ஆகிய நூல்களும் இவரால் எழுதி வெளியிடப்பட்டன.

இவ்வாறு சிற்றூரைச் சீர்திருத்தியும், கல்வியை வளர்க்கப் பள்ளிகள் நிறுவியும், பெண் கல்வியைப் பெருமையுறப் பேணியும், சமய ஒழுக்கத்தைப் போற்றி யும், ஆலயம் அமைத்தும் அரும்பணி பல புரிந்த ஐயரவர்கள் 1891 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றுக்கொள் வான்வேண்டிக் கோடைக்கானலை அடைந்தார்கள். அங்குக் கோயி லில்லாமை கண்டு அம்முதுமைப் பருவத்திலும் தம் உடல் தளர்ச்சி கருதாது அவ்விடத் தில் ஒரு கோயில் கட்டினார்கள். ஆனால் ஐயரவர்கள் அதிகநாள் ஓய்வு பெற்றுக்கொண்டு வாழ்ந்திருக்க வில்லை. சில மாதங்களில் இறைவன் இணையடி நீழலை எய்தினார்கள். இவருடைய பொன்னுடல் இவர் விருப் பப்படியே இடையன்குடிக்குக் கொண்டுசெல்லப்பட்டு, இவரால் நிறுவப்பட்ட ஆலயத்திலேயே அடக்கஞ் செய்யப்பட்டது. இவர்தம் புகழுடலோ உலகெல்லாம் ஒளி பரப்பி விளங்குகின்றது.

வினாக்கள்

1. அயல் நாட்டவர் தமிழ் மொழிக்கு எத்தகைய பணியினைச் செய் துள்ளனர்?

2. "உழைப்பின் வாரா உறுதியோ வில்லை" என்னும் நன்மொழி ஐயரவர்களிடம் எவ்வாறு பொருத்தவ தாயிற்று?

3. ஐயரவர்களின் பிறப்பு இளமை ஆயனபற்றி அறிந்த அளவுக்கு

4. கால்டுவெல், காலத்தின் அருமையை யுணர்ந்தவர் என்றற்குச் சான்று தருக.

5. தமிழ்நாட்டின் இயற்கை வளத்தையும் மக்கட் பண்பையும் அறிந்து கொள்ள விழைந்த ஐயரவர்கள் யாது செய்தார்கள்? அச்செயலில் அவர்க்குற்ற இன்னலையும் காட்டுக.

6. இவர்களுடைய முயற்சியால் இடையன் குடிக்குற்ற நன்மைகளைப் புலப்படுத்துக.

7. ஐயரவர்களின் ஒப்பிலக்கணத்தால் தமிழ் மொழிக்குற்ற பெருமை யாது?

8. "இடையன்குடிச் செந்நிற மண்"—குறிப்பு வரைக.

9. ஐயரவர்களின் இறுதிக் காலத்தைப் பற்றி வரைக.

பயிற்சி

கட்டுரை வரைக:

1. கால்டுவெல் தமிழுக்குச் செய்த தொண்டு.
2. இடையன் குடியும் ஐயரவர்களும்.

---

9. செங்குட்டுவன் அரசியல்*

இராவ் சாகிப் மு. இராகவ ஐயங்கார் அவர்கள்

சேரர் பெருமானது அரசாங்க முறைகளை நோக்குவோம். பொதுவாகச் சொல்லுமிடத்து, செங்குட்டுவன் காலத்தனவாகிய சங்க நூல்களிலே அரசியன் முறைகளாக அமைந்தன யாவும் நம் வேந்தனுக்கும் உரியவை யென்றே சொல்லலாம். அவ்வாறு கூறப்பட்ட அரசியல்களை விடாது இங்கு விவரிப்பதாயின் இவ்வதிகாரம் அளவு கடந்துவிடும். அதனால், வேற்று நூல்களுட் புகாமல் செங்குட்டுவன் சம்பந்தமான செய்யுட்களிலிருந்து தெரியவரும் விசேடச் செய்திகளை மட்டும் இங்கு விளக்குவோம்.

நம் சேரர் பெருந்தகை, சங்க காலத்துத் தமிழ் வேந்தருள்ளே சிறந்து விளங்கியவன். இவன் தந்தை

---

* 'சேரன் செங்குட்டுவன்' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

நெடுஞ்சேரலாதனும், இவன் முன்னோரும் வடவாரியருடனும் அயலரசருடனும் அடுத்தடுத்துப் போர் புரிந்து வந்தவரென்று தெரிதலால், அவரது பகைமையெல்லாம் இவனுக்கும் இருந்தன என்றே தெரிகின்றது. அதனால், கடல் வழியாகவும் தரை வழியாகவும் பகைவர் தன்னெல்லையுட் புகுவதைத் தடுப்பதற் கேற்ற கப்பற் படையும் தரைப்படையும் இவன் உடையவனாக விருந்தான்.

> "சினமிகு தானை வானவன் குடகடற்
> பொலந்தரு நாவா யோட்டிய ஞான்றைப்
> பிறர்கலஞ் செல்கலா தனையேம்"
>
> —(புறநா. 126)

என, மரக்கலப் படையின் மாட்சியால் கடற்றலைமையை அக்காலத்தே செங்குட்டுவன் வகித்திருந்த சிறப்பை இவனது பெயர் கூறாது வியந்தனர் மாறோக்கத்து நப்பசலையார் என்ற புலவர். இவ்வேந்தனது தரைப் படையும் அங்ஙனமே அளவாலும் ஆற்றலாலும் மேம்பட்டிருந்தது. பத்தினிக்குப் படிமச் சிலை எடுத்தற்கும், ஆரிய வரசரை வெற்றி கோடற்குமாக இவன் வடக்கே சென்று வந்த முப்பத்திரண்டு மாதம் வரை இவனாட்டிற் குழப்ப மொன்றும் இல்லா திருந்ததோடு, குடிகளெல்லாம் இவனாட்சியில் மகிழ்ச்சி மிக்கவர்களாய்த் தம் அரசன் வெற்றியைத் தமக்குரிய பெருமையாகவே கொண்டு மகிழ்ந்தனர் என்று தெரிகிறது.

செங்குட்டுவனது அரசியலில், முற்கால முறைப் படி அமைச்சர், புரோகிதர், சேனாபதியர், தூதுவர், சாரணர் என்ற ஐவருமே சிறந்திருந்தவர்கள். இவர்களை அரசர்க்குரிய ஐம்பெருங் குழு என்பர் முன்னோர். இவர்களன்றிக் கரும வினைஞர், கணக்கியல் வினைஞர், தரும வினைஞர், தந்திர வினைஞர், பெருங்கணி என அரசியலை நிர்வகிக்குந் தலைவரும் இருந்தனர். கரும வினைஞர் என்போர் தேசத்தின் ஆட்சியை நடத்துவோரென்றும், கணக்கியல் வினைஞர் என்போர்

தேசத்தின் அரசிறை வருவாய்களைக் கண்காணிக்கும் அதிகாரிக ளென்றும், தரும வினைஞர் நாட்டின் அறங்களைப் பாதுகாப்போ ரென்றும், தந்திர வினைஞர் படைகளின் தலைமை வகிப்போர் என்றும், பெருங்கணி அரசனது காரியங்கட்குரிய காலங்களையும் நிமித்தங்களையும் கணித்துரைப்போன் என்றும் அறிக. இவரெல்லாம், அரசனது மந்திராலோசனைக்கு உரியவராவர். செங்குட்டுவனது தரைப்படைக்குத் தலைமை வகித்த வீரன், வில்லவன் கோதை என்பான். இவனே செங்குட்டுவனது வடயாத்திரையில் அவனுடைய சேனைகளை நடத்திச் சென்று ஆரிய வரசருடன் நிகழ்ந்த பெரும்போரில் வெற்றி பெற்றவன்; "வில்லவன் கோதையோடு வென்று வினைமுடித்த—பல்வேற்றானைப் படை" என்றார் இளங்கோவடிகளும். இவனைப் போலவே தேச வருவாயின் காரியங்களுக்குத் தலைமையை வகித்த அமைச்சன், அழும்பில் வேள் என்பவன். இவன் அழும்பில் எனப்படும் வளம் படைத்த நாட்டின் தலைவன். இவனுக்கு 'வானவிறல் வேள்' என்ற பெயரும் வழங்கியது. இவ்வமைச்சன் செங்குட்டுவற்குச் சமயோசிதமாகச் சூழ்ச்சி யுரைக்க வல்லனாயிருந்தான். இனி, நம் வேந்தனது தூதுவருள்ளே தலைமை வகித்தவன் சஞ்சயன் என்றும், இவனுக்கு அடுத்தபடியிருந்தவன் நீலனென்றும் தெரிகின்றது. இவர்களின் கீழடங்கிய தூதுவ ரெல்லாம் தம்மரசனிடமிருந்து வேற்றரசரிடம் அரசியற் செய்திகளை அறிவித்து வருதற்குரியர். அன்றியும் யுத்தத்திற்கு அரசனுடன் சென்று அதற்கு வேண்டிய காரியங்களை நிர்வகிக்கவும் வல்லவர். இன்னோர் அரசன் திருமுன்பு அடுத்தடுத்துச் சென்று வருவோ ராதலால் சட்டையும் தலைப்பாகையுந் தவறாது தரித்திருப்பர். இவரைச் கஞ்சுக முதல்வர் எனவும் வழங்குவர். "சஞ்சயன் முதலாத் தலைக்கீடு பெற்ற—கஞ்சுக முதல்வரீரைஞ் ஞாற்றுவர்" எனத் தம் தமையனுக் கிருந்த தூதுவரின் தொகையளவை இளங்கோவடிகள் குறித்தல் காண்க. இனிச்

சாரண ரென்போர் ஒற்றர்க ளாவர். இன்னோர், இக் காலத்துப்போலவே, முற்காலத்தும் அரசர்க்குக் கண் போன்று விளங்கியவர். செங்குட்டுவனுடைய ஒற்றர் கள் அந்நிய நாடெங்கும் சஞ்சரித்து வந்தன ரென்றும், அவ்வாறே வேற்றரச ரொற்றர்களும் பெருவீரனை நம் சேரனது நாட்செய்திகளைத் தெரிதற்பொருட்டு வஞ்சி மாநகரில் மறைந்து வாழ்ந்துவந்தன ரென்றும் சொல்லப்பட்டுள்ளன. மேற் கூறியவர்களன்றிக் கரணத் தியலவர் (கணக்கர்), கரும விதிகள் (ஆணை நிறைவேற் றும் அதிகாரிகள்), கனகச் சுற்றம் (பண்டாரம் காப்போர்), கடை.காப்பாளர் (அரண்மனை காவலர்), நகர மாந்தர், படைத் தலைவர், யானை வீரர், குதிரை வீரர் எனப்பட்ட எண்பேராயத்தாரும் செங்குட்டுவன் அரசியலில் தலைமை பூண்டிருந்தனர்.

செங்குட்டுவனது அரசியல் முத்திரையானது வில், கயல், புலி என்ற மூன்றும் அமைந்த தோர் இலாஞ்சனை யாகும். இதனைத் "தென்றமிழ் நன்னாட்டுச் செழுவிற் கயற்புலி, மண்டலை யேற்ற வரைக" என்பத னால் அறிக. சோழ பாண்டியரின் அடையாளங்களாகிய புலியையும் மீனையும் தனக்குரிய வில்லோடு சேர்த்து நம் சேரன் இலச்சினையாகக் கொண்டிருந்ததை நோக்கு மிடத்து, அக்காலத்துத் தமிழ் வேந்தருள் இவனே தலைமை வகித்தவ னென்பது புலப்படுகின்றது. இவ் வாறே, இவ்வேந்தன் சோழ பாண்டியர்க்கும் மேம் பட்டவன் என இளங்கோ வடிகள் வேறிடங்களினும் கூறுவர்.

செங்குட்டுவன் அத்தாணி மண்டபத்தை அடைந்து அமைச்சர் முதலியவருடன் மந்திராலோசனை புரியும் போது, அவனுடைய கோப்பெருந் தேவியும் (இளங்கோ வேண்மாள்) உடன் வீற்றிருந்து தன்னபிப் பிராயத்தைத் தடை யின்றி வெளியிடுதற்கு உரியவளா யிருந்தனள். அரசன் தன் பெருந்தேவியுடன் அத் தாணிக்கு வருமிடையிலே, அரண்மனையிலுள்ள

அரங்குகளிற் கூத்தர்கள் நிகழ்த்தும் அழகிய ஆட்டங் களைக் கண்டு மகிழ்வது வழக்கம். செங்குட்டுவனது ஆஸ்தானக் கூத்தரிற் சாக்கையர் என்போர் சிறந்தவ ராகக் காணப்படுகின்றனர். இச்சாக்கையர் என்ற கூத்த வகுப்பார் பிற்காலத்தும் சோழர் காலங்களில் விளங்கிய தோடு மலைநாடுகளில் தம் பழைய தொழிலையே இன்றும் கைக்கொண்டு நடத்தி வருதலும் அறியத்தக்கது. அரச னது ஆஸ்தானத் தலைமைக் கூத்தன் 'கூத்துள்படுவோன்' எனப்படுவன்.

நம் சேரர் பெருமானுக்கு அடங்கியிருந்த அரசர் கள் தத்தம் திறைகளைக் கொண்டுவந்து தலைநகர்ப் பெரிய பண்டாரத்திற் சேர்க்குங் காலம் விடியற் காலையாகும். அங்ஙனம் திறை கொணரும்படி அரண்மனையுள் முரசம் அறையப்பட்டு வந்த தென்று தெரிகின்றது; "ஞாலங் காவலர் நாட்டிறை பயிருங், காலை முரசங் கடைமுகத் தெழுதலும்" என்பர் இளங்கோ வடிகள்.

அரசனது பிறந்த நாளானது நகரத்தாரால் ஆண்டு தோறும் ஒரு புண்ணிய தினமாகக் கருதிக் கொண் டாடப்படும். இப்பிறந்தநாள் பெருநாள் எனவும் பெருமங்கலம் எனவும் வழங்கும். இக்காலத்தே, அரசன் உயிர்களிடங் காட்டுங் கருணைக்கு அறிகுறியாக மங்கல வண்ணமாக வெள்ளணி அணிந்து சிறைப் பட்டவரை யெல்லாம் விடுவிப்பதும், இரவலர்க்கும் புலவர்க்கும் வேண்டியவாறு அளிப்பதும், தன் தானை வீரர்களைத் தக்கபடி கௌரவிப்பதும் மரபாகும்.

அரசன் யுத்த யாத்திரையாகப் புறப்படு முன்னர்த் தன் படைத் தலைவர்க்கும் சேனைகட்கும் பெருவிருந்து செய்து அவர்களை மகிழ்விப்பதும் மரபாகும். இதனைப் 'பெருஞ் சோற்றுநிலை' என்பர் தொல்காப்பியர். அஃதா வது 'வேந்தன் போர் தலைக்கொண்ட பிற்றை ஞான்று போர் குறித்த படையாளருந் தானும் உடனுண்பான் போல வந்து ஒரு முகமன் செய்தற்குத் தானே பிண்

டித்து வைத்த உண்டியைக் கொடுத்தல்' என்பர் நச்சினார்க்கினியர்.

குறிப்புரை

"சினமிகு தானை . . . அனையேம்": சினம் மிக்க சேனையினையுடைய சேரன் மேல் கடலின்கண் பொன்னைத் தரும் கலங்களைச் செலுத்திய அவ்விடத்துப் பிறருடைய மரக்கலங்கள் போகமாட்டாத அத்தன்மையை யுடையேம். வானவன் – சேரன். பொலம் – பொன். எண்பேராயம் – அறிஞர் எண்மர் அடங்கிய கூட்டம்.

"தென்றமிழ் நன்னாட்டுச் செழுவிற் கயற்புலி, மண்டலை யேற்ற வரைக"—தென் திசைக்கண் உள்ள நல்ல வளமிக்க தமிழ் நாட்டு வில்லும் கயலும் புலியுமாகிய இலச்சினைகளை தம்மிடத்தே கொண்டுள்ள ஓலைகளை வரைந்தனுப்புக. மண் + தலை = மண்டலை; மண் – இலச்சினை; தலை, ஏழனுருபு.

வினாக்கள்

1. மாறோக்கத்து நப்பசலையார் என்பார் யார்? அவர் வாயிலாக நாம் குட்டுவனைப்பற்றி அறிவது யாது?

2. ஐம்பெருங்குழு எண்பேராயம் என்பன யாவை?

3. சாரணர் என்பவர் யாவர்?

4. செங்குட்டுவனது இலச்சினையிலிருந்து அறியப்படும் வரலாற்றுண்மை யாது?

5. குட்டுவனுக்கு மன்னர் திறை செலுத்தும் சமயம் இன்னது என்பதனைச் சான்றுடன் கூறுக.

6. குறிப்பு வரைக: வில்லவன் கோதை, கூத்துள்படுவோன், பெருமங்கலம், பெருஞ்சோற்று நிலை.

பயிற்சி

இப்பாடத்தை ஆதாரமாகக் கொண்டு அக்காலத்து மக்கள் வாழ்க்கையையும் பண்பாட்டையும்பற்றி ஒரு கட்டுரை வரைக.

அருஞ்சொல் அகராதி

பொதுவும் சிறப்பும்

அ

அகுதம் — கேடு, அழிவு
அடங்கல் — எல்லாம், முழுவதும்
அண்டம்—உலகம்
அத்தாணி—ஓலக்க மண்டபம்
அயிர்த்தல்—ஐயுறுதல்
அரங்கு—நாடக சாலை, மன்றம்
அரசிறை—அரசற்குச் செலுத்தப்படும் வரி
அரற்றுதல்—அழுதல், ஒலித்தல்
அரிவை—பெண்
அலம்வருதல்—வருந்துதல்
அவுணர்—அரக்கர்

ஆ

ஆகடியம்—பரிகாசம், கொடுமை
ஆர்கலி—கடல்
ஆலவட்டம்—விசிறி
ஆழி—கடல், சக்கரம்

இ

இகத்தல்—கடத்தல்
இடைவிராய்—இடையிற் கலந்து
இணர்—பூங்கொத்து
இவர்தல்—ஏறிச் செல்லுதல்
இவுளி—குதிரை

உ

உடற்றும்—வருத்தும்
உடு—விண்மீன்
உரம்—மார்பு
உழந்து—வருந்தி
உள்ளி—வெள்ளைப் பூண்டு
உள்ளுறை—உட்பொருள்
உறழ்வு—பகை, ஒப்பு

ஊ

ஊழி—உலக முடிவுக்காலம்
ஊழ்த்தல்—மலர்தல், பழுத்தல்

எ

எயிறு—பல்
எழு—தூண்

ஏ

ஏகாவலி—ஒற்றைச் சர முத்து மாலை

ஐ

ஐயவி—கடுகு

ஒ

ஒக்கல்—உறவினர்
ஒசிதல்—வருந்துதல், நாணுதல்
ஒரீஇ—நீக்கி
ஒறுத்தல்—தண்டித்தல்

ஓ

ஓலிடுதல்—ஓலமிடுதல்

க

கங்குல்—இரவு
கஞ்சுகம்—சட்டை
கடம்—மதம்
கடாரம்—பர்மா
கணி—கணித்துச் சொல்லுபவன், சோதிடன்
கணிகை—பெண்
கந்து—கட்டுத்தறி
கரவு—மறைவு
கருத்தனம்—பொன், செல்வம்
கருநாண்—காப்புக் கயிறு
கலாவம்—மயிற்றோகை
கலிமா—குதிரை
கலுழ்தல்—வருந்துதல், அழுதல்
கா—சோலை
காலன்—இயமன்
கால்—காற்று
காவதம்—காதம்
கிம்புரி—யானைத் தந்தப் பூண்
கிழி—கிழிக்கப்பட்ட துணி, பண முடிச்சு

கிளவி-சொல்
கீண்டு-கிழித்து
குரிசில்-தலைவன், சிறந்தவன்
குரு-கொப்புளம்
குருகு-நாரை
கூவல்-நீர்நிலை, கிணறு
கேண்மை-நட்பு, உறவு
கொங்கு-பூந்தாது
கோடு-மலைச்சிகரம்
கோடுதல்-வளைதல்
கோதை-கூந்தல்
கோமளம்-அழகு
கோழி-உறையூர்
கோள்-கொள்ளுகை

ச

சாம்புதல்-வாடுதல்
சாவாமருந்து-அமுதம்
சான்று-சாட்சி
சிங்கப்போத்து-ஆண் சிங்கம்
சிமயம்-மலையுச்சி
சிறை-சிறகு
சுங்கம்-இறக்குமதிப் பண்ட வரி
சுவல்-குதிரை
சுவறுதல்-வற்றுதல்
சூக்குமவுடல்-நுண்ணுடல்
செப்பம்-நடுநிலைமை
செவ்வி-ஏற்ற சமயம்
செழியன்-பாண்டியன்
சேறல்-செல்லுதல்

ஞ

ஞாயிறு-சூரியன்

த

தகைத்தல்-தடுத்தல்
தருக்கு-கருவம்
தவிசு-பீடம், மெத்தை
தளி-கோயில்
தாலு-நாவு
தாவா-கெடாமலிருக்க
தாழி-இறந்தோரை அடக்கஞ் செய்து வைக்கும் பெரும் பாண்டம்
தாளாளன்-முயற்சியுடையவன்
தினகரன்-சூரியன்
துகள்-புழுதி
துய்த்தல்-அனுபவித்தல்
துனைதல்-விரைதல்
தெருள்-அறிவின் தெளிவு
தெவ்வர்-பகைவர்
தென்னன்-பாண்டியன்

ந

நவிலுதல்-சொல்லுதல்
நளிர்-குளிர்ச்சி
நறை-மணம், தேன்
நாவாய்-மரக்கலம், கப்பல்
நாறு-முளையா
நாறுதல்-முளைத்தல்
நிவந்து-உயர்ந்து
நின்மல-குற்றமற்ற
நுதல்-நெற்றி
நுதி-நுனி
நெடியோன்-திருமால்

ப

பகர்தல்-விற்றல்
பங்கி-ஆடவர் மயிர்
படிமை-விரதம்
பண்டாரம்-பொக்கிஷம், களஞ்சியம்
பயிர்தல்-அழைத்தல்
பரவை-கடல்
பரிசை-கேடகம்
பருவருதல்-வருந்துதல்
பழு-விலா
பற்றுக்கோடு-ஆதாரம்
பாரித்தல்-அமைத்தல்
பிண்டித்தல்-சமைத்தல், தொகுத்தல்
பிலிற்றுதல்-சிந்துதல்
பிழம்பு-திரட்சி, உடல்
பிறக்கம்-மிகுதி
பீலி-மயிற்றோகை
புரிசை-மதில்
புலர்ந்து-உலர்ந்து
புனல்-நீர்
புனைந்துரை-கற்பனையுரை

புன்கண்—துன்பம்
பேழை—பெட்டி
பொச்சாப்பு—மறதி
பொய்கை—நீர்நிலை
பொருப்பு—மலை
பொலம்—பொன்
பொழில்—சோலை
பொறை—பொறுமை
பொன்றுதல்—அழிதல்
போது—மலரும் பருவத்திலுள்ள அரும்பு
பௌவம்—கடல்

ம

மடவரல்—பெண்
மடி—சோம்பல்
மருப்பு—யானைத் தந்தம்
மல்குதல்—மிக்கிருத்தல்
மறம்—பாவம்
மறை—வேதம்
மாண்ட—மாட்சிமைப்பட்ட
மால்—மயக்கம்
மாற்றம்—சொல்
முகடு—உச்சி
முகமன்—உபசாரம்
முகில்—மேகம்
முந்துறுத்தல்—தோற்றுவித்தல்
முருக்கு—ஒரு மர வகை
மேவலர்—பகைவர்
மேவார்—பகைவர்
மேவுதல்—பொருந்துதல்

ய

யா—கட்டு

ல

லோசனம்—கண்

வ

வங்கம்—மரக்கலம்
வஞ்சி—ஒரு கொடி, பெண்
வலம்—வெற்றி
வறங்கூர்தல்—வறட்சி மிகுதல்
வாகுவலயம்—தோள்வளை
வாரிதி—கடல்
வாலறிவன்—மெய்யுணர்வினையுடைய கடவுள்
விசும்பு—வானம்
விசையன்—வெற்றி பெற்றவன்
விட்புலம்—வானுலகு
வியத்தகு—வியக்கத்தக்க, ஆச்சரியப் படத்தக்க
வியன்—அகன்ற
விரவல்—கலத்தல்
விரை—மணம்
விழவு—விழா
விறல்—வெற்றி
வீறுபாடு—வீரம்
வெகுண்டார்—சினந்தார்
வெகுளி—சினம்
வெதிர்—மூங்கில்
வென்றி—வெற்றி
வேகும்பம்—சுடுகாடு
வேசறவு—மனச்சோர்வு